77

# பிரயாணக் கட்டுரைகள்



செட்டியார்

குமரிமலர்

# பிரயாணக் கட்டுரைகள்

ஏ. கே. செட்டியார்

[*Approved by the Text-Book Committee, Madras for Class use - Non - detailed study in Secondary and High Schools including Training Schools-Vide page-29 of the Supplement to Part 1-B to the Fort St. George Gazette No. 18-C dated 4th May, 1955.*]

குமரி மலர் காரியாலயம்
ஆழ்வார்பேட்டை - சென்னை-18

ஐந்தாம் பதிப்பு
29 - 5 - 1957

விலை
0 - 12 - 0

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிரயாணம் செய்யுங்கள் | 1 |
| 2. | ரயில் பிரயாணம் | 6 |
| 3. | திருடர்கள் ஜாக்கிரதை! | 11 |
| 4. | சென்னைக்கு வடக்கே | 16 |
| 5. | வடநாட்டுப் பிரயாணம் | 27 |
| 6. | ஜயப்பூர் வழியாக | 37 |
| 7. | பம்பாயில் கண்டவை | 42 |
| 8. | எலிபெண்டா | 45 |
| 9. | ராஜ்கோட் | 50 |
| 10. | பூரி-ஜகந்நாதம் | 56 |
| 11. | பீஜப்பூர் | 61 |
| 12. | கோவா | 67 |
| 13. | அதிசயமான ஊற்று | 71 |
| 14. | செஞ்சி | 76 |
| 15. | திருவண்ணாமலை | 81 |
| 16. | புதுச்சேரி | 86 |
| 17. | தரங்கம்பாடி | 90 |
| 18. | குமரி முனை | 93 |

# பிரயாணம் செய்யுங்கள்

திருவண்ணுமலையில், ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று, 'சமுத்திரத்தைப் பார்க்காத மாணவர்கள் கைகளை உயர்த்துங்கள்' என்ருல் பாதிப்பேர் கைகளை உயர்த்துவார்கள். வேதாரண்யத்திலே, ஒரு பள்ளிக்கூடத்திற்குச் சென்று, 'மலையைப் பார்க்காத மாணவர்கள் எல்லாம் கைகளை உயர்த்துங்கள்' என்ருல் பாதிப்பேருக்குமேல் கைகளை உயர்த்துவார்கள். இவ்வாறு சமுத்திரத்தையும் மலையையும் பாராத நிலையிலே இருக்கிருர்கள் நமது எதிர்கால தேசமக்கள். ரயிலையோ டிராம் வண்டியையோ பார்க்காதவர்களைப்பற்றி இங்கு குறிப்பிடவில்லை.

"நான் இந்த ஊரில் பத்துவருஷ காலமாக வேலை பார்க்கிறேன்; வீடுண்டு; ஆபீசுண்டு; வேறென்றும் எனக்குத் தெரியாது. அடுத்த வீட்டுக்காரர் யார் என்று கூட எனக்குத் தெரியாது" என்று பெருமையடித்துக் கொள்ளுபவர்களும் நமது நாட்டில் இருக்கிருர்கள்.

பர்மா, மலேயா முதலிய அயல் நாடுகளுக்குச் செல்லும் தமிழர்கள், அந்நாடுகளின் பெருமைகளைப் பல மடங்காகப் போற்றிப் புகழ்வார்கள். "ஆகா, ரங்கூன் வீதிகள் எவ்வளவு அழகாக இருக்கும்! சிங்கப்பூரில் கண் மூடிக்கண்திறப்பதற்குள் எத்தனை ஆயிரம் மோட்டார்கள் வீதிச் சந்திப்புக்களிலே காணப்படும்!" என்றெல்லாம் கூறுவார்கள். இத்தமிழர்களில் பெரும்பாலோருக்குத் தமிழ் நாட்டின் பேரழகும், அதன் பெருமைகளும் தெரியாது; தெரிந்துகொள்ளவும் விருப்பமிராது.

உணவுச்சாலை வேலைக்காரப் பையன்களுக்கு ஊர்கள் சுற்றிப் பார்ப்பதிலே அளவுகடந்த ஆர்வம் உண்டு. இன்று ஒரு பையன் சென்னையில் வேலைசெய்வான். அடுத்த மாதம் அவனை பம்பாயில் பார்க்கலாம். சில மாதங்கள் கழித்து, "என்ன சார் சௌக்கியமா?" என்று அதே பையன் கல்கத்தாவிலே நம்மைக் கேட்பான். பிரயாணம் செய்வதற்குப் பொருள் வசதியில்லாவிட்டால் பிரயாணச் சீட்டு இல்லாமற்கூட ரயிலில் பிரயாணம் செய்வான். எலுமிச்சம் பழத்தின்மீது ஓர் எறும்பை விட்டால், அது சுற்றிக்கொண்டு மீண்டும் பழைய இடத்திற்கே வந்துவிடுவதாக நாம் பூகோளத்தில் படிக்கிறோம். அதேபோல இந்த உணவுச்சாலை வேலைக்காரப்பையனும் சில வருஷங்கள் பல இடங்களில் சுற்றி, மீண்டும் தன் ஊருக்கே வந்துவிடுகிறான்.

தல யாத்திரை செய்வது நமது நாட்டில் தொன்று தொட்ட வழக்கம். யாத்திரை வாசிகளுக்குச் சௌகரியம் செய்வதற்காக, எண்ணற்ற சத்திரங்களும் மடங்களும் நமது நாட்டில் பல இடங்களில் கட்டிவைத்தார்கள். பண்டைநாளில், வேகமான போக்குவரத்துச்சாதனங்கள் ஒன்றும் இல்லாதிருந்த நாளில், நமது மூதாதையர் மாதக் கணக்கிலும் வருடக் கணக்கிலும் யாத்திரை செய்தார்கள்; க்ஷேத்திரங்களை மட்டுமின்றி, நாட்டுப்புறங்களின் இயற்கை அழகுகளையும், சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களையும் பார்த்து மகிழ்ந்தார்கள்; காடுகளையும் மலைகளையும் கண்டுகளித்தார்கள். யாத்திரையால் உண்டாகும் எல்லா நலன்களையும் அவர்கள் பெற்றார்கள்.

வேகமான போக்குவரத்துச் சாதனங்கள் அமைக்கப் பெற்றிருக்கும் இந்நாளில், தல யாத்திரை செய்வோர் தொகை குறைவு. இன்று காலையில் சென்னையிலிருந்து

திருப்பதிக்குப் புறப்பட்டால், மறுநாள்காலை மீண்டும் சென்னைக்குத் திரும்பிவிடவேண்டும் என்று நினைக்கின்ற காலம் இது. யாத்திரை செய்வோர் நேராக, குறிப்பிட்ட ஒரு க்ஷேத்திரத்திற்குச் செல்வார்கள். ஆனால் அதற்குப் பக்கத்திலுள்ள சரித்திரப் பிரசித்தமான இடத்திற்குச் செல்லமாட்டார்கள், உதாரணமாக, வருடந்தோறும் பதினாயிரக் கணக்கான யாத்திரிகர்கள் திருப்பதிக்குச் செல்கிறார்கள். இவர்களில் நூற்றுக்கு ஒருவர்கூட, திருப்பதிக்குப் பத்துமைல் தூரத்திலுள்ள சந்திரகிரி என்ற சரித்திரப் பிரசித்திபெற்ற இடத்திற்குச் செல்வதில்லை.

தமிழர் தம்மைத் தாமே மதியாதிருப்பதற்குக் காரணம், தமிழ்நாட்டின் பெருமைகளை உணராததுதான்.

> நீலத் திரைக்கடல் ஓரத்திலே நின்று
> நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
> மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
> மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு

என்றார் பாரதியார். தமிழனுக்குத் தமிழைவிட இனிமை வேறொன்றும் இல்லை. சொந்த நாட்டைச் சுற்றிப்பார்க்காத தமிழர்களுக்குத் தமிழ் நாட்டைப்பற்றிப் பேசத் தகுதியே இல்லை. தனது நாட்டையறியாத ஒருவன், வெளிநாடு செல்வதில் பயனொன்றுமில்லை.

ஜப்பானில், பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சிறந்த வசதிகள் செய்திருந்தார்கள். பத்து வருடம் கல்வி பயிலும் மாணவனோ அல்லது மாணவியோ, தன் பயிற்சி முடிவதற்குள் நாட்டில் பெரும்பாலான இடங்களைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றனர். ரயில்வேக் கம்பெனியார் கட்டண விஷயத்தில் விசேஷ சலுகை காட்டினர். மாணவர்களின் பிரயாணச் செலவில்,

அரசாங்கம் ஒரு பகுதியையும், பள்ளிக்கூடம் ஒரு பகுதியையும் ஏற்றுக்கொண்டன. மாணவர் கையிலிருந்து செலவானது மிகச் சொற்பமான தொகைதான்.

அமெரிக்காவில், "முதலில் அமெரிக்காவைப் பார்" என்று ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார்கள். யாத்திரை செய்வோருக்குத் தனி ரயில்கள் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன. இந்த ரயில்களில் பிரயாணம் செய்வதானல் சாதாரணக் கட்டணத்தில் மூன்றில் ஒரு பங்குதான் கட்டணம். அமெரிக்காவின் இயற்கை வனப்புக்களையும், பிரமாண்டமான தொழிற்சாலைகளையும் திரைப்படமாகத் தயாரித்து, அந்நாட்டில் உள்ள பதினுயிரக் கணக்கான திரைப்படக் காட்சிசாலைகளில் காட்டினர். இப்படத்தைப் பார்க்கும் மக்களுக்குப் பிரயாணம் செய்யவேண்டும் என்ற ஆர்வம் அதிகமானது.

அயர்லாந்திலும், "முதலில் அயர்லாந்தைப் பார்" என்ற இயக்கம் நடைபெற்றது. ஹாலந்தில் பள்ளிக்கூட மாணவர்கள், பிரயாணத்துக்கு வேண்டிய சாமான்களை மூட்டைகட்டித் தங்கள் முதுகில் சுமந்துகொண்டு நடந்தோ அல்லது சைகிளிலோ பிரயாணம்செய்தார்கள். இந்த யாத்திரை வாசிகளான மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் தங்குவதற்கும் உண்பதற்கும் பல ஊர்களில் தனி இடங்கள் ஏற்படுத்தியிருந்தார்கள்.

ஜெர்மனியில் மாணவர்களுக்கு விசேஷ வசதிகள் இருந்தன. ஆகாய விமானங்களில் இடம் காலியாயிருந்தால், அதிலே மாணவர்கள் மூன்ருவது வகுப்பு ரயில் கட்டணமாகிய குறைந்த கட்டணம் கொடுத்துப் பிரயாணம் செய்யலாம்.

இந்தியா எல்லா வகையிலும் பெரிய நாடு. கோடிக் கணக்கான மக்கள் இந்தியா முழுவதும் சுற்றிப் பார்ப்பது

அசாத்தியமான காரியம். தமிழர் எல்லோரும் இந்தியாவைச் சுற்றிப் பாக்காவிட்டாலும் தமிழ் நாட்டையாவது சுற்றிப் பார்க்க வேண்டும்.

பிரயாணம் செய்வதில் பலருக்கு ஆசை உண்டு. பிரயாணத்தை ரசிப்பவர் சிலர். தலைவிதியை நொந்து கொண்டு பிரயாணம் செய்பவர் பலர். பிரயாணத்தில் விருப்பமுள்ள சிலருக்குப் பணமிராது. பணமும் நேரமும் இருப்பவர்களுக்கு விருப்பம் இராது.

தமிழர் தமிழ் நாட்டை ஒரு முறையாவது சுற்றிப் பார்க்க வேண்டியது அவசியம்.

# ரயில் பிரயாணம்

நமது நாட்டில் பல பணக்காரர்கள் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்கிருர்கள். இவர்களைப் பார்த்து, "நீங்கள் எல்லாம் மூன்ரும் வகுப்பில் பிரயாணம் செய்யலாமா?" என்று கேட்டால், இவர்களில் சிலர், "நான்காவது வகுப்பு ஒன்று இருந்தால் அதில்கூடப். பிரயாணம் செய்வோம்" என்று கூறுகிருர்கள். ஆனல் நான்காவது வகுப்பு ஒன்று இருப்பது இவர்களுக்குத் தெரியாது போலும்!

இந்தோ-சீனவில் ரயில் நான்கு வகுப்புக்கள் உண்டு. நான்காவது வகுப்பு, சாமான் வண்டியைப் போல இருக்கும். அதில் பிராயாணிகள் உட்காருவதற்கு எவ்விதமான ஆசனமும் இராது. கீழே உட்கார வேண்டும்; அல்லது நிற்க வேண்டும். அவ் வண்டிகளில் சில சமயங்களில் கால் நடைகளையும் ஏற்றிச் செல்வார்கள். உலகிலேயே இந்தோ-சீன ரயில்வேக்காரர்கள்தான் "காக்கை குருவி எங்கள் ஜாதி" என்ற கொள்கையை நடைமுறையில் கடைப்பிடித்தனர்.

* * * *

சாதாரணமாக ரயிலில் தாங்க முடியாத பெருங்கூட்டம் என்று நாம் சொல்லுகிரும். ஆனல் நார்வே தேசவாசிகள், ரயிலில் கூட்டம் என்று ஒருபொழுதும் சொல்லுவதே இல்லை. ரயிலில் எத்தனை பேர் உட்காரலாமோ அத்தனை பேருக்குத்தான் பிரயாணச் சீட்டு கொடுப்பார்கள்; அத்தனை பேர்தான் உட்கார முடியும். நார்வேயில் எந்த வகுப்புப் பிரயாணியும் இரண்டு பிரயாணச் சீட்டுகள் வாங்கவேண்டும். ஒன்று பிரயாணம்

செய்வதற்குரியது; மற்ருென்று எந்த இடத்தில் உட்காருவது என்பதற்காக உள்ள பிரத்தியேகப் பதிவுக்கானது. பிரத்தியேகமான பதிவுச் சீட்டு இல்லாமல் யாரும் பிரயாணம் செய்ய முடியாது. மூன்ருவது வகுப்பு பிரத்தியேகப் பதிவுச் சீட்டிலும் கூட வண்டியின் எண், உட்கார வேண்டிய இடத்தின் எண் ஆகியவை காணப்படும். ஒவ்வொரு பிரயாணியும் தனக்கென்று குறிப்பிட்ட இடத்தில்தான் அமரவேண்டும்.

*                    *                    *                    *

இந்தியாவில் கவர்னர்களும், உயர்தர அதிகாரிகளும் ரயிலில் பிரத்தியேகமாக அமைக்கப் பெற்ற தனி வண்டிகளில் பிரயாணம் செய்வது வழக்கம். இந்த அதிஷ்டம் நமக்கு நம் நாட்டில் இல்லாவிட்டாலும், தென்னுப்பிரிக்காவில் இருக்கிறது. தென்னுப்பிரிக்காவில் மிக வேகமான ரயில்கள் மணிக்கு 30 மைல் தூரந்தான் செல்லும். அந்த அற்புத ரயில்களிலே வெள்ளையரல்லாதாருக்கு எல்லா வகுப்புகளுக்கும் பிரத்தியேகமான பெட்டிகள் ஒதுக்கப் பெற்றிருக்கும். அந்தத் தனி கௌரவத்திற்கு அதிகக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. சாதாரணக் கட்டணமே போதுமானது.

*                    *                    *                    *

'காமிரா ஸ்பெஷலைப்' பற்றிக் கேள்விம்பட்டிருக்கிறீர்களா ? அந்த ரயில் அமெரிக்காவில்தான் உண்டு. விடுமுறை தினங்களில், இயற்கை வனப்புள்ள இடங்களுக்கு அந்தக் 'காமிரா ஸ்பெஷல்' செல்லும். புகைப் படக்கருவி (காமிரா) வைத்திருப்பவர்களே அதில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப் பெறுவார்கள். அதில் பிரயாணம் செய்வதற்குக் கட்டணம் மிகச் சொற்பம். ரயிலிலேயே ஒரு பெட்டியில் புகைப்படச் சாமான்கள் விற்கப் பெறும். புகைப்படங்களை உருத் துலக்குவதற்கு(டெவலப்)

இருட்டரையும் அந்த ரயிலிலேயே உண்டு. 'காமிரா ஸ்பெஷலி'ல் கார்டு முதல் கரி தள்ளுவர் வரையில் கையில் புகைப்படக் கருவி வைத்துக்கொண்டு படமெடுப் பார்கள். அந்த ரயிலில் பிரயாணச் சீட்டு இல்லாமல் கூடப் பிரயாணம் செய்யலாம். ஆனால் கையில் புகைப் படக்கருவி இல்லாமல் பிரயாணம் செய்யமுடியாது.

* * * *

இங்கிலாந்துதேசத்து ரயில்களில் மூன்றாவது வகுப் புக்கூட மிகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும். அந்த வண்டிகளில் அந்த நாட்டின் அழகிய காட்சிகளடங் கிய புகைப்படங்களை வைத்திருப்பார்கள். ஆனால் நமது நாட்டு ரயில் நிலையங்களில் தப்பித் தவறிப் பார்த்தால், "திருடர்கள் ஜாக்கிரதை", "துப்பு இங்கே" என்பன போன்ற அறிவிப்புப் பலகைகளைத்தான் காண்போம்.

* * * *

ரயில்களிலே பல விதங்கள் உண்டு. அவற்றிலே மலை ரயில் ஒன்று. பினங்கு, ஹாங்காங், புன்சல் (அட்லாண்டிக் சமுத்திரத்தில் போர்த்துகீசியர் வசமுள்ள மதீராத் தீவின் தலைநகர்) முதலிய இடங்களில் அந்த ரயில்களைப் பார்க்கலாம். அந்த ரயில்களில் பிரயாணம் செய்வோர், வழியிலுள்ள பூங்கொத்துக்களையும், சில சமயங்களில் பழங்களையுங்கூட வண்டியில் இருந்தபடியே பரித்துச் செல்வர்.

* * * *

பூமிக்குக் கீழே ஓடும் ரயில்கள் மற்றொரு வகை. லண்டன், நியூயார்க், பாரிஸ், பெர்லின், மாஸ்கோ, டோக்கியோ போன்ற நகரங்களில் அவற்றை அமைத் திருந்தனர். லண்டனில் ஜெர்மன் விமானங்கள் குண்டு வீசியபோது லட்சக்கணக்கான மக்கள் பூமிக்குக் கீழுள்ள அந்த ரயில் பாதைகளில்தான் தங்கி உயிர் பிழைத் தனர். பூமிக்குக் கீழுள்ள ரயில்கள் பெரும்பாலும்

வேகமாகச் செல்லும். அவைகளிலே அதிவேகமாக ஓடுபவை அமெரிக்க ரயில்களே, பூமிக்குக் கீழ் 60 மைல் வேகத்திலும் பூமியின் மேல் 80 மைல் வேகத்திலும் அமெரிக்க ரயில்கள் சென்றன.

* * * *

பூமிக்குக் கீழே ரயில்கள் ஓடுவதைப் போலப் பூமியிலும், பூமிக்கு மேலேயும் ரயில்கள் ஓடின. பூமிக்கு மேலே செல்லும் ரயில்களுக்கு 'எலிவேடட் ரயில்வே' என்று பெயர். நகருக்கு மத்தியிலே வீதியில் இரண்டு அல்லது மூன்று ஆள் உயரத்தில் மைல் கணக்காகப் பாலங் கட்டி அதன் மேலே இந்த ரயில்களை ஓட்டுவார்கள்.

* * * *

ஆகாய ரயில் மற்றொரு வகை. இதனை 'ரோப் ரயில்வே' என்றும் கூறுவர். ஸ்விட்ஸர்லாந்து, ஆஸ்திரியா, ஜப்பான் முதலிய நாடுகளில் இவை சர்வ சாதாரணம். மின்சாரத்தால் இயக்கப்பெறும் இந்த ரயில்கள் மலைக்கு மலை செல்லும். ஒரு மலைக்கும் மற்றொரு மலைக்கும் உள்ள இடைவெளியில் கனத்த இரும்புக் கம்பி கட்டியிருப்பார்கள். இந்தச் சிறிய ஆகாய ரயில் அதில் தொங்கிக்கொண்டிருக்கும். இதில் எட்டு அல்லது பத்துப் பிரயாணிகளே ஏறலாம். ஒரு மலையிலிருந்து மற்றொரு மலைக்குச் செல்லும்போது கீழே பார்த்தால் பயங்கரமாகவும், ஆனால் சந்தோஷமாகவும் இருக்கும்.

* * * *

ஓடுகிற ரயிலிலே நீங்கள் திரைப்படம் பார்த்திருக்கிறீர்களா? லண்டனிலிருந்து ஸ்காட்லாந்து பிரதேசங்களுக்குச் செல்லும் இரவு ரயில்களில் திரைப் படம் காட்டினார்கள். அதற்காகத் தனிப்பெட்டி சேர்த்திருந்தார்கள். ஒரு மணிநேரம் செய்திப்படம், அறிவு வளர்ச்சிக்கான சிறு படங்கள், கேலிச் சித்திரங்கள் முதலியன

காண்பித்துக் கொண்டிருந்தார்கள். இந்த ஓடும் ரயிலில் திரைப்படம் பார்ப்பதற்குக் கட்டணம் முக்கால் ரூபாய் தான்.

*  *  *  *

சமுத்திரத்திலே செல்லும் ரயில்களும் உண்டு. ரயிலில் நாம் ஏறிச் செல்கிறோம். ரயில் கப்பலில் ஏறிக் கொள்ளுகிறது. பாரிசுக்கும் லண்டனுக்கும் இடையே இந்த ரயில்கள் ஓடின. இதில் பிரயாணம் செய்யச் சாதாரணக் கட்டணத்தைப் போல இரு மடங்கு செலுத்த வேண்டும். இந்த ரயில்கள் எஃகினால் அமைக்கப் பெற்றவை. படுக்கைகளுக்குக் கீழே நிறைய 'வில்' வைத்திருந்தார்கள். இரவு ஒன்பது மணிக்கு பாரீசை விட்டு புறப்பட்டால் மறுநாள் காலை 9 மணிக்கு லண்டனை அடைவோம். ஆனால் இருபது மைலுக்கு மேலுள்ள இங்கிலீஷ் கால்வாயில் நமது ரயில் கப்பலிலே பிரயாணம் செய்வதை நாம் பார்ப்பதே யில்லை!

# திருடர்கள் ஜாக்கிரதை!

**வீ**ட்டைவிட்டு வெளியே சென்ருல், ஏதாவது ஒரு விளம்பரப் பலகையோ அல்லது அறிவிப்புப் பலகையோ நமது கண்ணில் படாமலிராது. சில பலகைகள் நம்மை மேடையில் நடக்கச் சொல்லி உத்தரவிடும். சில பலகைகள் 'துப்பு இங்கே' என்று சுட்டிக் காட்டும்.

பொதுவாக, உத்தரவு செய்வதைவிட, கேட்டுக்கொள்வதுதான் சிறந்த முறை. பொதுமக்களை, ஒரு காரியத்தைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளும்பொழுது கண்ணியமாகவும், மரியாதையாகவும் கேட்டுக்கொண்டால் நல்லது. அது மட்டுமன்று; எதற்காக அவர்களைக் கேட்டுக்கொள்கிருேமோ, அதற்குரிய காரணத்தையும் கூறினுல், பலன் அதிகமுண்டாகும்.

அமெரிக்கர், அறிவிப்புப் பலகை விஷயத்தில் சில நல்ல முறைகளைக் கையாண்டார்கள். உதாரணமாக,

> இது பள்ளிக்கூடம். தயவு செய்து மோட்டாரை மெதுவாக ஓட்டுங்கள். ஏனென்ருல் நம் குழந்தைகளிடம் நமக்கு அன்பு உண்டு.

என்ற பெரிய அறிவிப்புப் பலகையைப் பார்ப்போம். அதைப் படித்த பின்னரும், ஒருவன் மோட்டாரை வேகமாக ஓட்டினுல் அவனை மனித இனத்தைச் சேர்ந்தவனுகக் கருதமாட்டோம்.

* * *

நியூயார்க்கில் பூமிக்குக் கீழ் ஓடும் ரயில் வண்டிகள் அதிகம். பூமியின் மேல் பாலங்கட்டி அதன் மீதும் ரயில்கள் ஓடுகின்றன. நியூயார்க் வாசிகள், வெயில் காலத்தில்

பூமிக்கு மேலே ஓடும் ரயிலிலும், குளிர்காலத்தில் பூமிக்குக் கீழே செல்லும் ரயிலிலும் பிரயாணம் செய்வார்கள். பனிக்காலத்தில் பூமிக்குக் கீழ் ஓடும் ரயில்களில் பிரயாணம் செய்வது மிகவும் சுகமாய் இருக்கும். அந்த ரயில் கதவுகளைச் சிலர் ஒழுங்காக மூடுவதில்லை. கதவுகள் திறந்திருந்தால், ரயிலுக்குள்ளே குளிர் காற்றுப் புகுந்து விடும். இதற்காக அந்த ரயில்களிலே,

> உள்ளே இருப்பவர்களின் சௌகரியத்தைக் கருதி, இந்தக் கதவுகளை மூடி வைக்க வேண்டுகிறோம்.

என்ற அறிவிப்புப் பலகைகளை மாட்டியிருப்பார்கள்.

* * *

'இன்று ரொக்கம்—நாளை கடன்' என்று நமது நாட்டில் சில பலகாரக் கடைகளில் பார்க்கிறோம். இந்தப் பலகைகளைத் தாங்கள் மிக்க புத்திசாலித்தனத்துடன் போட்டிருப்பதாக அந்தக் கடைக்காரர்கள் கருதுகிறார்கள். இதைவிட 'தயவு செய்து கடன் கேட்காதீர்கள்' என்ற பலகைகள் நல்ல பலனைக் கொடுக்கும். அமெரிக்காவில் சிறிய பட்டணமொன்றில் ஒரு சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றேன். அங்கு,

> தயவு செய்து கடன் கேட்காதீர்கள். ஏனெனில், நாங்கள் மிகவும் ஏழைகள்.

என்ற பலகை காணப்பட்டது. இம்மாதிரியான முறையை நம் நாட்டிலும் கையாளலாம். ஆனால் ஒன்று; இந்த அறிவிப்புப் பலகையைப் படித்த பின்னரும் கடன் கேட்பவர்களை என்ன செய்வது ?

* * *

மேலை நாடுகளிலே குளிப்பது என்பது சாதாரணமான காரியமல்ல. எல்லோரும் தினந்தோறும் குளிப்பது என்பது இயலாத காரியம். சில உணவுச்சாலைகளில்

குளிப்பதற்காக ஒரு ரூபாய் வரை கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும். சில உணவுச் சாலைகளிலும் மாணவர் விடுதிகளிலும், இலவசமாய்க் குளிப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் குளிக்கும் தொட்டியைக் குளிப்பவர்களே சுத்தம் செய்து கொள்ள வேண்டும். பலர் குளித்துவிட்டு, தங்கள் வேலை முடிந்ததும், தொட்டியைச் சுத்தம் செய்யாமலே போய்விடுவார்கள். இதற்காக, குளிக்கும் அறையில் கீழ்க்காணுமாறு எழுதியுள்ள ஒரு பலகை மாட்டியிருக்கும்:

> குளிக்க வரும்போது தொட்டி எப்படியிருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவ்விதமாகவே அதை வைத்துச் செல்லுங்கள்.

* * *

அமெரிக்காவின் தென்பகுதி நாடுகளில் உள்ள அமெரிக்கர்களில் சிலர் கண்ட இடங்களிலெல்லாம் எச்சில் துப்பும் பழக்கமுடையவர்கள்; அப்பகுதியில் ஒரு சிற்றுண்டிச்சாலையில்,

> நீங்கள் வீட்டில் எச்சல் துப்பும் பழக்கமுடையவர்களாயிருந்தால், இந்த இடத்திலும் எச்சல் துப்பலாம். வீட்டிலிருப்பதாகவே நீங்கள் எண்ண வேண்டுமென்பது எங்கள் ஆசை.

என்ற பலகை மாட்டியிருந்தது. பலகையை மட்டும் நான் பார்க்கவில்லை; பலகையில் கண்டபடி ஆனந்தமாக எச்சில் துப்பிக்கொண்டிருந்த நாகரிக மனிதர்களையும் அங்கே கண்டேன்!

* * *

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் நகருக்கு மத்தியில் சிறிய பெட்டிக்கடை ஒன்றிருந்தது. ஜனங்கள் அந்தக் கடையில் சாமான்கள் வாங்குவது மட்டுமல்லாமல், தங்களுக்

குள்ள சந்தேகங்களையோ, தங்களுக்கு வேண்டிய விவரங்களையோ அந்தக் கடைக்காரனைக் கேட்டுத் தெரிந்து கொள்வதும் வழக்கம். சிறிது காலம் வரை அந்தக் கடைக்காரன் மிகவும் பொறுமையாகக் கேட்டவர்களுக்கெல்லாம் விவரங்கள் கூறி வந்தான்; ஆனால் வரவர ஜனங்களின் தொந்தரவை அவனால் தாங்க முடியவில்லை. எனவே,

> தயவு செய்து எங்களை ஒரு விவரமும் கேளாதீர்கள். எங்களுக்கு ஏதாவது தெரிந்திருந்தால் நாங்கள் இந்த இடத்திலா இருப்போம்!

என்ற பெரிய பலகையைக் கடையில் தொங்கவிட்டான். இதைப் பார்த்த ஜனங்கள் பக்கத்துக் கடைக்காரனிடம் விவரம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள்!

* * *

அமெரிக்காவின் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு சிற்றூரில் சிறிய பலகாரக்கடை ஒன்றிருந்தது. அங்குள்ள மேசைகள் ஒவ்வொன்றிலும் ஓர் அச்சடித்த காகிதத்தை வைத்திருந்தார்கள். அதன் வாசகம்:

> வேலைக்காரப் பெண்கள் புன்முறுவலோடு பரிமாறுவிட்டால் நீங்கள் சாப்பிட்டது எங்கள் செலவாயிருக்கட்டும்.

என்று காணப்படும். மாணவர்கள் அங்கு சென்று வேலைக்காரப் பெண்களோடு, எவ்வளவு கோபம் வரும்படியாகப் பேசினாலும் அப் பெண்கள் புன்முறுவல் செய்துகொண்டுதான் இருப்பார்கள்.

* * *

என் நண்பர் ஒருவர் தென்னிந்திய ரயில் நிலையத்திலுள்ள ஓர் உணவுச் சாலைக்குச் சென்றார். இராத்திரி பன்னிரண்டு மணி. ஒரு கோப்பை காப்பி கேட்டார். ஆறிப்போன காப்பிதான் அவருக்குக் கிடைத்தது.

அந்தக் காப்பியைத் திருப்பிக் கொடுத்துவிட்டு சூடான காப்பி வேண்டுமென்று கேட்டார். ஆனால் வேலைக்காரர் அதே காப்பியை, 'சூடான காப்பி' என்று கொடுத்தார்.

நண்பர் "காப்பி சூடாக இல்லை" என்று கூறினர்.

அதற்கு அந்த வேலைக்காரர், "இதுதான் சூடான காப்பி. வேண்டுமானால் சாப்பிடுங்கள் ; இல்லாவிட்டால் போங்கள்" என்று சீறிவிழுந்தார்.

நண்பருக்குக் கோபம் வந்துவிட்டது. சுற்று முற்றும் பார்த்தார்.

மரியாதையாகப் பரிமாறுவதே எங்கள் நோக்கம்.

என்று ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட பலகையொன்றை அங்கு கண்டார். பக்கத்திலிருந்த நாற்காலியை இழுத்து, அதன் மீது ஏறி நின்று அந்தப் பலகையைக் கழற்றி, அதைப் பின்புறமாகத் திருப்பி மாட்டிவிட்டார்.

அதைக் கவனித்துக்கொண்டிருந்த நிர்வாகி, "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" என்றார்.

அதற்கு என் நண்பர், "இந்தப் பலகையில் காணப் பெறுவதற்கும் இங்கு நடப்பதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை" என்று கூறினர்.

* * * *

தலைமுறை தலைமுறையாக, நாம் மறக்காமல், அல்லது நம்மை மறக்கவிடாமல் ஒரு பலகை முக்கியமான ரயில் நிலையங்களிலெல்லாம் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கிறது. நாம் யாரைப் பார்த்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், எதற்காக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றெல்லாம் அப்பலகை நமக்கு அறிவுறுத்துகிறது.

# சென்னைக்கு வடக்கே

யுத்த காலத்தில் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டம். ஆனால் பிரயாணத்தினால் உண்டாகும் இன்பத்தில் இக் கஷ்டத்தை நாம் மறந்து விடுகிறோம்.

'பிரயாணத்துக்கு முன், பிரயாணம் செய்ய வேண்டுவது அவசியமா என்பதை யோசியுங்கள். அவசியமானால் பிரயாணம் செய்யுங்கள். அப்படிப் பிரயாணம் செய்யும் போது குறைந்த சாமான்களோடு பிரயாணம் செய்யுங்கள்' என்று ரயில்வேக் கம்பெனிக்காரர்கள் யுத்த காலத்தில் நமக்கு உபதேசம் செய்தார்கள். அது மட்டுமல்ல; சில ரயில் பாதைகளை எடுத்தார்கள்; ஓடும் ரயில்களின் எண்ணிக்கையைக் குறைத்தார்கள். நினைத்தபொழுதெல்லாம் கட்டணத்தை உயர்த்தினார்கள்; பிரத்தியேகமாகப் பதிவு செய்வது கிடையாது என்றார்கள்; சில மகாநாடுகளுக்கும் சிவராத்திரிபோன்ற உற்சவங்களுக்கும் பிரயாணச் சீட்டுக்கொடுப்பதை நிறுத்தினார்கள். ஆனால் பிரயாணிகளை, அதிலும் பிரயாணச் சீட்டில்லாமல் பிரயாணம் செய்பவர்களை நிறுத்த முடியவில்லை. ரயில் வண்டிகள் ஓடிக்கொண்டிருக்கிற வரையில் பிரயாணச் சீட்டில்லாத பிரயாணிகள் பிரயாணம் செய்துகொண்டு தான் இருப்பார்கள்.

விலைவாசிகள் பல மடங்கு உயர்ந்துவிட்டன. வாழ்க்கை நடத்துவது மிகவும் கஷ்டமாயிருக்கிறது என்பதற்காக யாரும் வாழ்க்கை நடத்தாமலிருக்கிறார்களா? அதைப் போலவே, ரயில் கட்டணம் எத்தனை மடங்கு உயர்ந்தாலும், சாமான் வண்டியில் போக நேர்ந்தாலும்,

பிரயாணிகள் பிரயாணம் செய்துகொண்டுதான் இருப்பார்கள். பிரயாணத்தில் எவ்வளவுக்கெவ்வளவு சிரமம் உண்டாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதில் இன்பம் இருக்கிறது.

ஒரு சமயம் சென்னையிலிருந்து கல்கத்தாவுக்கு ரயிலில் பிரயாணம் செய்தேன். யுத்தத்தின் காரணமாக ரயில்களில் பெரும் மாறுதல்கள் தோன்றியிருந்தன. அதுவரையில், வந்து சேருகிற ரயில்கள்தான் தாமதமாக வருவது வழக்கம். அப்போது சில ரயில் வண்டிகள் புறப்படும்பொழுது தாமதித்துப் புறப்பட்டன. அந்த ரயில்கள் தாமதித்துப் புறப்படுவதுகூட ஆச்சரியமல்ல; தாமதித்துப் புறப்படும்போது, பிரயாணிகள் புதிதாக வந்து ரயிலில் ஏறிக்கொண்டேயிருந்ததுதான் ஆச்சரியம்!

இந்திய ரயில்களைப் பற்றி, அமெரிக்கர் ஒருவர் சில வருடங்களுக்கு முன் தமது அனுபவத்தை எழுதினார். அவரும், அவரைச் சேர்ந்த சிலரும், ஓர் இரவு பிரயாணம் செய்வதற்காக ஒரு பெட்டியைப் பிரத்தியேகமாகப் பதிவு செய்திருந்தார்கள். அன்றிரவு ரயில் புறப்படும் சமயத்தில் அவர்கள் வந்ததால் சாமான் தூக்கிச் சென்ற கூலியாள் தவறுதலாக அவர்களை வேறொரு பெட்டியில் ஏற்றிவிட்டான். ஏற்கெனவே அந்தப் பெட்டியில் இருந்தவர்களும் வந்தவர்களும் சேர்ந்து, இரவு முழுதும் தூங்காமல் கஷ்டப்பட்டனர். ஆனால் அவர்களுக்காகப் பதிவு செய்திருந்த பெட்டி காலியாகவே இருந்தது!

அம்மாதிரியான சம்பவங்கள் யுத்த காலத்தில் நடைபெறவில்லை. எத்தனை படுக்கைகள் இருந்தனவோ, அதற்கதிகமாகவே பிரயாணம் செய்தார்கள். மெத்தையில் படுக்க இடம் கிடைக்காவிட்டால், கீழே படுக்கையை விரித்துப் படுப்பார்கள். கீழே உள்ள 'சுகந்த வாசனை' போதாதென்று, மூட்டைப் பூச்சி, கொசு, கரப்பான்

முதலியவையும் அந்தப்பிரயாணிகளோடு உறவுகொண்டு விடும்.

மெத்தையில் படுப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; கீழே படுப்பவர்களோ புத்திசாலிகள். அதிர்ஷ்டம் எப்போதும் நிலைத்து நிற்பதில்லை. மெத்தையில் படுப்பவர்களுக்கு நிம்மதி என்பதே இராது. சில சமயம் திடீரென்று யாராவது ரயிலில் ஏறுவார்கள்.

"சார், கொஞ்சம் தயவு செய்து இடம் கொடுங்கள்; உட்கார்ந்து கொள்கிறேன்" என்பார்கள்.

மரியாதைக்காகவும், நமது பெருந்தன்மையைக் காண்பிப்பதற்காகவும் நாம் இடம் கொடுப்போம். பிறருக்கு இடம் கொடுப்பதால், உண்டாகும் ஆபத்துக்களை நாம் அப்போது உணர்வதில்லை. 'தான் வருந்திப் பிறர்க்குதவும் தயை பிறந்த நாட்டிலே' பிறந்த நமக்கு அந்நேரம் அந்த எண்ணம் உண்டாவதில்லை. உட்கார்ந்தவரும் சும்மா இருப்பதில்லை. கண்ணை மூடிக்கொண்டே தூங்குவார். சிறிது நேரத்தில் நமது கால்களையே தலையணையாக உபயோகிப்பார்! வலி தாங்காமல் நாம் காலை முடக்கிக்கொண்டால், அரைகுறையாக அவர் படுத்துக் கொள்வார்; சிறிது நேரத்தில் நன்றாய்ப் படுத்துக் கொண்டு அயர்ந்து, தூங்குவார். நாம் உட்காருவதற்குக் கூட அவர் தயவை நாடும் நிலைமையும் ஏற்படலாம். பிறருக்கு இடங் கொடுத்துக் கொண்டேயிருந்தால் நமக்கு இக் கதிதான் நேரும்.

கல்கத்தாவுக்கு என் நண்பர் ஒருவரும் என்னுடன் வருவதாகக் கூறினர். இரண்டு பிரயாணச் சீட்டுக்கள் வாங்கிப் பதிவு செய்யும்படி அவரிடம் கூறினேன். புறப்படும் தினத்தன்று, என் நண்பர் வருவதற்குச் சற்று முன்பாகவே, ரயிலுக்குச் சென்றேன். எனது பெயரையோ அல்லது நண்பரின் பெயரையோ அங்குள்ள பதிவு அறிவிப்புக் காகிதத்தில் காணவில்லை.

ஏமாற்றத்தோடு அலைந்து கொண்டிருந்தேன். ஆனால் என் நண்பர் எங்கள் பெட்டியை விரைவில் கண்டு பிடித்துவிட்டார். பதிவுக் காகிதத்தில் 'மிஸ்டர் அண்டு மிஸஸ்' என்று என் நண்பர் பெயர் காணப்பெற்றது. நானும் அந்தக் காகிதத்தை ஏற்கெனவே பார்த்தேன். ஆனால் 'மிஸ்டர் அண்டு மிஸஸ்' என்றிருந்ததால் மேற்கொண்டு படிக்காமலேயே நான் மற்ற பெட்டிகளைப் பார்க்கப் போய்விட்டேன். அன்றியும் கல்கத்தா வரையில் செல்லும் தம்பதிகளுக்குத் தொந்தரவு கொடுக்க விருப்ப மில்லை; அல்லது அந்தத் தம்பதிகளின் குழந்தைகள் (இருக்குமல்லவா) கொடுக்கும் தொந்தரவை ஏற்றுக் கொள்ளவும் விருப்பமில்லை. இரண்டு பேருக்குப் பதிவு செய்யும்படி நண்பர் கூறியதால், அங்குள்ள குமாஸ்தா தமது மூளையை உபயோகித்து, கணவனும் மனைவியும் தான் பிரயாணம் செய்யவேண்டுமென்ற முடிவுக்கு வந்து 'மிஸ்டர் அண்டு மிஸஸ்' என்று பதிவு செய்திருந்தார்! உண்மையில் எங்கள் பெட்டியில் பெண்கள் யாருமே இல்லை.

ஆந்திர நாட்டிலுள்ள ஒரு ரயில் நிலையத்தில் இராச் சாப்பாட்டுக்காகச் சென்றோம். காரசாரமான சாப்பாடு. ஆந்திரர்கள் மிகவும் காரமான சாப்பாடு சாப்பிடுவார்கள். ஆனால் தாராளமாக நெய் உபயோகிப்பார்கள். உணவுச் சாலைகளைப் பொறுத்த வரையில் பின்னால் கூறியதைப் பார்க்க முடியாது. சில உணவுச்சாலைகளில் நெய் ஊற்றி னாலும், அது மிகவும் மட்டரகமாயிருக்கும்.

ஆந்திர தேசத்தில் உணவுச்சாலைகள் குறைவு. ஆனால் அந்த உணவுச்சாலைகள் வழக்கம்போல் உடுப்பிக் காரர்களாலோ, அல்லது தமிழ் நாட்டு பிராமணர் களாலோ நடத்தப் பெற்றன. காலையில் இட்டிலியும் தோசையும் தயாராகும். ஆந்திரர்கள் மட்டுமல்ல, எல்லா மாகாணத்தாரும் இட்டிலியை விரும்புவார்கள். இட்டி

லியின் பெருமை இந்தியா முழுவதும் பரவியிருந்தது. முன்னே, தமிழ் நாட்டிலிருந்து இரண்டாயிரம் மைல் தூரத்திலுள்ள சைகோன்வரையில் பிராமணாள் ''காப்பிக் கிளப்பு''கள் ஆட்சி செலுத்தின. யுத்தத்திற்குப் பிறகு இட்டிலியின் பெருமை உலகம் முழுதும் பரவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை தமிழ் நாட்டிலுள்ளதைப் போலச் சிறந்த காலையுணவு வேறு எங்குமேயில்லை.

வடநாட்டு ரயில் நிலையங்களில் சாப்பாடு மிகவும் மோசம். சில ரயில் நிலைய உணவுச்சாலைக்குச் சென்றால், சாப்பிடாமலேயே திரும்பிவர நேரும். காரணம் வேறொன்றுமில்லை; பரிமாறுகிறவரைப் பார்த்தாலும் சரி, அல்லது சாப்பாட்டைப் பார்த்தாலும் சரி, சாப்பிட மனம் வருவதில்லை! ரயில் பிரயாணத்தில் காலையில் எழுந்ததும் தமிழ் நாட்டு ஞாபகம்தான் வரும். அதிலும் தஞ்சாவூர் ரயில் நிலைய உணவுச்சாலையில் கிடைக்கும் அற்புதமான காப்பிதான் ஞாபகத்துக்கு வரும்.

தென்னிந்தியாவில், சில ஊர்களில், நல்ல உணவுச்சாலை எது என்று கேட்டால், ரயில் நிலைய உணவுச்சாலையைத்தான் குறிப்பிடுவார்கள். தென்னாட்டில் பிரயாணம் செய்ய நேர்ந்த வட நாட்டார் எல்லோரும், தென்னிந்தியரயில்வே உணவுச்சாலைகளைப் பிரமாதமாகப் பாராட்டுவார்கள். பிரயாணத்துக்குப் பிரயாணச் சீட்டு எவ்வளவு இன்றியமையாததோ அதைப்போலவே சாப்பாடும் இன்றியமையாதது.

சாப்பாட்டுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டே கல்கத்தா போய்ச் சேர்ந்தோம். எங்கள் ரயில் கல்கத்தா ரயில் நிலயத்தை யடைந்தது. ரயிலை விட்டிறங்கியதும், கூலிகள் எங்களை வளைத்துக்கொண்டார்கள். அவர்கள்

பேசியது எங்களுக்கு விளங்கவில்லை. ஏனென்றால், அவர்கள் ரூபாய்க் கணக்கில் கூலி கேட்டார்கள்.

முன் ஒருமுறை கல்கத்தா சென்றிருக்கிறேன். அப்பொழுதிருந்த கல்கத்தாவுக்கும் இப்பொழுதுள்ள கல்கத்தாவுக்கும் எவ்வளவு மாறுதல்கள் ; வேறுபாடுகள். ரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்ததும், கம்பீரமான பெரிய பாலம் தோற்றமளித்தது. அது உலகத்திலுள்ள மிகப்பெரிய பாலங்களுள் ஒன்று. பார்வைக்கு மிகவும் அழகாய்த் தோன்றும் அந்தப் பாலத்தில், இரண்டு டிராம் பாதைகள், வண்டி-மோட்டார் போக்குவரத்துக்காக இரண்டு விசாலமான சாலைகள், நடப்பதற்கு இரண்டு ஓரங்களிலும் அகலமான நடைபாதைகள் ஆகியவை இருந்தன. அந்தப் புதிய பாலத்துக்குப் பக்கத்தில் பழைய பாலம் இருந்தது. பழைய பாலத்துக்கும் புதிய பாலத்துக்கும் பெருத்தவித்தியாசமிருந்தது. அதைப்போலவே கல்கத்தாவின் பழைய ஜனத்தொகைக்கும் புதிய ஜனத்தொகைக்கும் பெருத்த வித்தியாசமிருந்தது.

அன்றைய கல்கத்தாவில் எத்தனையோ பிரச்னைகள். அவற்றில் ஒன்று உணவுச்சாலை. முன் காலத்தில் ரயிலை விட்டுக் கீழே இறங்கினல், கூலிகளும் உணவுச்சாலைப் பிரதிநிதிகளும்தான் நம் பிராணனை வாங்குவார்கள். இரண்டாவது முறை கல்கத்தா சென்றபோது உணவுச்சாலைப் பிரதிநிதி என்ற இனமே மறைந்துவிட்டது. உணவுச்சாலைக்குப் பலநாள் முன்னதாக எழுதினல் சில சமயம் இடம் கிடைக்கலாம். சாதாரண நாளில் தினமொன்றுக்கு நான்கு அல்லது ஐந்துரூபாய் வாங்கிய உணவுச்சாலைகளில் அப்போது நாளொன்றுக்குப் பத்து ரூபாய் முதல் பதினைந்து ரூபாய்வரை வாங்கினர்கள். ஐரோப்பிய உணவுச்சாலைகளில் இருபத்தைந்து ரூபாய்

முதல் ஐம்பது ரூபாய்வரை உண்டு. தனியறை கொடுக்க மாட்டார்கள். ஒரு படுக்கைதான் கொடுப்பார்கள். ஓர் அறையில் இரண்டு முதல், சமயத்திற்குத் தக்கபடி இன்னும் அதிகமாகவும் படுக்கைகளைப் போடுவார்கள். ஐரோப்பிய உணவுச்சாலைகளில் வாடகைமட்டும் கொடுத்தால் போதாது. அதன் நிர்வாகிக்கோ அல்லது சிப்பந்திகளுக்கோ இருபத்தைந்து அல்லது ஐம்பதுரூபாய் இனும் கொடுக்கவேண்டும். இனும் கொடுக்கும் தொகையைப் பொறுத்துத்தான் நமக்குச் சௌகரியங்கள் கிடைக்கும்.

உணவுச்சாலையில் இடம் கிடைப்பது மட்டும் கஷ்டமல்ல; நல்ல சாப்பாடு கிடைப்பதுகூடக் கஷ்டமான காரியம். சில உணவுச்சாலைகளில் சாப்பாடு மிகவும் மட்டமாயிருக்கும். கல்கத்தா ரஸகுல்லா தயாரிப்பதில் பிரசித்திபெற்ற ஒருவர் ‘எஸ்பிளனேடில்’ கடை வைத்திருந்தார். ஆவலுடன் அந்தக் கடைக்குச் சென்றேன். அங்கே ரஸகுல்லாவைக் காணோம். ஆனால் ஓர் அறிவிப்புப் பலகை இருந்தது. அதில் சர்க்கரை கிடைக்காததால் ரஸகுல்லா முதலிய இனிப்பு வகைகள் தயாரிப்பதை தாற்காலிகமாக நிறுத்தியிருப்பதாக எழுதியிருந்தது!

கல்கத்தாவில் பிரபலமாயிருந்தது ‘இந்தியா காப்பி ஹவுஸ்’. சிற்றுண்டிச்சாலை வியாபாரத்தை நல்ல முறையில் நடத்த முடியும் என்பதை அவர்கள் நிரூபித்து விட்டார்கள். அது மட்டுமல்ல; வங்காளிகளைக்கூடக் காப்பி சாப்பிடும்படி செய்துவிட்டார்கள்.

இந்தச் சிற்றுண்டிச்சாலையில் முக்கியமான கூட்டம், அமெரிக்கச் சிப்பாய்கள். அவர்களுக்கு வங்காளக் குடாக் கடலே காப்பியாக வந்தாலும் போதாது. சிற்றுண்டிச் சாலை திறந்ததுமுதல் மூடுகிற வரையில் அவர்களைப் பார்க்கலாம். சிற்றுண்டிச்சாலை வெறும் ‘காப்பிக் கிளப்’ அல்ல. பல விஷயங்களுக்கும் அது உபயோகப்பட்டது.

வியாபாரிகளைச் சந்திக்கவேண்டுமா? அதிகாரிகளைச் சந்திக்கவேண்டுமா? பத்திரிகை நிருபர்களைச் சந்திக்க வேண்டுமா? நடன மாதர்களைச் சந்திக்கவேண்டுமா? யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம். வேறு யாரை யாவது நாம் சந்திக்கும்படி ஏற்பாடு செய்யலாம், யுத்த காலத்தில், தனியே சந்தித்தால் சந்தேகம் ஏற்பட்டது. அதுவும் வியாபாரிகள் மற்றவர்களைச் சந்திக்கும்பொழுது சந்தேகம் அதிகமாயிற்று. வியாபாரிகள் மற்றவர்களை எப்படிச் சந்திப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டிருந் தார்கள். இந்தச் சிற்றுண்டிச்சாலை அந்தக் கவலையை ஒருவாறு போக்கியது.

உணவுச்சாலைக்கு அடுத்தபடியாக உள்ளது திரைப் படக்காட்சி. எந்தப் படமும் எந்தத் திரைப்படக் காட்சி சாலையிலும் வாரக்கணக்காக ஓடும். பெரும்பாலும் எல்லாக் காட்சிசாலைகளிலும் ஜனங்கள் நிரம்பியிருப்பார் கள். சில காட்சிசாலைகளில் நாலைந்து தினங்களுக்கு முன்னதாகவே அனுமதிச்சீட்டு வாங்கிவிடவேண்டும். கல்கத்தா திரைப்படக் காட்சிகளைப் பொறுத்தவரை ஒரே ஒரு குறைதான் இருந்தது. சீனப் படங்கள் அதுவரை திரைக்கு வரவில்லை!

கல்கத்தாவின் அப்போதைய ஜனத்தொகையின் விவரம் சரியாகத் தெரியாது. எனினும், கல்கத்தாவில் அப்போது நாற்பது லட்சம் ஜனங்களுக்குமேல் இருக்க லாம் என்று மதிப்பிட்டார்கள். அவர்களில் பட்டாளத் தார் சில லட்சம். அமெரிக்கர், ஆங்கிலேயர், கானடா தேசத்தார், ஆஸ்திரேலியர், நீக்ரோக்கள், சீனர் ஆகிய எல்லோரையும் பார்க்கலாம் கல்கத்தாவில் தஞ்சமடைந்த ஐரோப்பிய அனாதைகளையும் பார்க்கலாம். இந்தியா விலுள்ள எல்லா மாகாணத்தார்களையும் அங்கு சந்திக்கலாம்.

கல்கத்தாவின் போக்குவரத்துச் சாதனங்களில் மிகச் சிறந்தவை டிராம் வண்டிகள். இந்தியாவில் அவற்றை விட்ச் சிறந்த வண்டிகள் இல்லை. சௌகரியமாகவும் வேக மாகவும் செல்லும் டிராம்வண்டிகள் அமைந்திருந்தது கல் கத்தாவாசிகளின் அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

பஸ்கள் இரண்டு மாடியுடையவை. மிகவும் அபாய கரமானவைபோல எனக்குத் தோன்றியது. மூலைகளில் திரும்பும்பொழுது, கீழே விழுந்துவிடுமோ என்று தோன் றும். அந்தப் பஸ்களில் பிரயாணம் செய்வதைவிட, நடந்து செல்வதையே நான் விரும்புவேன்.

கல்கத்தா வாடகை மோட்டார்களில் கட்டணத்தைத் தவிர வேறு மாறுதல்களில்லை. அதே பஞ்சாபிதான் மோட்டாரை ஓட்டினன். அதே மூன்று கதவுகள்தான் இருந்தன.

சென்னையைப்போலவே கல்கத்தாவிலும்ரிக்ஷாக்கள் உண்டு. ரிக்ஷாக்காரர்கள் கையில் மணியை வைத்துக் கொண்டு அதை ரிக்ஷாக் கைப்பிடியில் தட்டிச் சத்தம் செய்வார்கள். மணியைத் தட்டினல்தான் அவர்களால் ஓடமுடியும். ரிக்ஷாவுக்கு நாம் கொடுக்கும் வாடகை அந்த ரிக்ஷாக்காரனின் மாகாணத்தைப் பொறுத்தது.

கல்கத்தாவில் ஏராளமான தமிழர் இருந்தனர். பெரும்பாலோர் அரசாங்கத்திலோ அல்லது வியாபார நிலையங்களிலோ வேலை செய்பவர். சிலருக்கு நல்ல வருமானம்உண்டு. வியாபாரிகள்சிலரும் அங்கிருந்தனர்.

சிலர் சிற்றுண்டிச்சாலையைத்தவிர, பத்திரிகையும் நடத்தினர். தென்னிந்தியப் பிராமணர்கள் இல்லாத ஆங்கிலப் பத்திரிகைகளே இந்தியாவில் கிடையாது என்று அமெரிக்க ஆசிரியர் ஜான்கந்தர் கூறவில்லையா? பத்திராதிபர்கள் மட்டுமல்ல; பெரிய பட்டம்பெற்ற பேச்சு வீரர்களும் கல்கத்தாவில் இருந்தார்கள்.

கல்கத்தாத் தமிழர்கள் சிலர் சேர்ந்து, ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அச்சங்கத்தின் பெயர் 'டமில் லிட்டரரி அசோசியேஷன்' அல்ல; பாரதி தமிழ்ச் சங்கம் என்ற இனிமையான பெயர். அப்போது அதன் தலைவர் விஞ்ஞானப் பேராசிரியர் டாக்டர் கிருஷ்ணன். இவர், யாராவது தமிழரைக் கண்டால் தமிழிலேதான் பேசுவார். பாரதி தமிழ்ச் சங்கம் பொழுது போக்கும் 'கிளப்' அல்ல; சீட்டாடும் இடமுமல்ல. வாரமொரு பிரசங்கம். ஆண்டு விழாவிலே கலை விருந்து. தமிழ்ப் பெண்களும் பிரசங்கங் களுக்கு வருவார்கள்!

பாரதி தமிழ்ச் சங்கத்திலே இலக்கிய வகுப்புக்களும் நடந்தன. பழைய தமிழ் இலக்கியத்தை விரும்புவோர் சிலர்; மறுமலர்ச்சியை விரும்புவோர் சிலர். தாய் நாட்டைவிட்டு எவ்வளவு தூரம் செல்கிறோமோ அவ் வளவுக் கவ்வளவு அதிகமாகத் தாய் மொழிப் பற்று ஏற்படும். கல்கத்தாத் தமிழர்களின் தாய் மொழிப் பற்று இயற்கையானது. ஆனால் கல்கத்தாவிலேயே 'எனது தாய்மொழி எனக்குச் சொந்தமல்ல' என்று கூறும் தமி ழர்களும் இல்லாமலில்லை.

கல்கத்தாவிலிருந்து சில மைல் தூரத்தில், பேலூர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் இருக்கிறது. ஆற்றங்கரையில், அமைதியான இடத்தில், அழகாக அமைக்கப்பெற்றிருக் கும் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பளிங்குக் கோயிலுக்குப் பல லட்சம் ரூபாய் செலவாகி யிருப்பதாகத் தெரிகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிலைக்கு போர்வை சாத்தியிருப் பதே ஒரு தனி அழகு. ஸ்ரீ ராமகிருஷ்ணரே உயிருடன் இருப்பதுபோலத் தோன்றும். பளிங்குக் கோயில், நல்ல வெளிச்சம், சுத்தமான காற்று, அமைதியான இடம், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் தெய்வீகமான திருவுருவம்—அவற் றைப் பார்க்கும்பொழுது அக் கோயிலுக்காகச் செலவு

செய்த லட்சக்கணக்கான ரூபாய் வீணல்ல என்று தோன்றியது.

* * *

சில வருஷங்களுக்கு முன், ஒரு தமிழ்க் கதை படித்தேன். அதில் கதை கல்கத்தாவில் நிகழ்ந்தது. கதாநாயகனும் கதாநாயகியும் கல்கத்தாக் கடற்கரையில் உலாவிக்கொண்டிருந்தார்கள் என்று காணப்பெற்றது. எனவே கல்கத்தா சென்றதும், கடற்கரையைத் தேடினேன் ஆற்றங்கரையைத் தவிர, வேறொன்றையும் காணேம். பெரிய பெரிய கப்பல்களே ஆற்றில் நங்கூரம் போட்டு நின்றன. கல்கத்தாக் கடற்கரை என்பது தமிழ் நாவலாசிரியரின் கற்பனைத் திறமை என்பதைப் பிறகு தெரிந்துகொண்டேன்.

* * *

வங்காள நாடகம் பார்க்க மேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. கல்கத்தாவில் தினந்தோறும் மூன்று அல்லது நான்கு நாடகங்கள் நடைபெற்றன. இந்தியாவிலேயே, தினந்தோறும் நாடகம் நடைபெறும் ஊர் கல்கத்தா ஒன்றுதான் என்று நினைக்கிறேன்.

சிராஜ்-உத்-தவுலா என்ற சரித்திர சம்பந்தமான நாடகத்துக்குச் சென்றேன். மொழி புரியவில்லை; ஆனாலும் நாடகம் விளங்கிற்று. லார்ட் கிளைவ் துரை எப்படிச் சலாம் போட்டார் என்பதும், எப்படிப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்தார் என்பதும் நாடகத்தில் நன்கு காட்டப்பெற்றன.

கல்கத்தாவில் உணவுப் பஞ்சம் வந்ததே தவிர, கலைப்பஞ்சம் வரவில்லை.

# வடநாட்டுப் பிரயாணம்

வங்காளத்தின் தலைநகரம் கல்கத்தா. அந்தக் கால பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலேயே இரண்டாவது பெரிய நகரமும் கல்கத்தாதான். வங்காளத்தைப் பற்றி நினைக்கும்பொழுது, வங்காளச் சாக்குதான் ஞாபகத்துக்கு வருகிறது. கதரியக்கம் ஆரம்பமானபொழுது முதன் முதலாகத் தயாரிக்கப்பெற்ற முரட்டுக் கதர்த் துணிகளை வங்காளச் சாக்குகளுக்கு ஒப்பிடுவது வழக்கம். ஆனால் உண்மையில் அந்தக் காலத்து முரட்டுக் கதர் கட்ட விருப்பமில்லாதவர்கள் ஏதாவது சாக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காக அதனைக் கூறுவது வழக்கம்.

கல்கத்தா, ஜனத்தொகையில் மட்டுமல்லாமல், வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் மிக முக்கியமான நகரம். பார்க்குமிடமெல்லாம் ஆலைகளும், அதிலிருந்து வெளிவரும் புகையும்தான் காணப்படும். பெரும்பாலான ஆலைகள் நல்ல லாபத்தில் வேலை செய்ததாகத் தெரிந்தது. யுத்த காலத்தில் கேட்கவேண்டுமா ?

பெரும்பாலான ஆலைகள் ஐரோப்பியர்களுக்குச் சொந்தம். இந்தியாவிலேயே அதிகமான ஐரோப்பியர் வசித்த இடம் கல்கத்தா நகரம்தான். அவர்களில் பெரும்பாலோர் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள்.

ஐரோப்பியர்களுக்குச் சமமாக சில இந்தியர்களும், முக்கியமாக மார்வாரிகளும் தொழில் செய்தனர். சாதாரண காலத்திலேயே அந்த ஆலைகள் நூற்றுக்கு ஐம்பது விகிதம் லாபம் கொடுத்ததாகத் தெரிந்தது.

லாபம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகக் கிடைத்ததோ, அவ்வளவுக் கவ்வளவு தொழிலாளரின் கூலி உயரவில்லை. அந்த ஆலைகளிலுள்ள தொழிலாளரைப் பற்றி அமெரிக்க ஆசிரியரான ஜான் கந்தர் மிகவும் உருக்கமாக எழுதியிருந்தார். தொழிலாளர் வசிக்குமிடங்கள், உலகத்திலேயே மிகவும் கேவலமானவை என்று அவர் கூறினர். தொழிலாளர் சம்பளம் மிகமிகக் குறைவு என்றும், சுகாதாரம் என்ற வாடையே கிடையாது என்றும், ஓர் அறையில் ஏராளமான தொழிலாளர் வசிப்பதால் அநேக தொழிலாளர், தங்கள் மனைவிமார்களைப் பார்த்து மாதங்கள் பல ஆகியிருக்கும் என்றும், மனிதத் தன்மையிலிருந்து வழுவக்கூடிய வரம்புக்குச் சில தொழிலாளர் வந்துவிடக்கூடும் என்றும் ஜான் கந்தர் எழுதியுள்ளார்.

கல்கத்தாவிலிருந்து ரயிலில் எப்படிப் புறப்படுவது என்பதே பெரும் கவலையாகிவிட்டது. தினப் பத்திரிகைகளில் ரயில்வேக் கம்பெனியாரின் விளம்பரங்கள் அடிக்கடி வெளிவந்தன. ரயிலில் பெரும்பாலான வண்டிகளில் பல்புகள் இல்லையென்றும், யுத்தத்தின் காரணமாக புதிய பல்புகள் போட இயலாதென்றும், பிரயாணிகள் தங்கள் சுயநலத்தைக் கருதி (சுயநலம் என்னும் வார்த்தை ரயில்வேக் கம்பெனியாருடன் இந்தியாவுக்கு வந்தது.) 'டார்ச்சு' விளக்குகளுடன் பிரயாணம் செய்யவேண்டும் என்றும் விளம்பரங்களில் காணப்பட்டன. பிரயாணத்திற்குப் பிரயாணச் சீட்டு எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியமானது 'டார்ச்' விளக்கு. அதிக விலை கொடுத்தாவது நினைத்தவுடன் 'டார்ச்' விளக்கு வாங்கிவிடலாம். ஆனால் பிரயாணச் சீட்டுக் கிடைப்பது மிகவும் கஷ்டமான காரியம். நாம் போக விரும்பும் ரயிலுக்குப் பிரயாணச் சீட்டுக் கிடைக்காது. எந்த ரயிலுக்குச்

சீட்டுக் கிடைக்கிறதோ அதை அனுசரித்துத்தான் பிர யாணத்தைத் தொடங்க வேண்டும்.

பிரயாணச் சீட்டு வாங்குவதோடு மட்டும் நமது வேலை முடியவில்லை. உடனே பதிவு செய்யவேண்டும். குறிப்பிட்ட நாளில் வண்டி புறப்படுவதற்கு ஒரு மணிக்கு முன்னமேயே ரயில் நிலையத்துக்குப் போக வேண்டும். நமக்கு முன்னே காத்திருக்கும் நூற்றுக் கணக்கானவர் களை இடித்துத் தள்ளிக்கொண்டு முன்னேற வேண்டும். அந்த முன்னேற்றத்தில் நமது பணப்பையை இழக்காம லிருக்க வேண்டும். ஒரு கண் பாதையிலும் மற்றொரு கண் சாமான்களைத் தூக்கிச் செல்லும் கூலியின் பேரிலும் இருக்கவேண்டும். காளிதேவியின் அருளால் அவ்வளவு கஷ்டங்களையும் தாண்டி உள்ளே சென்றால் சரியான 'பிளாட்பார'த்தில் நமது வண்டி நிற்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ரயில்கள் வழக்கமாகத் தாமதித்து வருவதால் புறப்படும் வண்டிகளின் 'பிளாட் பார'ங்களும் மாறும். அதிர்ஷ்ட வசமாக நமது வண்டி சரியான 'பிளாட்பார'த்திலேயே நிற்பதாக நம்புவோம். நம் பெயர் பதிவுக் காகிதத்தில் தப்பும் தவறுமாக எழுதப் பெற்றிருக்கும். நாம் நமது சாமான்களை வண்டியில் வைப்பதற்கு முன்னால் அந்தப் பெட்டியில் நிறைய வெள்ளைக்காரச் சிப்பாய்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்ப் போம். அவர்கள், நமது பதிவுக்காகிதங்களைப் பார்த்தால் சில சமயங்களில் நல்ல விதமாக நடந்துகொள்வார்கள். இல்லையானால் ரயில்வே அதிகாரிகளின் துணை கொண்டு அவர்களை வேறிடத்துக்கு மாற்ற வேண்டும்.

ஒருமுறை முசபர்பூர் ரயில் நிலையத்தில் பட்ட அவதி தான் ஞாபகத்திலிருக்கிறது. இரவு பன்னிரண்டு மணியி லிருந்து பன்னிரண்டரை மணிக்குள் நான்கு ரயில்கள்

அங்கு வருகின்றன. கூலிகள் மிகக் குறைவு. அங்கு ரயில் களில் வருவோர் பெரும்பாலும் வேறு ரயில்களுக்கு மாற வேண்டும். வடநாட்டில் சிலர் பெட்டி படுக்கைகளுடன் மட்டும் பிரயாணம் செய்வதில்லை, ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்குக் குடி போனால் எவ்வளவு சாமான்கள் எடுத்துச் செல்வார்களோ, அவ்வளவு வகை வகையான சாமான்களுடன் பிரயாணம் செய்வார்கள். எல்லா ரயில் களும் ஒரே சமயத்தில் வருவதால் கூலிப் பஞ்சம் அதிகம்.

என் நண்பரும் நானும் இரவு பன்னிரண்டு மணிக்கு அந்த அற்புதமான ரயில் நிலையத்தில் வந்திறங்கினோம். 'கூலி கூலி' என்று உரக்கக் கத்தினோம். வாய்தான் வலித்ததே தவிர, கூலிக்காரன் வந்தபாடில்லை. எனவே எங்களுடைய கனமான பெட்டிகளையும் அதைவிடக் கனமான படுக்கைகளையும் நாங்களே சிரமத்துடன் ரயிலை விட்டிறக்கினோம்.

நாங்கள் மாற வேண்டிய ரயில், புறப்படுவதற்குத் தயாராக அடுத்த 'பிளாட்பார'த்தில் நின்றது. கைகாட்டியும் இறங்கி விட்டது. பச்சை விளக்கும் காண்பித்தாயிற்று. ஊதல் சத்தமும் கேட்டது. அடுத்த 'பிளாட் பார'த்திற்குச் செல்ல வாராவதி மீது ஏறிச் செல்லவேண்டும். அவ்வளவு சாமான்களையும் எடுத்துக்கொண்டு ஏறிச் சென்று ரயிலைப் பிடிப்பது இயலாத காரியம். நாங்கள் நின்றுகொண்டிருந்த 'பிளாட்பார'த்திலிருந்து மாற வேண்டிய ரயிலுக்குச் செல்ல வேண்டுமென்றால், ஒரு தண்டவாளத்தைத் தாண்டிச் சுமார் ஆறடி உயரமுள்ள இரும்புக் கிராதியை ஏறிக் குதித்தாக வேண்டும். இரும்புக் கிராதிக்கும் ரயிலுக்கும் இடையே சுமார் ஒன்று அல்லது இரண்டு அடி இடந்தான் இருக்கும். மிகச் சிரமத்தோடு பழக்கமில்லாத ஒரு கூலியை அமர்த்தி அவன் உதவியோடு சாமான்களைத் தூக்கிச்

சென்றோம். என் நண்பர் நயமான வார்த்தைகளினால் இரண்டாவது வகுப்புப் பிரயாணி ஒருவரைக் கொண்டு, அந்தப் பெட்டியின் தாழ்ப்பாள் போட்டிருந்த கதவைத் திறந்துவிடும்படிசெய்தார். சாமான்களையெல்லாம் தள்ளி விட்டோம். எந்த விதமான அனுபவமும் இல்லாமல், ஆறடி உயரமுள்ள இரும்புக் கிராதியின் மீது ஏறிக் குதித்தேன், அதனால் என் வேஷ்டி மட்டும் நன்றாகக் கிழிந்து விட்டது. ஏறிக் குதித்த சந்தோஷத்தில் வேஷ்டி கிழிந்ததைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை. ரயிலில் ஏறி உட்கார்ந்தபொழுது, எனது திறமையைக் கண்டு நானே ஆச்சரியப்பட்டேன். நாங்கள் பட்ட கஷ்டங்களைப் பார்த்துச் சகிக்காமலோ என்னவோ ரயிலும் ஐந்து நிமிஷம் தாமதித்தது. அவ்வளவு சௌகரியமாகப் பிரயாணம் செய்து காசியை அடைந்தோம்.

ஒரு சமயம் சரித்திர ஆசிரியர் மெக்காலே எழுதினார்:- "ஆசியாவிலேயே செல்வம், ஜனத்தொகை, பெருமை, புனிதத்தன்மை ஆகியவை நிறைந்த சிறந்த நகரம் காசி. இந்நகரில் ஐந்துலட்சத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் இருந்தார்கள். பார்க்குமிடமெல்லாம் கோயில்கள்; சித்திர வேலைப்பாடுகள் அமைந்த மாளிகைகள்; புனிதமான குரங்குகளையும் சந்நியாசிகளையும், பசுக்களையும் தாண்டிக் கொண்டு ஒரு யாத்திரிகர், வீதியில் நடப்பது மிகவும் கஷ்டமான காரியம். எண்ணற்ற பக்தர்கள் கூடி நிற்பார்கள். காசியின் கலைக் கோயில்களுக்கும் இந்துக் கோயில்களுக்கும் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் ஆஸ்திகத்தில் நம்பிக்கையுள்ள நூற்றுக்கணக்கான இந்து பக்தர்கள் தினந்தோறும் வந்து கொண்டிருந்தனர். மாதந்தோறும் நூற்றுக் கணக்கானபக்தர்கள், இங்கு இறப்பதற்காகவே வந்தனர். அவர்கள் காசியில் இறந்தால் முக்தி என நம்பினர். பக்தர்களைத் தவிர, வியாபாரத்திற்காவும்

எண்ணற்ற மக்கள் காசிக்கு அடிக்கடி வந்தனர். கங்கைநதியிலே ஏராளமான பெரிய படகுகள் சரக்கேற்றிச் செல்வதற்காக நங்கூரம் போட்டு நிற்கும். காசியில் நெய்த துணிகள் உலகப் பிரசித்தி பெற்றவை. ஸெயின்ட்ஜேம்ஸ் அரண்மனையையும், வர்ஸெயில்ஸ் அரண்மனையையும், காசிப் பட்டுத் துணி அலங்கரித்தது; கடைத் தெருக்களிலே வங்காள மஸ்லின் துணிகளும், அயோத்திக் கத்திகளும், கோல்கொண்டா ஆபரணங்களும் காஷ்மீரச் சால்வைகளும் ஏராளமாக வியாபாரமாயின."

ஆனால் நான் அங்கு சென்றபோது காசியின் நிலை அவ்வாறில்லை. மெக்காலே பார்த்த காசி நகரத்துக்கும், நாங்கள் பார்த்த காசி நகரத்துக்கும் அதிகமான வித்தியாசங்கள் இருந்தன. முக்கியமாக இறப்பதற்காக அங்கு வருவோர் யாருமே இல்லை.

முன்காலத்தில் காசி நகரம் கலைகளின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. இன்றும் அது கலைகளின் இருப்பிடமாகத் திகழ்கிறது. காசியில் விஸ்வநாதர் ஆலயம் எவ்வளவு முக்கியமானதோ அதைப் போலவே, காசி சர்வகலாசாலை எனும் கலைக் கோயிலும் முக்கியமானது. பாரதத் தாயின் சிறந்த புதல்வர்களுள் ஒருவரான பண்டித மாளவியாவின் விடா முயற்சிக்கும் ஓயாத உழைப்பிற்கும் அச்சர்வகலாசாலை ஒரு சின்னமாக விளங்குகிறது. பெரும்பாலான மன்னர்களிடம் 'யாசகம்' பெற்று அச்சர்வகலாசாலையைக் கட்டும் முயற்சியிலே, பண்டித மாளவியா தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டார்.

காசி நகரம், முதலாவது ஒரு யாத்திரை ஸ்தலம். அடுத்தபடியாகத்தான் வியாபார ஸ்தலம். வருடந்தோறும் லட்சக் கணக்கான யாத்திரிகர்கள் விசுவநாதரைத் தரிசிக்க வருவார்கள். காசிக்கு யாத்திரிகர்கள் வராத

நாளே இல்லையென்று கூறலாம். இந்துக்கள் யார்வேண்டுமானாலும் விக்கிரகத்தைத் தொட்டுப் பூசை செய்யலாம்.

ஏராளமான தர்ம சத்திரங்கள் காசியில் உண்டு. தமிழரைப் பொறுத்தவரை நகர சத்திரத்தைக் குறிப்பிடலாம். நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பினரைத் தவிர ஏனையோரும் அங்கு தங்கலாம். காசியிலுள்ள தமிழரின் முக்கிய ஸ்தாபனம் நகர சத்திரம் தான்.

காசியில் ஏராளமான பண்டாக்கள் இருந்தார்கள். அவர்களில் சிலர் குண்டாக்களைப்போல் நடந்துகொண்டார்கள். நமது பாவ விமோசனத்துக்காக வைதிக காரியங்களைச் செய்வது அவர்களது வேலை. நமது பாவங்களைப் போக்குவதற்கு முன், அவர்கள் நமது பணத்தைப் போக்கிவிடுவார்கள்.

காசியிலுள்ள பெரும்பாலான வேலைக்காரர்கள், ஆந்திர நாட்டுக் கதரைப் போன்ற நிறமுள்ள ஆடைகளை உடுத்தியிருப்பதைக் காணலாம். ஆடையின் நிறமல்ல அது. முழுதும் அழுக்கு. அவர்களும் கங்கையில்தான் ஸ்நானம் செய்கிறார்கள். கங்கா ஸ்நானத்தினால் அவர்கள் பாவங்கள் போனாலும் போகுமே தவிர, அவர்கள் உடுத்தும் ஆடைகளிலுள்ள அழுக்குமட்டும் போகாது.

நேபாளத்துக்கு அடுத்தபடியாகஅதிகமான நேபாளிகள் வசிப்பது காசியில்தான். நேபாள மொழியில் வெளிவரும் ஒரே மாதப் பத்திரிகையான 'உதயம்' அங்கிருந்து தான் வெளிவந்தது; பெரும்பாலான நேபாளிகள் வியாபாரம் செய்தனர்.

பித்தளைப் பாத்திரங்களுக்கும், பட்டுப் பீதாம்பரங்களுக்கும், செம்புச் சாமான்களுக்கும், காசி நகரம் பேர் பெற்றது. நல்ல இஞ்சி முறப்பா அங்கு கிடைக்கும். காசிக் கயிற்றுக்கும் கங்காஜலத்துக்கும் அங்கு நல்ல வியாபாரம். காசி நகரம் பூரண நாகரிகம் அடைந்து விட்டது என்பதற்கு அங்குள்ள சிற்றுண்டிச்சாலையே உதாரணம்.

காசிக்கு வரும் பக்தர்கள், தாங்கள் கயாவிற்குச் சென்றதன் ஞாபகார்த்தமாக, தங்களுக்கு மிக விருப்பமான பழ வகைகளில் ஒன்றையும், காய் வகைகளில் ஒன்றையும், புஷ்பங்களில் ஒன்றையும் தங்கள் வாழ் நாளில் உபயோகிப்பதில்லை என்று பிரதிக்கினை செய்வதுவழக்கம். மிக அபூர்வமான வெகு சிலரைத் தவிர, எல்லா பக்தர்களும் தங்களுக்கு எவைமிக அதிகமாகப் பிடிக்காதனவோ அவற்றை விட்டுவிடுவதாகப் பிரதிக்கினை செய்வார்கள். இப்படி எத்தனை கோடிக் கணக்கான பக்தர்கள் கடவுளை ஏமாற்றியிருக்கிறார்களோ தெரியவில்லை! பாவங்களைப் போக்குவதற்காகச் செல்லும் பக்தர்களில் சிலர், அம்மாதிரியான நிகழ்ச்சிகளால் புதிய பாவங்களைச் சுமந்து வந்தனர்.

காசியில் முக்கியமான இடங்களில் ஒன்று பாரத மாதா கோயில். பளிங்குக் கற்களால் ஆன ஆலயம். உள்ளே விக்கிரங்கள் இல்லை. இந்தியாவின் படம்தான் பளிங்குக் கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது.

காசிக்குச் சில மைல் தூரத்தில் சாரநாத் என்னுமிடம் இருக்கிறது. இந்துக்களுக்கு காசி எப்படியோ அப்படி பௌத்தர்களுக்கு சாரநாத். பௌத்த சந்நியாசிகளின் மடங்கள் சில அங்கிருந்தன, உலக முழுவதிலிருந்தும், பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் சாரநாதரைத் தரிசிக்க வருவர். சாரநாத்தின் பழைய கட்டிடங்கள் பெரும்பாலும் இடிந்துவிட்டன. அக் கட்டிடங்களின் சின்னங்களையேதான் நாம் பார்ப்போம். சித்திர வேலைப்பாடுடன் கூடிய புதிய கட்டிடத்தில் அருள் ஒழுகும் புத்தரின் விக்கிரகத்தைப் பார்த்து மெய்ம்மறந்து நிற்போம்.

முக்கியமான அடுத்த ஊர் அலகாபாத். அவ்வூரை நினைத்தாலே நேரு குடும்பத்தாரின் ஞாபகம்தான் வரும். பொலிவிழந்து நின்ற ‘ஆனந்த பவன’த்தைப் பார்த்ததும் பழைய ஞாபகங்களே எனது நினைவுக்கு வந்தன.

சில வருடங்களுக்கு முன்னே ஜவஹர்லால் நேருவைப் படம் பிடிப்பதற்காக அங்கு சென்றிருந்தேன். ஆசார்ய கிருபளானியின் உதவிகொண்டு, எங்கள் புகைப்படம் பிடிப்பவர் நேருவை அணுகி, அவரைப் படம்பிடிக்க அனுமதி வேண்டுமென்றும், அவர் ராட்டினத்தில் நூல் நூற்ருல் அதனையே படம் பிடிக்கலாம் என்றும் கூறினர். நேருவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"நீங்கள் படம் பிடிப்பதற்காக நான் நூல் நூற்க முடியாது. நான் நூற்கும்போது வேண்டுமானல் நீங்கள் படம் பிடிக்கலாம்" என்று கடிந்து கூறினர்.

கடைசியாக, படம் பிடிப்பவர் அன்று மாலை வரை காத்திருந்து நேரு நூல்நூற்கும்பொழுது படம்பிடித்தார்.

யாத்திரிகர்களைப் பொறுத்தவரை, அலகாபாத்தில் பிரயாகை புனிதமான இடம். அலகாபாத் உத்தரப் பிரதேசத்தின் நகரங்களில் ஒன்று. ஆனல் உத்தரப் பிரதேசத்தின் மிக முக்கியமான நகரம் கான்பூர். அவ்வூரில் ஏராளமான பஞ்சாலைகள் உண்டு. அங்குள்ள ஆலைத் தொழிலாளர்களின் நிலை, கல்கத்தாவிலுள்ள தொழிலாளர்களின் நிலையைவிட எந்த விதத்திலும் உயர்ந்ததல்ல. யுத்தத்துக்கு முன் அவ்வூரின் ஜனத்தொகை மூன்று லட்சம். நான் சென்றபொழுது ஜனத்தொகை சுமார் எட்டு லட்சம். இந்தியாவில் செல்வத்தில் கொழித்த நகரங்களிலே அதுவும் ஒன்று.

கான்பூரிலிருந்து டில்லிக்குப் பிரயாணம் செய்வது மிகவும் கஷ்டமான காரியம். ஏனென்ருல் பிரதான ரயில் பாதையில் இடையிலுள்ள ஒரு நிலையம் கான்பூர். பிரத்தியேகப் பதிவு என்பதே கிடையாது.

அதிர்ஷ்ட வசமாக எனக்கு இடம் கிடைத்தது. ஆனல் அந்த அதிர்ஷ்டம் நிலைத்து நிற்கவில்லை. கைக் குழந்தையுடன் ஓர் அம்மையார் எனது வண்டிக்குள்

நுழைந்ததால் எனது இடத்தை அந்த அம்மையாருக்குக் கொடுத்துவிட்டு, கீழே மெத்தையை விரித்துப் படுத்துக் கொண்டேன். ரயில் சிறிது தூரம் நகர்ந்ததுதான் தாமதம். சாராய வாசனை அடித்தது. நன்கு ஆங்கிலம் கற்றறிந்த அந்த அம்மையார் சாராய அடுப்பை (ஸ்டவ்) வைத்துக்கொண்டு குழந்தைக்காகப் பால் காய்ச்ச ஆரம்பித்தார். நெருப்புப் பரவினுல் ஆபத்து என்பதற்காக நான் 'என்னுடைய சொந்த சுயநலத்தைக் கருதி' எனது படுக்கையைச் சுருட்டிவிட்டு, அம்மையாருக்கு உதவி செய்வதாகக் கூறினேன். அந்த அம்மையார் பால் காய்ச்சிய விதத்தைக் கொண்டு, அவருக்கும் சமையலுக்கும் வெகு தூரம் என்பதைத் தெரிந்துகொண்டேன். அவருக்கு நான் உதவி செய்தால் எப்படியிருக்கும்! கடைசியில் நல்லகாலமாகப் பாலிலே சாராயம் கலக்காமல் அந்தக் குழந்தைக்குக் கொடுத்தோம்! மீண்டும் காலை நான்கு மணிக்கு, எங்கள் ரயில் பெட்டி சமையலறையாகிவிட்டது.

எவ்விதமான தீவிபத்து மில்லாமல் டில்லியை அடைந்தேன். மொழி புரியாத ஊரிலே, சரியான விலாசம் தெரியாத நண்பர் வீட்டுக்கு டோங்காவில் சென்றேன். அதற்குத் தண்டனையாக டோங்காக்காரன் மூன்று மடங்கு கட்டணம் வசூலித்துவிட்டான்!

புதுடில்லியில் எல்லா மாகாணத்தார்களையும் பார்க்கலாம். தென்னிந்தியர்கள் ஆயிரக் கணக்கில் இருந்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் 'உத்தியோகமே புருஷ லட்சணம்' என்று எண்ணியவர்கள்.

டில்லியைப் பொறுத்தவரை ஓர் இடத்துக்கும் மற்ருேர் இடத்துக்கும் தூரம் அதிகம். அதிக தூரம் போவானேன்; அந்தக் காலத்தில் புது டில்லிக்கும் தேசீயத்திற்கும் எவ்வளவு தூரமிருந்தது?

# ஜய்ப்பூர் வழியாக

டில்லியிலிருந்து திரும்பும் பொழுது, பிரயாணத்தில் சோர்வு ஏற்பட்டது. என்றாலும், வழியிலுள்ள முக்கிய மான ஊர்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் உண்டாயிற்று. வழக்கம்போல, சிரமப்பட்டுப் பிரயாணச் சீட்டு வாங்கி ரயிலில் ஏறினேன். அந்த ரயில்களில் இரவு நேரத்தில்கூட உட்காரும் இடந்தான் பதிவு செய்வார்களே தவிர, படுக்கைக்கு இடம் பதிவு செய்ய மாட்டார்கள். நான்கு படுக்கையுள்ள பெட்டியில் பத்துப் பேருக்கு மேலிருந்தோம். எனக்குக் கீழ் மெத்தையில் இடம் கிடைத்தது. என்னுடன் ஒருவர் இருந்தார். அவரும் நானும் செய்துகொண்ட தனி ஏற்பாட்டின்படி கழுத்து முதல் உள்ளங்கால்வரை நன்றாய்ப் போர்த்திக் கொண்டு, எதிர்ப்புறமாக இரண்டு பக்கங்களிலும் தலையை வைத்துக்கொண்டு படுத்தோம். படுத்தோமே தவிர தூக்கம் வரவில்லை. எங்களுக்கு மேலேயுள்ள மெத்தையில் இரண்டு கனவான்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் குறைந்தது இரு நூறு பவுண்டு கனமாவது இருப்பார்கள். அவர்கள் சந் தோஷமாய்ப் பேசிக் சிரிக்கும்பொழுது மேல் மெத்தை ஆடும். அதைப் பார்த்தால் எங்களுக்குப் பயமாயிருக்கும். மேலே நானூறு பவுண்டு உயிருள்ள சாமான் இருக்கும் பொழுது எவ்வாறு எங்களுக்குத் தூக்கம் வரும்? தூக் கம் வராவிட்டாலும் பாதகமில்லை; அவர்கள் எங்கள் மேல் விழாமலிருக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தோம்.

சிறிது நேரம் சென்றது. நேரம் அதிகமாக ஆகப் பயமும் அதிகரித்தது. நான் மெதுவாக எழுந்து மேலே

இருந்த கனவான்களைப் பார்த்து, அவர்களில் ஒருவர் கீழே இறங்கினால்தான், நாங்கள் நிம்மதியாக இருக்க முடியுமென்றும், அப்படி இறங்கி வரும் கனவானுக்கு எங்கள் மெத்தையில் இடம் தருவதாகவும் கூறினேன். பெட்டியிலிருந்த அனைவரும் எங்களிடம் அனுதாபம் காட்டினர். எனவே, ஒரு கனவான் கீழே இறங்கினார். அதன்பின் தூக்கமில்லாவிட்டாலும், அன்றிரவு பயமில்லாமல் பிரயாணம் செய்தோம். மறுநாள் அதிகாலையில் ரயில் ஜயப்பூரை அடைந்தது.

இந்தியாவிலிருந்த முக்கியமான சுதேச சமஸ்தானங்களில் ஜயப்பூர் ஒன்று. இந்தியாவில் வியாபாரத் துறைகளில் முன்னணியில் நிற்கும் பெரும்பாலான மார்வாரிகள் அந்த சமஸ்தானத்தைச் சேர்ந்தவர்களே. ஆனால் அவர்கள் பொதுவாக அந்த சமஸ்தானத்தில் தொழில் செய்வதில்லை.

ஜயப்பூர் சமஸ்தானத்தின் தலைநகரம் ஜயப்பூர். கட்டிடங்கள் எல்லாம் ரோஜா நிறமாகக் காட்சியளிக்கும். அந்த ஊரை 'ரோஸ் பிங்க் ஸிட்டி' என்று சொல்வார்கள். கட்டிடங்கள் பெரியனவாகவும் அழகானவையாகவும் இருக்கும். ஆனால் வாயிற் கதவுகள் மட்டும், கட்டிடத்தின் வலது அல்லது இடது புறமாகவோ, அன்றிப் பின்புறமாகவோ இருக்கும். இவ்வளவு பெரிய வீடுகளுக்கு வாயிற்கதவுகள் வீட்டின் முன்புறத்தில் இல்லையே என்பதைப் பார்க்கும்பொழுது நமக்கு முதலில் ஆச்சரியமாகவே தோன்றும். வீட்டின் இரண்டாவது மாடியில்தான் ஜனங்கள் வசிப்பார்கள். கீழ் வீட்டை வியாபார நிலையங்களுக்கு வாடகைக்கு விட்டுவிடுவார்கள். நகர அமைப்பு மிகச் சிறந்த முறையிலிருந்ததாலும் வீதிகள் அகலமாயிருந்ததாலும், கட்டிடங்கள் கம்பீரமாகத் தோற்றமளித்தன. ஆனால் அந்தக் கம்பீரமான

கட்டிடங்களுக்கு உள்ளே, சூரிய வெளிச்சமோ அல்லது காற்ருே செல்வதற்குச் சிரமமாயிருக்கும். ஏனென்ருல், தலையை மட்டும் வெளியே நீட்டுவதற்குப் போதுமான அளவில்தான் ஜன்னல்கள் அமைத்திருந்தார்கள். அந்த ஜன்னல்களையும் பல சமயங்களில் மூடிவிடுவார்கள்!

ஜயப்பூர் அரசருக்கு 'சாவாய்' என்று பெயர். 'சாவாய்' என்ருல் ஒன்றேகால் என்று அர்த்தமாம். அந்த அரசர் மற்ற அரசர்களைவிட ஒன்றேகால் மடங்கு அதிகக் கப்பம் கட்டினுர் என்று அர்த்தமல்ல. முகலாய ஆட்சியின்போது, ஜயப்பூரை அரசாண்ட ராஜபுத்திர அரசர் ஒருவர் முகலாயச் சக்கரவர்த்திக்கு வலது கை போலிருந்தாராம். ஒரு சமயம் முகலாயச் சக்கரவர்த்தி ஜயப்பூர் அரசரை உற்சாகத்தோடு பாராட்டியபொழுது 'சாவாய்' என்று அழைத்தாராம். அதுமுதல் ஜயப்பூரை ஆளும் அரசபரம்பரையினர் தங்களுக்கு முன்ஞல் அந்தப் பட்டத்தையும் சேர்த்துக் கொண்டனராம். அது சரித்திரமா அல்லது சரித்திரக் கதையா என்பது எனக்குத் தெரியாது.

அப்பொழுதிருந்த ஜயப்பூர் அரசர் இளைஞர்; அவர் புகழ் உலகம் எங்கும் பரவியிருந்தது. ஜயப்பூர் அரசர் என்ற முறையில் அல்ல. இந்தியாவிலேயே மிகச்சிறந்த 'கோல்ப்' விளையாட்டுக்காரர் என்ற முறையில் உலகத்தில், நல்ல முறையிலுள்ள பெரிய 'கோல்ப்' மைதானங்களில் ஒன்று ஜயப்பூரில் இருந்தது.

இந்தியாவில் பார்க்கவேண்டிய முக்கிய இடங்களில் ஜயப்பூரும் ஒன்று என்றுதான் கருதவேண்டும். ஜயப்பூருக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தவை, லட்சக்கணக்காகச் செலவிட்டு அமைக்கப்பெற்ற 'கோல்ப்' மைதானமும், காற்று நுழையாத வீடுகளும் அல்ல; அந்நகரை அடுத்துச் சுமார் நான்குமைல் தூரத்திலுள்ள ஆமேர்

என்னும் அரண்மனைதான் அதற்கு முக்கியத்துவத்தைக் கொடுத்தது.

மலைகள் சூழ்ந்த பள்ளத்தாக்கிலே, அற்புதமான கோட்டை யொன்று கட்டப்பெற்றிருந்தது. கோட்டைக்குள்ளே பெரிய அரண்மனை. ஏனைய சரித்திரப் பிரசித்தி பெற்ற சில அரண்மனைகளைப் போலல்லாமல், அந்த அரண்மனை அன்றும் நல்ல நிலையிலிருந்தது. ஆனால் அங்கு யாருமே வசிப்பதில்லை. கட்டணம் வாங்கிக் கொண்டு யாத்திரிகர்களை அதனைபார்க்க அனுமதித்தனர்.

பளிங்குக் கல்லும், கண்ணாடித் துண்டுகளும் சேர்ந்தால் கட்டிடத்தை எத்தகைய அழகுள்ளதாகச் செய்ய முடியும் என்பதற்கு ஆமேர் அரண்மனையே உதாரணம். அந்தப்புரத்தில் ஒரு கண்ணாடி மண்டபம் இருந்தது. அதில் ஆயிரக்கணக்கான கண்ணாடித்துண்டுகளைப் பொருத்தியிருந்தார்கள். எனவே நாம் அங்கு சென்றால் நம்மைப் போலவே ஆயிரக்கணக்கான உருவங்களைப் பார்க்கலாம். தம்மைப்போலப் பிறர் ஒருவர் இருக்கக்கூடாது என்னும் மனப்பான்மையுள்ளவர்கள் அந்த அந்தப்புரத்துக்குச் சென்றால், தங்களைப் போல ஆயிரக்கணக்கானவர்களைப் பார்க்கும்போது என்ன பாடுபடுவார்கள் ?'

அரண்மனையில் முக்கியமானது, காளிதேவியின் திருக்கோவில். அக்கோயில் வௌவால் நாற்றம் இருட்டு ஆகிய எதுவுமில்லாமல் அழகாகப் பளிங்குக் கற்களால் அமைக்கப்பெற்றிருந்தது. தெய்வபக்தியில்லாதவர்கள்கூட, அக்கோயிலின் அழகையும், சுத்தத்தையும், அமைதியையும் கண்டால் மெய்ம்மறந்து நிற்பார்கள். அங்குள்ள விக்கிரகத்தை, ஜயப்பூர் அரசர்கள் வெற்றித் தெய்வமாக வணங்கிக் கொண்டாடினர். கொற்றவையாகிய காளிதேவி பண்டைத் தமிழருக்கும் போர்த்

தெய்வமல்லவா? ஒரு காலத்தில் காளிதேவிக்கு நரபலி கொடுத்ததாகவும் கூறுவார்கள்.

ஜயப்பூரில் மயில் ஏராளமாக உண்டு. சில இடங்களில் இவற்றைக் கூட்டம் கூட்டமாகவும் பார்க்கலாம். மயில்களுக்கு யாரும் எவ்விதத் தொந்தரவும் கொடுக்கக் கூடாதென்பது அரசாங்கத்தின் உத்தரவாம். மிருகக் காட்சிச்சாலையில் வெண்மை நிறமுள்ள மயில்களும் இருந்தன. அங்குள்ள பட்சிகளின் பகுதியில் அபூர்வமான பட்சி ஜாதிகள் இருந்தன.

ஜயப்பூரில் முக்கியமாகச் செம்பு, பித்தளை, வெள்ளி முதலிய உலோகங்களைக் கொண்டு சிறந்த கைவேலைப்பாடுள்ள பல பொருள்களைத் தயாரிப்பவர்கள். ஜமுக்காளம் நெய்தல், ஜரிகை வேலைப்பாடு முதலியனவும் உண்டு.

லட்சத்துக்கு மேல் ஜனத்தொகையுடைய ஜயப்பூரில் ஒரே ஒரு திரைப்படக் காட்சிசாலைதான் இருந்தது.

நான் சென்றிருந்த சமயத்தில் ஒரு 'சர்க்கஸ்' நடைபெற்றது. ஆடு, குரங்கு முதலிய 'கொடிய' மிருகங்கள் தான் அந்தச் 'சர்க்கஸி'லேயே முக்கியமானவை. சர்க்கஸ் விளையாட்டுக்காரர் ஓர் ஆட்டைக் கம்பியின் மேல் நடக்க வைக்க முயன்றார். முடியவில்லை; ஆட்டை அடிக்கப் போவதாகப் பாவனை செய்தார். அந்த ஆடு அவரைக் கடுமையாக முறைத்துப் பார்த்தது. அந்த ஆடு கம்பியின் மேல் நடந்ததைக் காட்டிலும் இவ்வாறு அவரை முறைத்துப் பார்த்ததுதான் ஜனங்களுக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஜயப்பூரின் வழியாகச் செல்லும்பொழுது, நாம் சரித்திரத்தின் வழியாகவே செல்கிறோம்.

# பம்பாயில் கண்டவை

"அடிக்கடி பம்பாய்க்குப் போகிறீர்களே, அங்கு என்ன அதிசயத்தைக் கண்டீர்கள்?" என்று கேட்டார் ஒரு நண்பர்.

"நமது சென்னையிலில்லாத அதிசயம் பம்பாயிலிருக்கிறது" என்றேன்.

"அப்படியா?" என்ருர் நண்பர்.

"ஆம், நீங்கள் சாதாரணமாகத் தினந்தோறும் சென்னையில் காணும் ஒன்றை பம்பாயில் மருந்துக்குக் கூடப் பார்க்க முடியாது" என்றேன்.

நண்பர் ஆச்சரியத்தோடு என்னை நோக்கினுர்.

"ரிக்ஷாவைத்தான் சொல்லுகிறேன். பம்பாயில் மனிதனை மனிதன் இழுக்கும் நாகரிகம் இன்னும் பரவவில்லை" என்றேன்.

ஒரு நகரத்தின் பெருமையை, அந்நகர அமைப்பிலிருந்தும், கட்டிடங்களிலிருந்தும், போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தும் ஒருவாறு அறிந்துகொள்ளலாம்.

பம்பாய் நகரில் போக்குவரத்துச் சாதனங்கள் சிறந்த முறையில் அமைக்கப் பெற்றிருந்தன. 'விக்டோரியா' என்றழைக்கப்படும் குதிரை வண்டிகள், மாடியுடன் கூடிய டிராம் வண்டிகள், லண்டன் பஸ்களுக்குச் சமமாகச் சொல்லக்கூடிய மோட்டார் பஸ்கள், வாடகை மோட்டார்கள், வேகமாகச் செல்லும் மின்சார ரயில் ஆகியவைதான் பம்பாயின் போக்குவரத்துச் சாதனங்கள். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் வரை, பம்பாயில் பெரும்பாலான வாடகை மோட்டார்களுக்கு மைல் ஒன்றுக்கு நான்கணுதான் கட்டணம்.

லட்சக்கணக்கான மக்கள் வசிக்குமிடம் பம்பாய். பழைமையும் புதுமையும் கலந்தது பமபாய் இந்தியாவின் வா.சற்படி (அந்நியர்களுக்கு) பம்பாய்.

பம்பாயிலிருந்த புத்திசாலியான ஆங்கிலேய கவர் னர் கடலைத் தூர்க்கப் பணத்தைக் கொட்டினூர். அதாவது கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து கடலைத் தூர்த்தார். அந்தக் கடற்கரையில் நாகரிகமுள்ள நூற்றுக் கணக்கான அழகிய கட்டிடங்கள் கட்டப்பெற்றிருந்தன.

பம்பாய் நகருக்குள் இருக்கும் பொதுக் கட்டிடங்கள், இந்தியச் சிற்பத்தின் அறிகுறியாக விளங்கின. ஐந்தாறு மாடியுள்ள கட்டிடங்கள் சர்வ சாதாரணம். பெரும் பாலான பெரிய வீதிகளின் ஓரங்களில் ஜனங்கள் நடப்ப தற்கு நடைபாதைகள் அமைக்கப்பெற்றிருக்கும். அவற் றிலே நடந்து செல்லும்பொழுது ஜாக்கிரதையாக நடந்து செல்லவேண்டும். கீழே வாழைப் பழத்தோல் வழுக்கிவிட் டாலும் ஆபத்து; அல்லது ஐந்தாவது மாடியிலிருந்து அழுகிய வெங்காயம் முதலிய பல பொருள்கள் தலையின் மேல் விழுந்தாலும் ஆபத்து; அதை உத்தேசித்துத்தான் பம்பாயில் பலர் தலைக்கு ஏதாவது அணிந்து கொள்ளு கிருர்கள் போலும்! பம்பாயில் பலவிதமான மனிதர்களைப் பார்க்கலாம். பல நாட்டு மனிதர்கள்; பல மாகாணத்து மனிதர்கள்; பல நாட்டு உணவுகள்.

உங்களுக்கு என்ன உணவு வேண்டும்? இட்டிலிசாம் பார் வேண்டுமா? வங்காளத்து ரசகுல்லா வேண்டுமா? சிந்துப் புலாவ் வேண்டுமா? பம்பாய் ஹல்வா வேண்டுமா? இத்தாலிய மக்ரோனி வேண்டுமா? ஜப்பானியச் சுக்கி யாக்கி வேண்டுமா? சீனத்துச் சாப்சூய் வேண்டுமா? இரானி டீ வேண்டுமா? இங்கிலாந்து தேசத்து உணவு வேண்டுமா? எது வேண்டுமானலும் கிடைக்கும். பம்பாய்க்கு இது ஒரு சிறப்பு.

திரைப்படக் காட்சிசாலைகளில் சிறந்தவை மூன்று. முதலாவது, அமெரிக்கருக்குச் சொந்தமானது. இரண்டாவதும் மூன்ருவ்துதும் பார்ஸிக்காரருக்குச் சொந்தமானவை பார்ஸிக்காரர்களில் பலர், தங்களை இந்தியரைவிட மேலானவர்களென்றும் தாங்கள் ஆங்கிலேயருக்குச் சமமானவர்களென்றும் கருதுபவர்கள்.

திரைப்படக் காட்சியில் ஆரம்பித்த இந்த விஷயம் பார்ஸிகளில் முடிகிறது. வியாபாரத்தைப்பற்றி எழுதிஞல் குஜராத்திகளோடு முடியும், உத்தியோகங்களைப் பற்றி எழுதிஞல் மதராஸிகளோடு முடியும்.

மதராஸிகள் என்ருல் தமிழர், தெலுங்கர், கன்னடியர், மலையாளத்தார் எல்லோரும்தான். சுமார் முப்பதாயிரம் மதராஸிகளுக்கு மேல் பம்பாயில் இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் மாதுங்கா என்ற இடத்தில் வசித்து வந்தனர்.

தாதாபாய் நௌரோஜியைப் பெற்றெடுத்தது பம்பாய். ஸர் பிரோஸ் ஷா மேத்தாவைப் பெற்றது பம்பாய். அந்நியத்துணி மறியலின்போது பாபுகானு என்னும் சிறுவன் மறியல் செய்து, மோட்டாரின் கீழ் மாண்டது பம்பாயில். தேசீய விஷயங்களில் சென்னையைப்போல எப்பொழுதும் முன்னணியில் நிற்பது பம்பாய். தமிழர்களுக்குத் தாய் நாட்டில் வேறுபாடு கிடையாது. எல்லாம் ஒன்றே.

# எலிபெண்டா

யுத்தத்துக்கு முன்னே சென்னையிலிருந்து ரங்கூனுக்கு வாரந்தோறும் கப்பல் போக்கு வரத்து ஏற்பட்டிருந்தது. அவற்றில் சிலவற்றிற்கு, "எதியோப்பியா" "எரின்புரா" "எலிபெண்டா" முதலிய பெயர்கள் உண்டு. அந்தக் காலத்தில் கப்பல்களின் பெயர்தான் தெரியுமே தவிர, இவற்றின் பொருள் என்ன என்பது பெரும்பாலும் தெரியாது. அபிசீனிய யுத்தம் ஆரம்பமான பிறகுதான், எதியோப்பியா ஒரு தேசம் என்று தெரியும். பம்பாய்க்குச் சென்ற பின்னரே "எலிபெண்டா" என்பது என்னவென்று தெரிந்தது.

எலிபெண்டா என்பது ஒரு தேசமல்ல, பம்பாய்த் துறைமுகத்திலிருந்து சுமார் ஏழுமைல் தூரத்திலுள்ள சிறிய தீவு எலிபெண்டா. இந்த மிகச் சிறிய தீவுக்கு மிக அதிகமான பெருமையை அளிப்பது, இத் தீவிலுள்ள அற்புதமான குகைகளும், அவற்றிலுள்ள சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுந்தான்.

எலிபெண்டாவிலுள்ள உன்னதமான சிற்பவேலைகள் சைவ சமயத்தின் தத்துவங்களை எடுத்துக் காட்டுவன. இவை எட்டாவது நூற்றாண்டில் செதுக்கப் பெற்றவை என்று சரித்திர ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

பதினாறாவது நூற்றாண்டில் நமது பாரத நாட்டிற்கு வந்த போர்த்துகீசியர் இத் தீவை தம் வசப்படுத்திக் கொண்டனர். அக்காலத்தில் இத் தீவில் யானையின் சிலை இருந்ததாம். இந்தக் காரணம் கொண்டே இத்தீவுக்கு எலிபெண்டா என்று பெயர் இட்டனர். அந்த யானையின் சிலை நாளாவட்டத்தில் நாசம் செய்யப்பட்டு, எஞ்சியுள்ள

உருவத்துடன் பம்பாய் விக்டோரியா நந்தவனத்தில் வைக்கப் பெற்றிருந்தது. போர்த்துக்கீசியர் எலிபெண்டா என்று பெயரிடுவதற்கு முன், இத் தீவுக்குக் கரபுரி என்ற பெயர் இருந்தது.

1534 ஆம் வருடத்தில்தான் போர்த்துக்கீசியர் இத் தீவை ஆக்கிரமித்து, ஐவோ பியர்ஸ் என்பவருக்கு வருட மொன்றுக்குச் சுமார் 315 ரூபாய்க்குக் குத்தகைக்கு விட்டனர். பிறகு இத்தீவு மானுவல் ரேபல்லோ டி. சில்வா என்பவர் கைக்கு மாறியது. அவர் இச் சொத்தைத் தமது மகள் டோனுரோஸோ மரியாமானுவல் டி. அல்மீடா பெயருக்கு மாற்றினர். ஓர் அந்நியர் இந்தியாவின் சொத்தை தமது மகளுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்த அதிசயம் 1548 ஆம் வருஷத்தில் நடந்தது!

எலிபெண்டாவுக்கு அடிக்கடி போர்த்துக்கீசியச் சிப்பாய்கள் வந்து சென்றுர்கள். அவர்களுக்குச் சைவ சமயச் சிற்பங்களைப் பார்க்க ஆச்சரியமாக இருந்திருக்க வேண்டும். 'ஓர் உருவத்துக்கு மூன்று முகங்கள் எதற்கு? எட்டுக் கைகள் எதற்கு?' என்று அவர்கள் யோசித்திருக்க வேண்டும். அதனுலேயே எலிபெண்டாவின் ஒப்பற்ற சிற்பங்களையெல்லாம் சிதைத்தனர் போலும். சில சிற் பங்கள் இந்தச் சிப்பாய்களின் துப்பாக்கிகளுக்குக் குறி யாயின. துப்பாக்கி குண்டுகளால் சரியானபடி சிதைக்க முடியாமல் போன சிற்பங்களை யெல்லாம் இந்தச் சிப்பாய் கள் ஆயுதம் கொண்டு செம்மையாகச் சிதைத்தார்கள்.

இதிலும் அவர்களுக்குப்போதுமான திருப்தி ஏற்பட வில்லை. இந்த அற்புதமான குகைகளை மாட்டுத் தொழுவ மாகவும் உபயோகித்தனர். இதிலிருந்து போர்த்துக்கீசிய யரின் பண்பாட்டை நாம் ஒருவாறு அறிகிருேம்.

1774 ஆம் வருடத்தில் சர்வ வல்லமையுள்ளவர்களா யிருந்த பிரிட்டிஷார் இத் தீவைக் கைப்பற்றினர்.

தற்பொழுது இந்திய அரசாங்கம் இந்தக் குகைகளைப் பாதுகாத்துவர ஏற்பாடு செய்திருக்கிறது.

பம்பாய்வாசிகள் சௌகரியமாக உல்லாசப் பிரயாணம் செய்யும் முக்கியமான இடங்களில் ஒன்றாகி விட்டது எலிபெண்டா. காலை ஒன்பது மணிக்குக்கப்பலில் புறப்பட்டால், பதினொரு மணிக்கெல்லாம் எலிபெண்டாத் தீவை அடையலாம். திரும்புவதற்கு மாலை நான்கு மணி சுமாருக்குத்தான் கப்பல். அதுவரை அத்தீவிலேயே காத்திருக்கவேண்டும்.

ஒருமுறை பம்பாய் சென்றிருந்த போது ஒரு நண்பர் 'எலிபெண்டாவிற்கு வருகிறீர்களா?' என்று கேட்டார். துணை கிடைக்கிறதே என்ற மகிழ்ச்சியில் ஒப்புக்கொண்டேன். எலிபெண்டாவில் உணவு என்ற பேச்சே கிடையாது. நாம் தான் உணவு தயாரித்துக்கொண்டு போக வேண்டும். உணவுப்பங்கீடு காலமானதால் சாப்பாடும் தயாரிக்க முடியவில்லை. பன் ரொட்டியும் கிடைக்கவில்லை. பழம், பிஸ்கோத்து முதலியனதான் கிடைத்தன. உணவு கிடைக்காத :அதிர்ஷ்டசாலிகளுக்கெல்லாம் இவைதான் உணவு.

கப்பலில் இரு வகுப்புகளுண்டு. இரண்டாவது வகுப்புச் சீட்டுக் கிடைக்கவில்லை. எனவே மூன்றாவது வகுப்புச்சீட்டுத்தான் வாங்கினோம். கப்பலில் மூன்றாவது வகுப்புக்குச் சென்றால், எல்லோரும் முதல் வகுப்புப் பிரயாணிகளைப் போலக் காணப்பட்டனர். ஏனெனில் எல்லோரும் உல்லாசப் பிரயாணம் செய்வோர். மூன்றாவது வகுப்புப் பிரயாணிகளுக்கு இயற்கையாகவுள்ள அழுக்குத் தோற்றமோ அல்லது கப்பல் நாற்றமோ அங்கில்லை. கப்பலில் ஏராளமான மாணவ மாணவிகளும், பல திறப்பட்ட மக்களும் பிரயாணம் செய்தனர். ஐந்து வருடங்களுக்கு முன் ரங்கூனில் சந்தித்த பர்மிய நண்பர் சிலரையும் அக்

கப்பலில் தற்செயலாகச் சந்தித்தேன். அவர்களுடன் நான்கு ஆங்கிலேயரும் வந்திருந்தனர். இவர்களில் ஒருவர் நாற்பது வருடமாக ஷாங்காயில் வியாபாரம் செய்து சிங்கப்பூரில் யுத்தக் கைதியாக இருந்தவர். மற்ருெருவர் யுத்தத்துக்குப்பின் இந்தோனேஷ்யாவை, இந்தோனேஷ்யர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக முதன் முதலாகச் சென்ற பிரிட்டிஷ் படையைச் சேர்ந்தவர். பிறிதொருவர் சயாமிலும் ஆஸ்திரேலியாவிலும் வசித்தவர்.

எலிபெண்டாவில் கப்பல் நின்ற இடத்திலிருந்து குகைக்கு நடந்து செல்லக் கால்மணி நேரம் ஆயிற்று. குகை வாயிலை அடைந்ததும் அங்கிருந்த முக்கிய அதிகாரியான ஸ்ரீ சென் என்பவரை ஒருவாறு அறிமுகப்படுத்திக் கொண்டோம். இந்த அறிமுகம் நல்ல பயனையும், மாலையில் தேநீரையும் அளித்தது.

குகை என்ருல், இருட்டும், 'டார்ச்சு' விளக்கும்தான் ஞாபகத்துக்கு வரும். எலிபெண்டாக் குகையில் இருட்டு என்பதே கிடையாது. நல்ல வெளிச்சம் வரும்படி செய்திருந்தார்கள். வெளியிலிருந்து பார்த்தால்தான் குகை என்று தெரியுமே தவிர, உள்ளே சென்ருல் ஏதோ ஒரு மண்டபத்துக்குள் இருப்பது போன்ற உணர்ச்சியே உண்டாகும்.

ஸ்ரீசென் எங்கள் அனைவரையும் அழைத்துச்சென்று ஒவ்வொரு சிற்பத்தைப் பற்றியும் மிகவும் விவரமாகக் கூறினுர். எங்களில் சிலருக்கு விளங்கவேயில்லை; ஆனுல் அவர் மட்டும் சொல்லுவதை நிறுத்தவேயில்லை.

அங்குள்ள சிற்பங்கள் 15 முதல் 20 அடி உயரமுள்ளவை. மத்தியிலிருக்கும் மகேசுவர மூர்த்தியின் உருவச் சிலைதான் எல்லாவற்றிலும் முக்கியமானது. சிவபெருமான் ஆக்கல், அழித்தல், காத்தல் ஆகிய மூன்று வேலைகளைச் செய்யும்மூன்று முகங்களும் அற்புதமானவை

நடராஜாவின் நடனத்தையும் துவார பாலகர்களின் கம்பீரத்தையும் நாள் முழுதும் பார்த்துக்கொண்டே இருக்கலாம். அடுத்த குகையில் ஆண்டவன் லிங்க வடிவத்தில் காட்சியளித்தார்.

எங்களுடன் எலிபெண்டாவுக்கு வந்தவர் தொகை சுமார் ஆயிரம். இதில் நூற்றுக் கணக்கானவர் மண்டபத்திலேயே உட்கார்ந்து விட்டனர். "ஆகா! இந்த மக்கள் இந்தச் சிற்பங்களை எவ்வளவு ரசிக்கின்றனர்!" என்று எண்ணினேன். அதற்குள்ளாக, அங்கிருந்த வேலைக்காரர்கள் உட்கார்ந்திருந்தவர்களை யெல்லாம் எழுந்துபோகும்படி விரட்டினார்கள். பிறகு விசாரித்ததில் அவர்கள் நிழலுக்காக அங்கு தங்கியிருப்பதாகவும், தாங்கள் கொண்டுவந்த உணவைச் சாப்பிட்டு, எச்சில் இலையை அங்கேயே எறிந்துவிட்டுச் செல்வார்கள் என்றும் தெரியவந்தது.

எலிபெண்டாவுக்கு வருபவர்களில் அனேகர் உல்லாசப் பிரயாணத்துக்காகவே வந்தனர்.

---

# ராஜ்கோட்

ஒரு காலத்தில், இந்தியாவில் அறுநூறுக்கு மேற்பட்ட சமஸ்தான மன்னர்கள் ஆட்சி நடத்தியதை நாம் படித்தும் பார்த்தும் இருக்கிறோமல்லவா? இந்திய சமஸ் தானங்களில் பெரும்பான்மை குட்டி சமஸ்தானங்கள். இந்தக் குட்டி சமஸ்தானங்களில் ஏராளமானவை கத்திய வாரில் இருந்தன. இவற்றைக் கண்காணித்து அதிகாரம் செலுத்திவந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதிநிதியான வெள்ளைக்கார ரெஸிடெண்டு, ராஜ்கோட் நகரைத் தலைநகரமாகக் கொண்டிருந்தார்.

அப்பொழுது கத்தியவாரில் மக்களின் தெய்வம் மன்னர்கள். மன்னர்களின் தெய்வம் பிரிட்டிஷ் ரெஸி டெண்டு. இந்த ரெஸிடெண்டு-தெய்வத்தின் சாபத் திற்கோ கோபத்திற்கோ ஆளான மன்னர்களின் கதி அதோகதிதான். எனவே சர்வ வல்லமையுள்ள இந்த ரெஸிடெண்டு-தெய்வத்தை வணங்கி அருள்பெற, இந்த மன்னர்கள் ராஜ்கோட்டிலேயே தங்களுக்கு நிரந்தரமான அரண்மனைகளை அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு மன்னரும் தமது தகுதிக்கும் வசதிக்கும் ஏற்ப அரண் மனைகளைக் கட்டியதால், சில அரண்மனைகள் போலவும், சில வீடுகள்போலவும், சில குதிரை லாயங்கள் போலவும் காட்சியளித்தன. இந்தக் கட்டிடங்கள்தான் ராஜ்கோட் கிராமத்தை நகரமாக்கின.

இந்தியா சுதந்திரமடைந்தபின், சமஸ்தானங்களை எல்லாம் ஒன்று சேர்த்தபொழுது, கத்தியவார் சமஸ் தானங்களை ஒன்றாக இணைத்து ''சௌராஷ்டிரா'' என்ற

ராஜ்யமாக்கி, அதற்கு ராஜ்கோட் நகரத்தையே தலை நகராக்கினர்கள். மன்னர்களின் பழைய மாளிகைகள் எல்லாம், மந்திரிகளின் மாளிகைகளாகவும் அரசாங்கக் காரியாலயங்களாகவும் மாறின. மன்னர்கள் சமஸ்தானச் சொத்துக்களாக வைத்திருந்த நூற்றுக்கணக்கான மோட்டார்களும் அரசாங்கச் சொத்துக்களாயின. சௌராஷ்டிர அரசாங்கத்தில், சிறிய உத்தியோகஸ்தர்கள் கூடப் பெருமதிப்புள்ள மோட்டார்களில் பிரயாணம் செய்தது இதனால்தான்.

ராஜ்கோட், பம்பாயிலிருந்து சுமார் 460 மைல் தூரத்திலுள்ளது. அகமதாபாத் வழியாகச் செல்லவேண்டும். அகமதாபாத்திலிருந்து ஒரு மணி நேரத்தில் வீரம்காம் சந்திப்பை அடைகிறோம். அங்கிருந்து சிறிய ரயிலில் பிரயாணம் செய்யவேண்டும். வீரம்காம் ரயில் சந்திப்பு ஒரு காலத்தில் பூலோக நரகமாக விளங்கியதாம். இதனைக் குறித்து காந்தியடிகள் தமது 'சத்தியசோதனை'யில் பல இடங்களில் எழுதியிருக்கிறார். அந்தக்காலத்தில் ரயிலில் வரும் ஆயிரக்கணக்கான பிரயாணிகளைச் சுங்க இலாகா உத்தியோகஸ்தர்கள் படாதபாடு படுத்தினர்கள். மணிக் கணக்காக ஜனங்கள் காத்து நின்று இந்தச் சோதனையிலிருந்து தப்பவேண்டும். சுகாதாரவசதியே இல்லாததால், நிலைமை மிகவும் சீர்கெட்டு விட்டது. காந்தியடிகள் பிரிட்டிஷாருடன் போரிட்டு பெற்ற வெற்றிகளில் இந்த வீரம்காம் கொடுமையைத் தடுத்ததும் ஒன்றாகும்.

பார்க்கும் தூரம் வரையிலும் பசுமை என்பதே காண முடியாத 'வளமான' நாடு சௌராஷ்டிரா, வழியிலுள்ள ரயில் நிலையங்களில் விற்கும் பொருள்களில் தண்ணீரும் ஒன்று. இந் நிலையங்களில் 'உப்பு'த் தண்ணீர்தான் கிடைக்கும். பெண்கள் இங்கே "மீட்டா பானீ" (நல்ல தண்ணீர்) விற்பார்கள்.

வாங்கனீர் என்ற ரயில் நிலையத்தில் பெண் கூலி யாட்கள் பிரயாணிகளின் கனமான சாமான்களைக் கஷ்ட மின்றிச் சுமந்து சென்றதைக் கண்டேன்.

காந்தியடிகள் பிறந்த போர்பந்தர் சமஸ்தானமும் இந்த சௌராஷ்டிராவில் அடங்கியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் சபையில் இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவரா யிருந்த ஜாம் சாகேப்பின் சமஸ்தானமும், சென்னை கவர்னராயிருந்த பவநகர் மகாராஜாவின் சமஸ்தானமும் இந்த சௌராஷ்டிராவைச் சேர்ந்தவை.

பவநகர் மகாராஜா உள்ளூரிலேயே நல்லவர் என்று பெயரெடுத்தவர். ஜாம் சாகேப் தமது துறைமுகத்தில் வியாபாரிகளுக்கு இறக்குமதி செய்ய வசதியளித்து அவர் கள் கொடுத்த சுங்கவரிகளில் பாதிக்குமேல் அவர்களுக்கே திருப்பிக் கொடுத்ததால் பிரபலம் அடைந்தார் என்று கூறுவார்கள்.

சொல்லாமல் ஊரை விட்டு ஓடிய ஜுனுகாத் நவாப் பின் ஜுனுகாத் சமஸ்தானமும் இந்த சௌராஷ்டிரா வில்தான் இருக்கிறது. ஜுனுகாத் மிகவும் பணக்கார சமஸ்தானம். நாற்காலிகளில்கூட தங்கமுலாம் பூசியிருப் பார்கள். நவாப் ஊரை விட்டுச் சென்றதும், சில தலைவர் கள் ஜுனுகாத் சமஸ்தானத்தைக் கைப்பற்றினர். அப் பொழுது சமஸ்தானப் பொக்கிஷத்தில் ஒன்றரை அணு இருந்ததாக அறிக்கை வெளியிட்டனர். ஆனால் ராஜ் கோட் வாசிகள் இந்த ஒன்றரை அணு சமாசாரத்தை வெறும் கதை என்றே கருதினார்கள்.

சௌராஷ்டிரா மக்கள் குஜராத்தி மொழிதான் பேசுவார்கள். ஆனால் குஜராத்திகள் வேறு, கத்தியவாரி கள் வேறு என்று அறிந்தேன். குஜராத்திகளும் கத்திய வாரிகளும் ஒரே மொழி பேசினாலும்கூட, தமிழருக்கும் தெலுங்கருக்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ, அவ்வளவு வித்தியாசம் அவர்களிடையே உண்டு.

கத்தியவாரிகள், குஜராத்திகளை விடத் தாங்கள் பண்பட்டவர்கள் என்றும், நாணயமானவர்கள் என்றும், நம்புபவர்கள். இந்திய நாட்டிற்குச் சுதந்திரத்தைத் தேடிக் கொடுத்த காந்தி மகானும், இந்திய நாட்டைத் துண்டுபோட்டுப் பாகிஸ்தான் கண்ட முகமதலி ஜின்னுவும் கத்தியவாரிகளே.

ராஜ்கோட்டில் காந்தியடிகளின் மூத்த சகோதரி கோகிபென் அம்மையாரைத் தரிசித்தேன். அவருக்கு வயது சுமார் எண்பத்தெட்டு இருக்கும். கண் சரியாகத் தெரியவில்லை. அவருடைய குமாரத்தி அருகிலிருந்து பணிவிடை செய்தார். தீண்டாமை விஷயத்தில் தமது சகோதரருடன் தாம் மாறுபட்ட அபிப்பிராயங் கொண்டதால், அகமதாபாத் ஆசிரமத்திலிருந்து தாம் விலக நேரிட்டதாக கோகிபென் அம்மையார் கூறினர். காந்தியடிகள் எந்த வீட்டில் தங்கியிருந்து படித்தாரோ அதே வீட்டில் ஒரு சிறு அறையில் இந்த அம்மையார் வசித்து வந்தார். அதே வீட்டின் மற்றப் பகுதிகளில் பெண்கள் பள்ளிக்கூடம் ஒன்று நடைபெற்று வந்தது. காந்தியடிகள் சம்பந்தப்பட்ட மற்ருேர் இடம், அவர் கல்வி பயின்ற ஆல்பிரட் உயர்நிலைப்பள்ளி. காந்தியடிகள் பிற்காலத்தில் ராஷ்டிரசாலா என்னும் தேசியப் பள்ளியில் தங்குவதுவழக்கம். இங்குதான் 1939 ஆம் ஆண்டு உபவாசம் மேற்கொண்டார்.

ராஜ்கோட்டில் மூன்று குஜராத்தி தினப்பத்திரிகைகளும் சுமார் முப்பது வாரப்பத்திரிகைகளும் வெளியிடப்பெற்றன. பத்திரிகை நிருபர்கள் சுமார் இருபத்தைந்து பேர் இருந்தனர். அச்சுக் கூடங்களில் உபயோகித்த பெரும்பாலான குஜராத்தி அச்செழுத்துக்கள் சென்னையிலிருந்து வந்தவை.

'படேல் ஐஸ்கிரீம்' சாப்பிடாவிட்டால் ராஜ்கோட் பிரயாணம் பூர்த்தியாகாது. படேல் என்பவர் 'ஐஸ்கிரீம்' வியாபாரத்தால் லட்சக்கணக்காகச் சம்பாதித்துத் தர்மமும் செய்திருந்தார். ராஜ்கோட்டில் பாலுக்கும் சீனிக்கும் பஞ்சமில்லை. பம்பாயில் பாலும் சீனியும் கிடைப்பது அரிது. ஆகையால் பம்பாயிலுள்ள கத்தியவார் மாஜி சமஸ்தான மன்னர்கள் தங்கள் விருந்துகளுக்கு படேல் ஐஸ்கிரீமை விமான மூலம் வரவழைப்பார்கள்.

ஆனால் ராஜ்கோட்டிலுள்ள தென்னிந்தியர்கள் இவர்களுக்கு இளைத்தவர்கள் அல்ல. அங்குள்ள சுமார் முப்பது பேர் தனி உணவு விடுதி அமைத்திருந்தனர். பம்பாயிலிருந்து இவர்களுக்கு மணமுள்ள புதிய காப்பித்தூள் விமான மூலம் வந்தது.

இவற்றையெல்லாம் நீங்கள் நம்பலாம். ராஜ்கோட்டில் நம்பமுடியாத விஷயம் மின்சார சக்தி ஒன்றுதான்.

தேஜ்பால் என்பவர் சுமார் எழுபது வயதானவர். ஆனால் இளைஞரைப் போன்று உற்சாகமாயிருப்பார். இவர் ராஜ்கோட்டின் பழைய தாகூர் சாகேப்பிற்கு (ராஜ்கோட் ராஜாக்களுக்கு 'தாகூர்' என்று பெயர். 'சாகேப்' என்பது மரியாதைச் சொல்) சமஸ்தானப் புகைப்படம் எடுப்பவராகவும் ஓவியராகவும் இருந்தவர்.பழைய தாகூர் சாகேப் காந்தியடிகளுக்கு விருந்தளித்தார். அதே ஆண்டில் சௌராஷ்டிராவில் சுமார் மூவாயிரம் சாரணச் சிறுவர்களும் சிறுமிகளும் காந்தியடிகளுக்கு அணிவகுத்து மரியாதை செய்தனர். இந்த இரு சம்பவங்களையும் தேஜ்பால் சிறிய அளவு திரைப்படமாகத் தயாரித்து வைத்திருந்ததைத் திரையிட்டுக் காண்பித்தார்.

தேஜ்பாலின் வீட்டில் டில்லி தர்பார் வர்ணப் படத்தைப்பார்த்தேன். இதை 1905 ஆம் ஆண்டில் தீட்டியதாகக் கூறினர். டில்லி தர்பார் 1911ஆம் ஆண்டில் என்று

எனக்கு ஞாபகம். இதை அவரிடம் கூறியபொழுது, அவர் சிரித்துக்கொண்டே, "இந்தப் படத்தின் மத்தியில் இருக்கும் பெரிய யானை மீது கர்ஸன் பிரபு பவனி வந்தார். பின்னால் கர்ஸன் பிரபு பேர் கெடவே, அவர் படத்தை அழித்துவிட்டு, அந்த இடத்தில் ஜார்ஜ் சக்கர வர்த்தியை வைத்தேன்" என்றார்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாக, தேஜ்பால் சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தார். பிணங்களைப் பாடை கட்டித் தூக்கிச் செல்லாமல் வண்டிகளிலோ வாகனங் களிலோ ஏற்றிச் செல்ல வேண்டுமென்று இடை விடாது பிரசாரம் செய்து வந்தார். அவரிடம் எந்த விஷயம் பேசினாலும் கடைசியில் சம்பாஷணை இந்த விஷ யத்தில்தான் முடியும்.

"பிணச்சடங்கு செய்ய வசதியில்லாத சிலர், அவர் எந்த ஜாதியினரானாலும் சரி, தேஜ்பாலிடம் வந்து பிணத்தை வண்டியில் வைத்துச் செல்வதாகக் கூறினால், இவரே முன்னால் நின்று எல்லாச் செலவுகளையும் ஏற்று, சடங்குகளை 'மங்களகரமாக' முடித்து, மறுநாள் காலை அந்தச் செய்தியையும் புகைப் படத்தையும் உள்ளூர்ப் பத்திரிகைகளில் பிரசுரித்துவிடுவார்" என்று அவ்வூர் வாசிகள் கூறினார்கள்.

பிரபலமான சோமநாதர் ஆலயம் சௌராஷ்டிராவில் தான் இருக்கிறது. இதனைத்தான் கஜனி முகம்மது பல முறை படையெடுத்துக் கொள்ளையடித்ததாகச் சரித்திரத் தில் படித்திருக்கிறோம்.

சோமநாதர் ஆலயத்தைப் பலகோடி ரூபாய் செலவில் புதுப்பித்திருக்கிறார்கள்.

---

# பூரி - ஜகந்நாதம்

வட நாட்டில், ஒரிஸா மாகாணத்திலுள்ள புனித மான க்ஷேத்திரம் பூரி, இதனை ஜகந்நாதம் என்றும் பூரி-ஜகந்நாதம் என்றும் அழைப்பார்கள்.

சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் பாதையில் உள்ள ரயில் நிலையம் குர்தா ரோடு சந்திப்பு. குர்தா ரோடு சென்னையிலிருந்து 740மைல்; கல்கத்தாவிலிருந்து 283 மைல். இந்த குர்தா ரோடு நிலையத்திலிருந்து பூரி இருபத்தேழு மைல்தான்.

சென்னையிலிருந்து கல்கத்தா செல்லும் பெரும்பா லான தமிழர்கள் வழியில் எங்கும் இறங்குவதில்லை. சென் னையை விட்டுப் புறப்பட்டால் நேரே கல்கத்தா; அங் கிருந்து புறப்பட்டால் நேரே சென்னை. இந்த முறையைத் தான் நானும் பல வருடங்களாகப் பின்பற்றி வந்தேன்.

ஒரு சமயம் கல்கத்தா சென்றிருந்தபொழுது சென்னைக்குத் திரும்பிவர பிரயாணச் சீட்டு கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்தேன். ஒரு வாரம்வரை 'மெயில்' ரயிலுக்குப் பிரயாணச்சீட்டுக் கிடைக்காதென்று கண்டிப் பாகக் கூறிவிட்டார்கள். கல்கத்தாவிலிருந்து சென்னைக் குப் 'பாசஞ்சர்' ரயிலில் வருவதானல் பாதிப் பிராணன் போய்விடும் 'கடவுளே! இந்தக் கஷ்டத்திலிருந்து தப்பு வதற்கு வழி இல்லையா?' என்று நினைத்தேன். அப்பொ ழுது பூரி ஜகந்நாதரின் ஞாபகம் வந்தது.

கல்கத்தாவில் ஒருவாரம் வேலையில்லாமல் காத்திருப் பதும், பூரி ரயிலில் கஷ்டப்பட்டு பிரயாணம் செய்வதும் இரண்டும் ஒன்றுதான் என்ற முடிவுக்கு வந்தேன். மறு நாள் இரவு புறப்பட்ட பூரி ரயிலில் இடம் கிடைத்தது.

இரவு ஒன்பது மணிக்குப் புறப்பட வேண்டிய ரயில், இரவு பன்னிரண்டரை மணிக்குத்தான் கிளம்பிற்று, ரயில் புறப்பட்டதே என்ற சந்தோஷத்தில் நேரமானதைக் கூடப் பிரயாணிகள் மறந்துவிட்டார்கள். மறுநாள் மாலை ஏழுமணிக்குப் பூரியை அடைந்தோம்.

பூரியை அடைவதற்கு இருபத்தேழு மைல் முன்னதாகவே பண்டாக்களின் பிரதிநிதிகள் பிரயாணிகளை வரவேற்ருர்கள். அவர்களுக்குத் தெரிந்த பல மொழிகளில் முதலில் பேசுவார்கள். நாம் எந்த மொழியில் பதில் சொல்லுகிருேமோ, அந்த மொழியில் மட்டும் பிறகு நம்மைத் தொந்தரவு செய்வார்கள். தங்கள் பெயர், தொழில், விலாசம் எல்லாவற்றையும் பல மொழிகளில் அச்சடித்த காகிதம் ஒன்றையும் நம்மிடம் வற்புறுத்திக் கொடுப்பார்கள். என்னைத் தொந்தரவு செய்த பண்டாவின் பிரதிநிதியிடம், நான் பணச் செலவு செய்ய வந்த யாத்திரிகன் அல்லவென்றும், நான் தங்குமிடத்தை அவருக்குக் கூறமுடியாதென்றும், எனக்காக அவர் தம் நேரத்தை வீணுக்குவதில் பயனில்லை என்றும் கூறினேன். அவர் பேசாமல் போய்விட்டார்.

பூரி நிலையத்தில் இறங்கியதும், ஒரு வண்டியை ஏற்பாடு செய்து சாமான்களை எடுத்துக்கொண்டு, இரண்டு மைல் தூரத்தில் சமுத்திரக் கரையோரத்திலுள்ள ஓர் உணவுச்சாலைக்குச் சென்றேன். அந்த உணவுச்சாலையின் சொந்தக்காரர் ஒரு வங்காளி.

உணவுச்சாலையில் தங்குபவர்கள், அங்குள்ள புத்தகத்தில் தங்கள் பெயர், விலாசம், வந்த காரியம் முதலியவற்றைப் பதிவு செய்யவேண்டும். இவற்றைப் பூர்த்திசெய்தபொழுது நான் வந்த காரியம் 'சுவாமி தரிசனத்திற்காக' என்று எழுதினேன். உணவுச்சாலை சொந்தக்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. "இப்படி எல்லாம் எழுதி என்

தொழிலை ஏன் கெடுக்கிறீர்கள்?'' என்ருர், எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

கோபம் தணிந்ததும் அவர் பின்வருமாறு கூறினர்; ''பூரி புனிதமான க்ஷேத்திரம் மட்டுமல்ல; இந்தியாவிலுள்ள சிறந்த சுகவாச ஸ்தலங்களில் ஒன்று. சுகவாசத்திற்காக வருகிறவர்களுக்குத்தான் சமுத்திரக்கரையிலுள்ள உணவுச்சாலையில் இடம் கொடுக்கலாம். யாத்திரிகர்களுக்கு இங்கு இடம் கிடையாது. இது உள்ளூர் அதிகாரிகளின் உத்தரவு''.

பசி அதிகமாயிருந்ததால் அவர் பிரசங்கம் என்காதில் ஏறவில்லை; 'சுகவாசம்' செய்வதில் எனக்கு ஆட்சேபம் இல்லை என்று கூறினேன்.

ஸ்நானம் செய்த பின்னர் சாப்பிடச் சென்றேன். உணவுச்சாலை முதலாளி என்னைப் பார்த்து, ''நல்ல சாப்பாடு தருகிறேன்; இங்கு நாங்கள் உபயோகிப்பது கடுகு எண்ணெய்'' என்ருர்.

'பசி வந்திடப் பத்தும் பறந்து போம்' என்று சொல்வார்கள். ஆனல் உணவுச்சாலை முதலாளி 'கடுகு எண்ணெய்' என்று சொன்னதும், எனது பசியே பறந்து போய் விட்டது.

பிறகு கோயிலுக்குச் செல்வதற்காக வெளியே வந்தேன். அப்பொழுது ''சாப்பாடு ஆயிற்ரு? கோயிலுக்குச் செல்லலாமா?'' என்று ஒருவர் என்னை மிக அன்புடன் கேட்டார். அவர்தான் நான் ஏற்கெனவே சந்தித்த பண்டாவின் பிரதிநிதி! எனது சாப்பாட்டைப்பற்றியும், நான் மோட்சத்திற்குப் போவதை பற்றியும், அவர் கொண்டிருந்த அக்கறையை பார்த்தபொழுது எனக்கே ஆச்சரியமாய் இருந்தது.

வடநாட்டில் பொதுவாகக் கோயில்களுக்கும், வீடுகளுக்கும் வெளித் தோற்றத்தில் அதிக வித்தியாசம்

இராது. சில கோயில்களின் மீது கொடி பறக்க விட்டிருப்பார்கள். ஆனல் பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயம் அப்படியல்ல. 665 அடி நீளமும், 644 அடி அகலமும், 155 அடி உயரமுமுள்ள கம்பீரமான கோபுரத்தோடு காட்சியளித்தது அக் கோயில். பூரி கோயிலின் சிற்ப வேலைப் பாட்டுக்கும், தென்னிந்தியக் கோயில்களின் சிற்ப வேலைப் பாட்டுக்கும் வித்தியாசம் உண்டு.

பூரி கோயில் பன்னிரண்டாவது நூற்ருண்டில் கண்டு பிடித்ததாகவோ அல்லது கட்டப்பட்டதாகவோ சரித்திர ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். கோயிலுக் கருகே பல தீர்த்தங்கள் உண்டு. மிகப் பெரிய குளம், சுமார் ஒன்பது ஏக்கர் அளவுள்ளது. இந்தக் குளத்தில் முதலைகளும், மீன்களும் ஏராளம்.

பூரி கோயிலில் அநேகமாக வாரத்துக்கோர்உற்சவம் நடக்கும். வருடத்தில் அறுபதுக்குக்குறையாத உற்சவம். இதில் வருடந்தோறும் ஆனிமாதம் நடக்கும்ரதோற்சவம் தான் மிகப் பெரியது. பூரி ரதங்கள் மிகப் பெரியவை. இவற்றை ஒன்றரைமைல் இழுப்பதற்குப் பல நாளாகும். ஆயிரக்கணக்கான யாத்திரிகள் தேர் இழுப்பார்கள். இந்த உற்சவத்திற்கு லட்சக்கணக்கான மக்கள் கூடுவர். பூரிரத உற்சவத்திற்குவரும் ஜனத்திரளின்எண்ணிக்கை உலகப் பிரசித்தி பெற்றது, அமெரிக்காவில் செய்திப் படத் தொழில் ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு 'எத்தகைய நிகழ்ச்சிகள் செய்திப் படம் பிடிக்கத் தகுதி யானவை?' என்று விளக்கிய பொழுது 'இந்தியாவில் பூரி ஜகந்நாதத்தில் கூடும் லட்சக்கணக்கான மக்களைப் படம் பிடிக்கவேண்டும்' என்று கூறினர். இந்த உற்சவத்தைப் பல முறை படம் பிடித்ததுண்டு.

பூரியில் ஓர் அரசர் இருந்தார். அவருக்குப் பூரிஅரசர் என்று பெயர். பூரி பலருடைய ஆட்சியின் கீழிருந்து,

கடைசியாக முகுந்த தேவ ராஜா என்னும் சுதந்திர மன்னரின் ஆட்சியிலிருந்தது. முகுந்த தேவராஜாவிற்கும் கிழக்கிந்தியக்கம்பெனிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. தமது சொந்த நாட்டில் 'அந்நியர்களை எதிர்த்த' குற்றத்திற்காக 1807 ஆம் ஆண்டு லார்டு வெல்லெஸ்லி முகுந்த தேவராஜாவைத் தோற்கடித்து, மாதம் இரண்டாயிரத்துச் சொச்ச ரூபாய் 'அலவன்ஸ்' கொடுத்து, பூரி கோயிலின் மேற்பார்வையையும் அவரிடம் ஒப்புவித்தார். அந்த முகுந்த தேவராஜாவின் பரம்பரையைச் சேர்ந்தவர் தான் அப்பொழுது பூரி அரசராக இருந்தார்.

பூரியில் ஏராளமான தர்ம சத்திரங்கள் உண்டு. பண்டாக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் ஆயிரக்கணக்கில் இருந்தனர். ஆண்டவனுக்கு நைவேத்தியத்திற்காகச் சமையலறையில் வேலை செய்யும் சமையற்காரர் தொகை நூற்றுக் கணக்கிலிருக்கும்.

ஜகந்நாதரைத்தரிசித்த பின்னர் ஊருக்குச் செல்வதற்காக ரயிலுக்கு வந்தேன். ரயில் நிலையத்திலுள்ள தங்கும் அறையில் காத்திருந்தேன். மூட்டைப் பூச்சியின் உபத்திரவத்தைவிட அருகிலிருந்த சகோதரப் பிரயாணிகளின் உபத்திரவம் அதிகமாயிருந்தது. மறுநாள் காலை புறப்பட வேண்டிய ரயில், முதல் நாள் இரவு 'பிளாட்பார'த்திற்கு வந்ததால் ரயிலில் ஏறிக்கொண்டேன்.

பொறுமையைக் கற்றுக்கொள்ளும் பல வழிகளில் ஒன்று, 'பூரிப் பாசஞ்சர்' ரயில் பிரயாணம்.

# பீஜப்பூர்

பீஜப்பூர் எங்கே இருக்கிறது? இந்தக் கேள்வியை ஒரு வன் பதினேழாவது நூற்றாண்டில் கேட்டிருந்தால், அவனை ஒரு பைத்தியக்காரன் என்று கூறியிருப்பார்கள். ஏனென்றால், அந்தக்காலத்தில் பீஜப்பூர் ஒரு சாம்ராஜ்யத்தின் தலைநகராகத் திகழ்ந்தது. இப்போது பீஜப்பூர் எங்கேயிருக்கிறதென்று கண்டுபிடிக்கத் தேசப்படத்தைத் தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

ஷோலாப்பூர்-கடக் ரயில் பாதையில், சரித்திர பிரசித்திபெற்ற இந்நகரம் அமைந்திருக்கிறது. பொதுவாக, சரித்திரப் பிரசித்திபெற்ற இடங்களுக்கு, குறிப்பிட்ட ரயில் நிலையத்திலிருந்து சில மைல் தூரம், கட்டை வண்டியிலோ, அல்லது நடந்தோதான் செல்லவேண்டியிருக்கும். ஆனால், பீஜப்பூரைப் பொறுத்த வரையில், அந்தச் சிரமம் கிடையாது. ஊருக்கு ஒரு மைல் தூரத்திலேயே ரயில் நிலையத்தை அமைத்திருந்தார்கள்.

ரயில் கம்பெனியார் மிகப் பழையவண்டிகளை உடைத்தெறிவதற்கு முன், அந்தப் பாதையில்தான் ஓட்டினார்களென்று நினைக்க வேண்டியிருக்கும். நாலரை மணி நேரத்தில் ஐம்பத்தெட்டுமைல் செல்லக்கூடிய 'வேகமான' ரயில் வண்டிகள் அங்கே ஓடின. ஜனங்களுக்கு மிகவும் சௌகரியமான நேரங்களில் ரயில் வண்டிகளை விடுவதாக ரயில்வேக்காரர்கள் விளம்பரப் படுத்தியதுண்டு. அந்தச் சௌகரியமான வண்டிகளில் ஒன்று இரவு இரண்டரை மணிக்கு பீஜப்பூரை விட்டுப் புறப்பட்டது.

பீஜப்பூர்-கடக் ரயில் பாதையில் இருப்பதாகக் கூறினேன் அல்லவா? கடக் என்பது ஒருபெரிய சந்திப்பு

நிலையம். ரயில்வேயின் முக்கியமான தொழிற்சாலைகளில் ஒன்று அங்கே இருந்தது. அந்த ஊருக்குக் கடக் என்று ஏன் பெயர் வைத்தார்கள்? ரயில் வண்டிகள் 'கடக், கடக்' என்று பெரும் சப்தமிட்டுச் சென்றனவே, அதன் நினைவாக அந்தப் பெயரை ஒருவேளை வைத்தார்களோ, என்னவோ?

பீஜப்பூர் ரயில் நிலையம் நடுத்தரமானது. நிலையத்துக்கு வெளியே சுமார் அறுபது 'டோங்காக்'கள் காத்திருக்கும். நமது ஊரில் குதிரை வண்டியைப் போல, அந்த ஊரில் டோங்கா. அந்த 'டோங்காக்'களை இழுப்பது குதிரைகள் தான்; சந்தேகமில்லை. டோங்காக்களிலே ஒரு விசேஷம். மழையைப் பற்றியோ, வெயிலைப் பற்றியோ அல்லது தெருப் புழுதியைப் பற்றியோ நாம் கவலைப்படவேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில், கவலைப்பட்டுப் பயனில்லை; அவற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்க, 'டோங்கா'வில் ஒரு வசதியும் கிடையாது.

என் 'டோங்கா'க்காரன் இப்ராஹீம் சுறுசுறுப்பான வாலிபன். அவன் குடும்பம் பெரியது. அவனோடு உடன் பிறந்தவர்கள் ஏழுபேர், அவர்கள் மூன்று தொழில்கள் செய்தார்கள்.

மூன்று தொழில்களிலே குதிரை வண்டி ஓட்டும் தொழிலும் ஒன்று. ஐந்து வண்டிகளும், ஆறு குதிரைகளும் அவனிடமிருந்தன. அவனுக்கு நான்கு மொழிகள் தெரியும். நான்கு மொழிகள் தெரிந்த முஸ்லிமாக இருந்தும், அவன் உத்தியோகத்திற்கு முயற்சி செய்யவில்லை. சுதந்திரம் வேண்டும் என்றான். உத்தியோகத்திற்குச் சென்றால் சுதந்திரம் கிடைக்காது என்று ஒரு டோங்காக்காரன் சொல்வதை எத்தனை அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஏற்றுக் கொள்வார்கள்?

பழைமையின் பெருமைகளிலே மகிழும் இந்தியர்களுக்கு, பீஜப்பூர் ஒரு முக்கியமான இடம். ஹம்பியைப்

போல, பீஜப்பூர் குட்டிச் சுவராகி விடவில்லை. எங்கே பார்த்தாலும் கல்லறைகளும் சமாதிகளும் மசூதிகளும் காணப்பெற்றன.

பீஜப்பூரைப் பற்றி சரித்திரம் என்ன கூறுகிறது? 1460 ஆம் ஆண்டு துருக்கியில் சுல்தான் மூர்த் காலமானர். அவருடைய குமாரன் முகமது, சுல்தான் ஆனன். முகமதுக்கு யூசுப் என்ற இளையசகோதரன் இருந்தான். துருக்கியின் அந்தக் கால வழக்கப்படி, சுல்தானின் சகோதரர் அனைவரையும் கொன்று விடுவது வழக்கம். அம்மாதிரியே யூசுபையும் கொல்ல வேண்டுமென்று மந்திரிகள் முகமதுக்கு யோசனை கூறினர்கள். தனது இளைய குமாரனை யூசுபின் மீது அளவு கடந்த அன்பு கொண்ட அவனது அன்னை, அழகான ஓர் அடிமைப் பையனைப் பிடித்து, யூசுபைப் போல் வேஷம் போட்டு, அவனைக் கொல்லச் செய்தாள். உண்மையான யூசுப் 1460 ஆண்டு இந்தியாவுக்கு ஓடிவந்தான்.

பீதார் சுல்தான் முகமது பகமனிடம்,யூசுப் வேலைக்கு அமர்ந்தான். ஆந்திர நாட்டில் எதிரிகளை முறியடித்து யூசுப் பேர் பெற்ருன். யூசுபுக்கு ஐந்து பட்டணங்களைப் பீதார் சுல்தான் இனமளித்து,அவனைப் பீஜப்பூர் அதிபதியாக்கினன். பீதார் சுல்தானின் மரணத்துக்குப் பின், யூசுப் 1479 ஆம் ஆண்டு தனது படை பலத்தால், தன் சுதந்திரத்தை ஸ்தாபித்துக் கொண்டான்.

1489 முதல் 1686 ஆம் ஆண்டு வரையில் அந்தப் பரம்பரையினர் பீஜப்பூர் ராஜ்யத்தில் முகலாய வழக்கப்படி, கல்லறைகளும் சமாதிகளும் பெரிதாக அமைப்பதிலே ஒருவரோ டொருவர் போட்டியிட்டனர். அதன் விளைவாகத்தான், பெரிய கோல் கும்பஸ் எனும் 'டோம்' பீஜப்பூரில் கட்டப்பெற்றது.

உலகிலே மிகப் பெரிய அந்த டோமின் விஸ்திரணம் 18,110 சதுர அடி. அதற்கு அடுத்தபடியாக உள்ள

பெரிய டோம். இத்தாலியின் தலைநகரான ரோமாபுரியில் இருக்கிறது. பாந்தியன் எனப் பெயர் கொண்ட அந்த டோமின் விஸ்தீரணம் 15833 சதுர அடிதான்.

கோல் கும்பஸின் உயரம் 1,198½ அடி. அந்தக் கட்டிடத்தின் மேல் பாகத்திலுள்ள டோமின் அகலம் 124 அடி. அந்த டோமுக்கு ஆங்கிலத்தில் ‘முணு முணுக்கும் கூடம்’ என்று பெயர். வட்ட வடிவமுள்ள அந்த டோமின் தாழ்வாரத்தில் நின்று கொண்டு நாம் பேசினால், நமது ஒவ்வொரு சொல்லும் குறைந்தது ஏழு முறை எதிரொலி செய்யும். சுவரில் மெதுவாகப் பேசினால் நாம் பேசுவது எதிர்ப்புறத்துச் சுவரில் டெலிபோன் மாதிரி கேட்கும். ஒரு கடிகாரத்தைச் சுவரின் ஓரத்தில் வைத்தால், எதிர்ப்புறத்துச் சுவரில் கடிகாரச் சப்தத்தை நன்றாகக் கேட்கலாம். அந்த இரண்டு சுவர்களுக்கும் இடையிலே உள்ள தூரம் நூற்று இருபத்து நான்கு அடி என்பதை நினைக்கும்பொழுது, அதனை உலக அதிசயங்களில் ஒன்றாகக் கூறலாம்.

பீஜப்பூரில் பார்க்கவேண்டிய முக்கியமான இடங்களில் ஒன்று ஜும்மா மசூதி. ஒரே சமயத்தில் 2,500 பேர் தொழுவதற்குப் போதிய இடம் அங்கே இருந்தது. அந்தக் காலத்துக் கலைச் சிறப்பை விளக்கக்கூடிய அரிய சித்திர வேலைப்பாடுகளை அந்த மசூதியில் காணலாம்.

மேத்தர் மகால் என்றொரு கட்டிடம் உண்டு. அதைப் பற்றிக் கூறப்படும் கதை ருசிகரமானது. இப்ராஹீம் அரசருக்குக் குஷ்ட நோய் இருந்ததாம். அதற்குப் பரிகாரம் தேடுவதற்காகத் தமது அரண்மனை ஜோசியரை அழைத்து அரசர் ஆலோசனை செய்தார்.

அரண்மனை ஜோசியர் அரசனைப்பார்த்து, “மன்னரே நாளைய தினம் நீங்கள் யாரை முதன்முதல் சந்திக்கிறீர்களோ, அவருக்கு ஏராளமான திரவியத்தைக் கொடுக்க வேண்டும். அதுதான் இதற்குப் பரிகாரம்” என்றார்.

ஜோசியர் தாமே மறுநாள் காலையில் அரசரைச் சந்தித்து அந்தத் திரவியத்தைப் பெற எண்ணியிருந்தார். ஆனால் விஷயம் வேறு விதமாக முடிந்தது.

அரசர் அதிகாலையில் எழுந்து வெளியே வந்தார். முதலில் ஒரு மேத்தரைச் (தெருப்பெருக்கும் சகோதரன்) சந்தித்தார்; மேத்தருக்கு அடித்தது அதிர்ஷ்டம். அரசர் கொடுத்த பொருளைக் கொண்டு, மேத்தர் ஒரு மகால் கட்டினான். அதுதான் மேத்தர் மகால். அந்தக் கதை எவ்வளவு தூரம் உண்மை என்பது நமக்குத் தெரியாது. ஆனால் கேட்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.

மல்லிக்-இ-மைதானும், இப்ரஹீம் ரஸா என்ற சமாதியும் மற்றும் சில இடங்களும் பீஜப்பூரில் முக்கியமாகப் பார்க்கத் தகுந்தவை. பீஜப்பூர் பிற்போக்கான நகரம். 1941 ஆம் ஆண்டில் அதன் ஜனத்தொகை சுமார் இருபதினாயிரம். கொசுவின் தொகை அந்த ஊர்வாசிகளுக்கே தெரியாது. முசாபரி பங்களாவில் கொசுவலை கொடுத்தார்களே அதற்கு மட்டுமே, தினசரிக் கட்டணம் ரூபாய் ஒன்றேமுக்கால் கொடுக்கலாம்.

கன்னடம், தெலுங்கு, மராத்தி, ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளைப் பேசிய மக்களுள்ள அந்த நகரில் ஆங்கிலம் பேசியவர்களும் இருந்தார்கள்.

பீஜப்பூரைப் பற்றி நினைக்கும்பொழுது, மாடி இல்லாத வீடுகளும் வியாபாரமில்லாத கடைத் தெருவும் தான் ஞாபகத்துக்கு வருகின்றன.

# கோவா

'கோவா' என்றதும் பால்கோவா ஞாபகம்தான் வருகிறது. ஆனல், நான் இங்கே எழுதுவது பால் கோவாவைப்பற்றி யன்று; நமது நாட்டிலே போர்த்து கீசியர் ஆக்கிரமித்துள்ள கோவா என்னும் பிரதேசத் தைப் பற்றித்தான்.

'வெஸ்டர்ன் இந்தியன் போர்த்துகீசிய ரயில்வே' என்பது ஒரு கம்பெனி. பெயர்தான் நீளமானதே தவிர, இந்த ரயில் பாதையின் நீளம் சுமார் ஐம்பது மைல் தான். ஐம்பது மைலே யானலும், அழகிய பல காட்சி களைக் காணலாம். மலைகளின்மீது, குகைகளைக் கடந்து, அந்த வேகமில்லாத ரயில் 'கடக்,கடக்' என்று செல்லும்.

கோவாவுக்குச் செல்லும் வழியிலே, சமுத்திர மட்டத் திலிருந்து மூவாயிரம் அடி உயரமுள்ள மலையில் ரயில் சென்றது. வழியிலே அழகான பெரிய நீர்வீழ்ச்சி ஒன்று இருந்தது. அதற்குப் 'பால் நீர்வீழ்ச்சி' என்று பெயர். "பெயர் தான் பால் நீர்வீழ்ச்சி; ஆனல், அது தண்ணீர் தான்" என்ருர் என் அருகிலிருந்த ஒரு பிரயாணி. அவர் ஒரு கோவானியர்.

கோவானியர்கள் முதல்தரமான சமையற்காரர்கள். அந்தச் சமையற்காரர்களின் மூலமாகத்தான் கோவாவை நான் அறிமுகப்படுத்திக் கொண்டேன். வெளி நாடு களுக்குச் செல்கிற பல கப்பல்களிலே இந்திய உணவு களைத் தயாரிப்பவர்கள், அந்தக் கோவானியர்கள்தான். நியூயார்க்கில் ஓர் இந்திய உணவுச்சாலையில் சமையல் செய்தவரும் ஒரு கோவானியர்தான். சமையல் செய்வது கோவானியர்களுக்குப் பிறப்புரிமை போலும்!

ஏழ்மைக்கு முதல்இடம் எங்கே கொடுக்கலாம் என்று கேட்டால், கோவாதான் ஞாபகத்துக்கு வரும். மாடி யில்லாத வீடுகள், களையில்லாத முகங்கள், செல்வம் இல் லாத மக்கள், திரைப்படக்காட்சி இல்லாத ஊர்கள், வியாபார மில்லாத துறைமுகம், வேகமில்லாத ரயில், தங்குவோர் இல்லாத உணவுச்சாலைகள் முதலியவை நிறைந்தது கோவா.

மார்மகோவா ஒரு துறைமுகம். அது இயற்கை யிலேயே நன்ருக அமைந்திருந்தது. யுத்த காலத்தில் அங்கு சென்றபொழுது, மூன்று ஜெர்மன் கப்பல்கள் அந்தத் துறைமுகத்தில் பிடித்து வைக்கப்பெற்றிருந்தன. கப்பலிலுள்ள ஜெர்மானியர்கள் அடிக்கடி கரைக்கு வந்து, குடித்துவிட்டுச் செல்வார்கள்.

மார்மகோவாவிலே இரண்டு பெரிய உணவுச் சாலைகள் இருந்தன. ஒன்று கடற்கரைக்குச் சிறிது தூரத் தில் இருந்தது. ஒரு காலத்தில் அந்த உணவுச்சாலை மிகப் பிரபலமாக இருந்ததாம். நான் சென்றபொழுது அதன் பழம்பெருமையைக் காட்டும் சின்னங்கள்தான் அங்கே இருந்தன. ஆடுகிற கட்டில், உடைந்துபோன நாற்காலி, சுறுசுறுப்பில்லாத வேலையாட்கள், ஓடாத மின்சார விசிறி, எரியாத மின்சார விளக்குகள் எல்லா வற்றிற்கும் மேலாக சுத்தம் செய்யப்படாத அறை, கப்ப லில் மூன்ருவது வகுப்பிலிருப்பது போன்ற ஒருவித துர் நாற்றம் இவையனைத்தும் கொண்டது அந்த உணவுச் சாலை. உணவு வேண்டுமென்ருல், முதல்நாளே கூறிவிட வேண்டும், 'உணவில் சுவையே கிடையாது' என்றுகூறு வதற்குமுன் வேலைக்காரன் மாயமாய்மறைந்துவிடுவான்.

அந்த உணவுச்சாலையிலே குளிப்பதற்காகச் செய் திருந்த ஏற்பாடுகள் விநோதமானவை. குளிக்கும் அறையில்,தகரத்தால் செய்த நீளமான வாளி ஒன்றைக்

கயிற்றில் கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். அந்த வாளி பூமியிலிருந்து சுமார் நாலு அடி உயரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும். அந்த வாளியில் தண்ணீரை நிரப்பி வைத்திருப்பார்கள். அதிலிருந்து நாம், ஒரு சிறிய பாத்திரத்தால், தண்ணீரை எடுத்து மேலே ஊற்றிக்கொள்ள வேண்டும்.

அவ்வளவு சௌகரியமாக ஸ்நானம் செய்துவிட்டு, உணவுச்சாலைக்கு வெளியே வந்தபொழுது மூன்று ஜப்பானியர்கள் உட்கார்ந்துகொண்டு,பஸ் வருவதற்காகக் காத்திருந்தார்கள்.வாஸ்கோடகாமா என்பது கோவாவிலுள்ள பெரிய ஊர்களில்ஒன்று. மார்மகோவா துறைமுகத்திலிருந்து அந்தஊர் நான்கு மைல் தூரத்திலிருந்தது. அந்த ஊருக்கு ஆறு மணிக்கொரு ரயிலும்,மூன்று மணிக்கொரு மோட்டார் பஸ்ஸுந்தான் செல்லும். அந்த பஸ்ஸுக்காகக் காத்திருந்த ஜப்பானியர்கள் அத் துறைமுகத்தில் பிடித்து வைக்கப்பெற்றிருந்த ஒரு ஜப்பானியச் சாமான் கப்பலில் வேலை செய்பவர்கள். அவர்களிடம் சென்று, பஸ் வர நேரமாகுமென்றும், ரயில் நிலையத்திலிருந்து வாஸ்கோடகாமா ரயில் நிலைய அதிபருக்கு டெலிபோன் செய்தால் அவர் அங்கேயிருந்து ஒரு வாடகை மோட்டாரை அனுப்புவார் என்றும்,அதற்கு ஒன்றேகால் ரூபாய் வாடகையாகுமென்றும் அரைகுறையான ஜப்பானிய மொழியில் கூறினேன். அவர்கள் மிகவும் சந்தோஷப் பட்டார்கள். வாடகை மோட்டாருக்கு ஈவுப்படி பணம் கொடுத்தோம்.

பஞ்சிம் என்பதுதான் கோவாவின் தலைநகர். மார்மகோவாவிலிருந்து சிறிது தூரம் கடல் வழியாகச் சென்று அக்கரை சேர்ந்து,பிறகு மோட்டாரில் செல்ல வேண்டும். கடல் பிரயாணம் சுமார் மூன்று மைலும், கரைப் பிரயாணம் சுமார் பத்து மைலும் இருக்கலாம். பஞ்சிம்

நகரம் ஒரு துறைமுகம் கூட. ஆனல் சிறிய கப்பல்களே அங்கே வரலாம்.

அந்த ஊரில் எங்கே பார்த்தாலும் 'டாவர்ன்'கள் இருந்தன. சாராயக் கடைக்குப் போர்த்துகீசிய மொழியில் 'டாவர்ன்' என்ற பெயர், அந்தக் கடைகளுக்குப் பொதுஜன ஆதரவு மிக அதிகம். அங்கே தாய் நாட்டின் (போர்த்துக்கல்) உயர்ந்த சரக்குகளையும் விற்பனை செய்தார்கள். அந்தச் சாராய வகைகள், மற்ற இடங்களைவிட அங்கே மிக மலிவாகக் கிடைத்தன. பம்பாய் மாகாணத்தில் பூரண மதுவிலக்கு அமுலிலிருந்த பொழுது. வழக்கமான பெருங் குடியர்களுக்கு அந்த ஊர் தான் அபயமளித்தது. குடிப்பதற்காக மட்டும் அந்தப் பிரபுக்கள் நூற்றுக்கணக்கான மைல் கப்பலில் பிரயாணம் செய்து அந்த நகருக்கு வருவார்கள். பொதுவாக பஞ்சிம் நகரத்தைக் குடியர்களின் சுவர்க்கம் என்று கூறலாம்.

கோவானியர்களுக்குச் சோறும்மீனும்தான் ஆகாரம். சோறில்லாவிட்டாலும் பாதகமில்லை; மீன்மட்டும் இருக்க வேண்டும். பஞ்சிம் நகரத்திலே பிரபலமான ஓர் உணவுச் சாலைக்குச் சென்றேன். அங்கே என்ன இருந்தது? சூப் முதல் கடைசி வரை எல்லாம் மீன் சம்பந்தப்பட்டவை தான்.

கோவாவில் மிகவும் குறிப்பிடத்தக்கது, சில நூற்ருண்டுகளுக்கு முன்னே கட்டப்பெற்ற பிரபலமான கத்தோலிக்க மடம். அதனை ஸ்தாபித்த பெரியாரான பாதிரி காலஞ் சென்றுவிட்டார். அவரைப் பெரிய மகான் என்று கொண்டாடினர்கள். அவருடைய பிரேதத்தைப் பக்குவப் படுத்தி வைத்திருந்தார்கள். சில வருடங்களுக் கொரு முறை அதனைப் பொதுமக்கள் தரிசிப்பதற்காக வெளியில் காட்சியாக வைப்பார்கள். அது பெருந் திருநாளாக

இருக்கும். அந்த மகானின் உடலைத் தரிசிக்க, இந்தியா வின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான மக்கள் திரண்டு வருவார்கள்; அந்த மகானின் சுண்டுவிரலை மட்டும் தனியாக ஒரு கண்ணாடிக் குழாயில் வைத்து மக்கள் வணங்கினார்கள். அந்தச் சுண்டு விரலை சாதாரண நாட்களிலும் எல்லோரும் தரிசிக்கலாம்.

அந்த மடத்தின் தோற்றம் மிகவும் கம்பீரமானது. பெரிய அரண்மனையைப் போல விசாலமானது. மடம் முழுதும் பாதிரிமார்களாலேயே கட்டப்பெற்றது. இங்கே உள்ள சித்திர வேலைப்பாடுகள் மிக உயர்ந்த முறையில் அமைந்திருந்தன. கோவாவில் கிறிஸ்துவர்களுக்கு அதி லும் கத்தோலிக்கர்களுக்குத்தான் - செல்வாக்கு அதிகம். ஆனால் கிறிஸ்துவர்களைவிட ஹிந்துக்கள்தான் அதிகம்.

கோவானியப் பெண்கள் நல்ல தேகக் கட்டுடைய வர்கள்; அவர்களில் சிலர் சுருட்டுப் பிடிப்பார்கள். பாதி பிடித்த சுருட்டை அணைத்துவிட்டு, அதைக் கூந்தலில் செருகிக்கொள்வார்கள். நமது நாட்டில் பூ வைத்துக் கொள்வது போலக் கூந்தலில் அவர்கள் சுருட்டு வைத்துக்கொள்வார்கள். கோவாவிலுள்ள ரயில் நிலையங் களில் சாமான் தூக்கும் கூலிகளில் பெரும்பாலோர் பெண்களே.

மிகச் சிறிய நிலத்திட்டாகிய கோவாவை போர்த்து கீசிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோவானியர்கள் பெருங் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். இந்தியாவுடன் தாங்கள் இணைந்தால்தான் தங்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் உண்டாகுமென்பது கோவானி யர்களின் உறுதியான நம்பிக்கை.

# அதிசயமான ஊற்று

அதிசயமான நீர் ஊற்று ஒன்றைப் பார்க்க விரும்புகிறீர்களா? அந்த இடத்திற்குச் செல்லப் 'பாஸ்போர்ட்' தேவையில்லை. மொழி தெரிய வேண்டிய அவசியமில்லை. ஏனென்ருல் சென்னையிலிருந்து சுமார் அறுபது மைல் தூரத்தில்தான் இந்த ஊற்று இருக்கிறது.

சென்னையிலிருந்து பம்பாய் செல்லும் மார்க்கத்தில் நகரி என்னும் ஊரில் இறங்கினேன். சாத்துக்குடிக்குப் பேர்போன நகரி இதுதான். ரயில் நிலையத்திலிருந்து ஊருக்குச் சுமார் இரண்டு மைல் தூரம் இருக்கும். சாதாரணமாக மாதம் காதவழி போகும் ஒற்றை மாட்டு வண்டிகள் இங்கு ஏராளமாக உண்டு. நான் சென்ற தினம் கார்த்திகை நாளானதால், எல்லா வண்டிகளும் அருகிலுள்ள திருத்தணிக்கு உற்சவத்திற்காகச் சென்றிருந்தன. எனவே வண்டிகள் ஒன்றுமில்லை; கூலியாட்களும் கிடைக்கவில்லை. ரயிலில் வந்த கிராம வாசிகள் இருவருடன் ஒற்றையடிப் பாதைவழியாக ஊருக்குள் சென்றேன். என்னுடைய சாமான்களை நானே தூக்கிச் செல்ல வேண்டி நேர்ந்தது. குறைவான சாமான்களோடு பிரயாணம் செய்யவேண்டியதன் அவசியத்தை அப்பொழுது தான் உணர்ந்தேன். நல்ல வெயிலிலே கனமான சாமான்களைச் சுமந்துகொண்டு, ஒற்றையடிப் பாதையில் நடப்பது நகரவாசிகளுக்குச் சிறிது சிரமமான காரியம் தான். எனது நிலையைக் கண்டு என்னுடன் நடந்து வந்த கிராமவாசிகளில் ஒருவர் பரிதாபமடைந்து நான் சுமந்து சென்ற சாமான்களில் சிலவற்றை வாங்கிக் கொண்டார்.

சாமானின் கனம் குறையவே, பேச வேண்டுமென்ற உற்சாகம் உண்டாயிற்று.

"இந்த ஊரில் என்ன விசேஷம்?" என்று உடன் வந்தவரைக் கேட்டேன்.

"விசேஷ மொன்றுமில்லை" என்று தாமதியாமல் பதில் கூறினர் அவர்.

ஏதாவது கோயில் இருக்கிறதா?" என்றேன்.

"ஆமாம் ஐயா. தேசம்மன் கோயில் இங்கேதான் இருக்கிறது. ஆனால் பாவம் உங்களைப்பார்த்தால் நன்றாக இருக்கிறீர்களே. எதற்காகத் தேசம்மன் கோயிலுக்குப் போகிறீர்கள்?" என்றார்.

எனக்கு விஷயம் புரியவில்லை. பிறகு விசாரித்ததில் தேசம்மன் கோயில் என்பது மிகவும் பிரபலமான மாரி யம்மன் கோயில் என்றும், பார்வை இழந்தவர்கள் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் பிரார்த்தனைக்காக இங்கு வருவார்கள் என்றும் தெரிந்துகொண்டேன்.

நல்ல காலமாகப் பாதி வழியில் ஒற்றைமாட்டுவண்டி ஒன்று கிடைத்தது. எங்கு செல்வது என்று தெரியாமலே வண்டியில் ஏறினேன். பத்து நிமிஷம் வண்டிக்காரனிடம் பேசி, புக்கஸ்தலமும் நீரூற்றும் இருக்குமிடம் அறிந்து நேராக அங்கு செல்லும்படி கூறினேன். நகரிக்கும் புக்க ஸ்தலத்திற்கும் சுமார் மூன்று மைல். எனது வண்டி போய்ச் சேர இரண்டே கால் மணி நேரமாகிவிட்டது. ஆற்றங்கரை ஓரத்தில் சிறிய கோயில் ஒன்றுக்கு வந்து சேர்ந்தோம். அதுதான் புக்க ஸ்தலம்.

பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாத வாசம் செய்த கதை உங்களுக்குத் தெரியுமல்லவா? அந்தக் காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் இந்தப் பிரதேசத்தில் வசித்ததாகவும் அவர்களுக்கு நல்ல தண்ணீர் கிடைக்காததால் வழக்கம் போல கிருஷ்ணனைப் பிரார்த்தித்ததாகவும், உடனே

கிருஷ்ண பகவான் வற்ருத கங்கையை இங்கு உண்டாக்கியதாகவும் புராணக் கதைகள் சொல்லுகின்றன.

கோயில் சாதாரணமாகத்தான் இருந்தது. ஒரே ஆலயத்தில் விசுவநாதர் சந்நிதியும், பெருமாள் சந்நிதியும் இருந்தன. ஒரு காலத்தில் திருப்பதி தேவஸ்தானத்தின் ஆதிக்கத்தின் கீழ் இக்கோயில் இருந்ததாகவும், பிறகு இதைக் கைவிட்டுவிட்டதாகவும் தெரிந்தது. கோயிலுக்குச் சொந்தமான சொத்து மிகச் சொற்பம். அதுவும் அர்ச்சகர்க்கு மானியமாக விடப் பெற்றிருந்தது. சிவன் கோயில் அர்ச்சகரான தெலுங்குப் பிராமணர் இந்த மானியத்தை அனுபவித்து வந்தார். பெருமாள் கோயில் அர்ச்சகர்க்கு அதுவுமில்லை. கோயில் உற்சவ காலங்களில் சேரும் உண்டித் தொகைகளையும், கோயிலுக்கு வரும் பக்தர்களின் உதவியையும் கொண்டுதான் சுவாமிகளின் வாழ்க்கையும் அர்ச்சகர்களின் வாழ்க்கையும் நடைபெற்றன; யுத்தத்தின் காரணமாகச் சில சமயங்களில் கற்பூரம் இல்லாமலே தீபாராதனை நடைபெற்றதும் உண்டு.

சிவன் கோயிலில் மூல விக்கிரகத்துக்குப் பின்னல், பிரகாரத்தில் ஒரு மண்டபம் இருந்தது. அங்கே சற்று நின்று கவனித்தால், தண்ணீர் ஓடும் சப்தத்தைக் கேட்கலாம். இதுதான் நீர் ஊற்று. இதனைத் தடுத்து ஐந்து வாயில்களின் வழியாக ஆற்றில் கொண்டுபோய்ச் சேர்த்திருந்தார்கள். இந்த ஐந்து நீர் வீழ்ச்சி வாயில்களும் ஆறடி உயரத்தில் இருந்தன. இந்த ஐந்தில் இரண்டில்தான் அதிகத் தண்ணீர் வரும். அதில் ஒன்றில் ஒரு சதுர அடி அளவுத் தண்ணீர் எப்பொழுதும் வந்துகொண்டேயிருக்கும். பளிங்கு போன்ற சுத்தமான தண்ணீர் ஆற்றில் நின்றுகொண்டு சுகமாகக் குளிக்கலாம். நல்ல முறையில் குளிக்கும் இடத்தை அமைத்

திருந்தார்கள். சென்னையிலும் பிற நகரங்களிலும் குழாய்த் தண்ணீரில் குளிக்கும் மக்களுக்கு இந்த இடம் உண்மையிலேயே ஒரு வரப்பிரசாதம்.

புக்கஸ்தலம் ஒரு குக்கிராமம்; உணவுப்பொருள்கள் கிடைப்பது கஷ்டம். அர்ச்சகர் மனசுவைத்தால் சாப்பாடு கிடைக்கும். அந்த வழியே செல்லுங் களைப்படைந்த வழிப் போக்கர்களும், பக்கத்துக் கிராமவாசிகளும்தான் இந்த ஊற்று நீரை நன்கு உபயோகித்து இன்புற்றனர். சிவ ராத்திரி, வைகுண்ட ஏகாதசி,ஆடி அமாவாசை போன்ற நாட்களில்தான் இங்கு யாத்திரிகர்கள் அதிகமாக வரு வார்கள். இவர்களில் பெரும்பாலோர் இவ்வூருக்குச் சமீபத்திலிருந்து வரும் மக்களேயாவர். கோயிலை அடுத்து ஒன்றிரண்டு தர்ம சத்திரங்கள் இருந்தன. குழந்தைப் பிரார்த்தனைக்காகச் சில குடும்பங்கள் இங்கேவந்து நாள் கணக்கில் தங்குவதுண்டு, இந்தப் பக்தர்கள் தாங்கள் ஊருக்குத் திரும்பும்போது கல்லினல் செய்த சிறு குழவி களையோ அல்லது கல்லினல் செய்த சிறு உருவச் சிலை களையோ கோயிலுள் வைத்துச் செல்வார்கள்.இம்மாதிரிச் சின்னங்கள் நூற்றுக் கணக்கில் இருந்தன.

ஆண்டு முழுவதும் எந்நேரமும் அளவு குறையாமல் வந்து விழுந்துகொண்டேயிருக்கும் இந்த அற்புதமான தண்ணீர் எங்கிருந்து வருகிறது? கங்கையே இங்கு வரு கிறது என்பார்கள் சிலர். ஆனல் சில வருடங்களுக்கு முன்னே கோயிலில் பெரும்பகுதி நாள்பட்டு இடிந்து கொண்டு வந்தபொழுது அதனைப் பழுதுபார்த்தார்கள். அப்போதுதான் இந்த ஊற்று தென்பட்டதாம். இது உயரக் கிளம்பி வந்ததாம். அதைக் கல்லினல் மண்டபம் செய்து அடைத்து, ஐந்து பிரிவுகளாக ஆற்றில்கொண்டு போய்ச் சேர்த்திருந்தனர்.

இந்த ஊற்று எங்கிருந்து வருகிறது என்பதை இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. சாதாரணமாக மலையிலிருந்துதான் ஊற்று உண்டாகும் என்றும், இந்த இடத்திற்கும் சமீபத்திலுள்ள மலைக்கும் ஐந்து மைலுக்கு மேலிருக்கும் என்றும் கூறுகின்றனர். இந்த ஊற்று, பூமி சாஸ்திர நிபுணர்களின் ஆராய்ச்சிக்கும் எட்டாத அதிசயமாகவே இருக்கிறது.

ஆனால் இதுகூட அதிசயமல்ல ; இந்த அதிசயமான ஊற்றைப் பிரபலப்படுத்தாமல் மூடிவைத்திருக்கிறோமே அதுதான் அதிசயமாகத் தோன்றுகிறது.

# செஞ்சி

**செ**ன்னையிலிருந்து செஞ்சிக்குச் சுமார் தொண்ணூற்று மூன்று மைல்தான். ரயிலில் செல்வதானால் திண்டிவனம் வரைதான் செல்ல முடியும். அப்புறம் பதினேழு மைல் பஸ்ஸிலோ அல்லது தனி மோட்டாரிலோ செல்லவேண்டும்.

செஞ்சியை நோக்கிச் செல்லும்பொழுது நாம் சரித்திரத்தை நோக்கியே செல்கிறோம். தேசிங்கு ராஜா ஐந்து வயதில் குதிரையைப் பிடித்து அடக்கினானோ இல்லையோ அது நமக்குத் தெரியாது; ஆனால் அவன் தன்னுடைய கோட்டையிலிருந்து கொண்டு பல்லாயிரக் கணக்கான மக்களை அடக்கி ஆண்டிருக்கிறான் என்பது உண்மை.

செஞ்சி நகரம் ஒரு காலத்தில் சீர்பெற்று விளங்கியது. ஆனால், இன்று அது ஒரு கிராமம். செஞ்சித் தாலுக்கா தென்னார்க்காட்டைச் சேர்ந்தது. தாலுக்காவின் தலைமைக் காரியாலயம் செஞ்சிக் கிராமத்தில்தான் இருந்தது.

இத்தகைய சரித்திரக் கோட்டைகளில் வழக்கமாயுள்ள தாலுக்காக் 'கச்சேரி', 'மாஜிஸ்ட்ரேட் கோர்ட்' முதலியவைதான் அங்கே காணப் பெற்றன. அந்த ஊரிலேயே வசதியான நல்ல கட்டிடம் ஆற்றங்கரையில் அமைந்துள்ள 'முசாபரி பங்களாத்'தான். செஞ்சிக் கோட்டையில் ஏறிப் பார்ப்பதற்காகச் சென்னையிலிருந்து மூன்று நண்பர்கள் புறப்பட்டோம்.

திண்டிவனம் வரையில் சாலை பாதகமில்லை. அப்புறம் மோசமாக இருந்தது. செஞ்சியை அடைந்ததும் நேராக முசாபரி பங்களாவுக்குச் சென்றோம்.

முசாபரி பங்களா 'வாச்மென்' முருகேசம் பிள்ளை பதினறு வருடங்களாக அங்கே வேலை செய்கிருராம். ஆனல் அவருடைய சம்பளம் மட்டும் ரூபாய் பன்னிரண்டிலிருந்து உயரவேயில்லை.

முருகேசம் பிள்ளையைக் கூப்பிடுவதென்றல், உண்மையிலேயே கஷ்டம்தான். கூப்பிட்ட உடனே, 'ஏன்' என்ற சப்தம் கேட்டுவிடும். ஆனல், பத்து நிமிஷம் வரை அவர் உங்கள் முன் வரமாட்டார். நீங்கள் கூப்பிட்ட உடனேயே அவர் தமது பழைய கோட்டை மாட்டிக்கொண்டு தலைப்பாகையை வரிந்து வரிந்து கட்டிக்கொள்வதற்குக் குறைந்தது பத்துநிமிஷமாவது பிடிக்கும். இந்த கஷ்டத்தை உத்தேசித்து நாங்கள் அவரைக் கூப்பிடுவதே இல்லை. ஏதாவது அவரிடம் கேட்கவேண்டுமானல் நாங்களே அவர் இருக்குமிடத்துக்குச் செல்வோம்.

"செஞ்சியைப் பற்றி ஏதாவது புத்தகம் இருக்கிறதா? இங்கே கிடைக்குமா" என்று முருகேசம் பிள்ளையைக் கேட்டோம்.

அவர் தேசிங்கு ராஜன் பாட்டுப் புத்தகம் ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தார். அந்தப் புத்தகத்தின் அட்டையில் 'இது ராமாயியின் புத்தகம். யாரும் எடுத்துக் கொண்டு போனல் போலீஸில் சார்ச் செய்யப்படும், என்று எழுதியிருந்தது. புத்தகத்தைப் பிரித்து எனது நண்பர் பின் வருமாறு படித்தார்:

குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு.
யானை பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு.
நீயும் பிறந்தது வெள்ளிக்கிழமை
ராஜா தேசிங்கு.

இதைப் படித்ததும் என் நண்பருக்கும் 'கவிதா சக்தி'

பிறந்துவிட்டது; உடனே அவர், 'நானும் பிறந்தது வெள்ளிக்கிழமை ராஜா தேசிங்கு' என்று பாட ஆரம் பித்துவிட்டார்.

அன்று மாலையில் கோட்டையைப் பார்க்கச் சென்றோம். முதலாவது ராஜகிரி, இது ஒரு பிரமாண்ட மான கோட்டை. ஒரு காலத்தில் சேனைகள் அணிவகுத்து நின்ற இடங்கள், அப்பொழுது வயல் காடுகளாக இருந் தன. சில சமயங்களில் கண்ணுக்கெட்டிய தூரம்வரையில் அங்கே மனிதர்களையே காணமுடியாது. நெளிந்தும்வளைந் தும் செல்லும் பாதைகள் வழியாகப் பல வாயிற்படிகளைக் கடந்து ராஜகிரியின் அடிவாரம் போய்ச் சேர்ந்தோம்.

முதன்முதலாக ஆறு மாடியுள்ள அழகிய கட்டிடம் ஒன்றைக் கண்டோம். அதனருகே ஒரு பெரிய குதிரை லாயம் இருந்தது. 'அரசர் ஸ்நானம் செய்த இடம்', 'அரசி ஸ்நானம் செய்த இடம்' என்று சில இடங்களைப் பற்றி நாங்களே அனுமானித்துக் கொண்டோம்!

அழகிய குளம், அதன் நாற்புறமும் மண்டபம். இந்த மண்டபம் பூமி மட்டத்திலேயே இருந்தது. மண்டபத் திற்குக் கீழே, பூமியைக் குடைந்தாற்போல் ஒரு வழி இருந்தது அந்த வழியில் சென்றால்தான் குளத்தை அடையலாம்.

ஏராளமான களஞ்சியங்கள் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகக் கட்டப்பெற்றிருந்தன. பிரமாண்டமான இந்தக் களஞ்சியங்களில் ஒரு தூண்கூடக் கிடையாது.

உடற்பயிற்சி மண்டபமும் மலை அடிவாரத்திலேயே இருக்கிறது.

நாங்கள் மூவரும் ராஜகிரியில் ஏறுவதற்காக முயற் சித்தோம். வழி நெடுக, .சுமார் பத்து மண்டபங்கள் இருந்தன. ஒவ்வொரு மண்டபத்திலும் தங்கி இளைப் பாறிச் செல்லலாம்.

படிகளில் ஏறுவது மிகக் கஷ்டமாக இருந்தது. ஏனெனில், நாங்கள் மூவரும் ஏறக்குறைய 'பெரிய மனிதர்கள்.' எங்களில் மிகப் பெரிய மனிதர் சுமார் 160 பவுண்டுதான் எடையுள்ளவர்.

மூன்ருவது மண்டபம் வந்த உடனேயே நான் உட்கார ஆரம்பித்துவிட்டேன். என்னை உற்சாகப் படுத்திக்கொண்டே மற்ற இரு நண்பர்களும் உட்கார்ந்து விட்டார்கள்.

அப்பொழுதுதான் மலையிலிருந்து காவற்காரன் இறங்கி வந்துகொண்டிருந்தான். அவனைக் கண்டதும் என் நண்பர் "ஏனப்பா, உச்சிக்கு ஏறி இறங்குவதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும்?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "சுமார் ஒன்றரை மணி நேரம் பிடிக்கும்" என்ருன்.

என் நண்பர், "சரி; போவதற்கு முக்கால் மணி, வருவதற்கு முக்கால் மணி" என்று கணக்குப் போட்டுக் கூறினர்.

உடனே காவற்காரன், "இல்லீங்கோ; போவதற்கு ஒரு மணி, வருவதற்கு அரைமணியாகும்" என்ருன்.

என் நண்பரின் கணக்கிலே பிசகில்லை; ஆனல் காவற்காரன் கூறியதுதான் உண்மை.

கடைசியாக, மலையின் உச்சியை அடைந்தோம். ரங்கநாதர் கோயில், மணிக்கூண்டு, தேசிங்கு ராஜா தர்பார் நடத்திய இடம், பொக்கிஷசாலை முதலிய வற்றைப் பார்த்தோம்.

மறுநாள் காலையில் கிருஷ்ணகிரிக்குச் சென்ருேம். இது மிகவும் சிறிய மலை. சுமார் முந்நூற்றெண்பது படிகள்தான். ஆனல் இதில் ஏறி இறங்குவதற்குள் முழங்கால் முறிந்துவிடும்போல் தோன்றியது.

செங்குத்தான இம்மலை மீது சில ஆலயங்களும், களஞ்சியங்களும், அரச மண்டபங்களும் இருந்தன. உச்சியிலுள்ள மண்டபம் மிகஅழகானது. ஆனால் அங்கே வரும் மனிதப் பிராணிகள் இந்த அழகிய மண்டபத்தில் தங்கள் பெயர்களைக் கரியாலும், மற்றும் பலவகையாலும் எழுதி ஆபாசப்படுத்தியிருந்தன.

மூன்றாவது மலை ரங்ககிரி. இம்முறை அங்கே செல்ல எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ரங்ககிரி, செஞ்சியிலிருந்து சுமார் இரண்டரை மைல் தூரத்தி லுள்ள சிங்கவரத்தில் இருக்கிறது. இம்மலைக் கோயிலில் ரங்கநாதர் பள்ளிகொண்டிருந்தார்.

ஆனால், இந்த ரங்கநாதர் மற்ற ரங்கநாதர்களைப் போல் இல்லாமல் ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருந் தார். தேசிங்கு ராஜா சண்டைக்குச் செல்வதற்காக உத் தரவு கேட்க வந்ததாகவும், அதற்கு ரங்கநாதர் சம்மத மில்லாமல் தலையைத்திருப்பி வைத்துக் கொண்டதாகவும் அங்குள்ளவர்கள் கூறினார்கள். அது எப்படியானாலும் சரி, ஒரே கல்லில் செதுக்கப்பெற்ற ரங்கநாதரின் பிர மாண்டமான அந்தத் திருஉருவம் பார்க்கத்தக்கது.

செஞ்சிக்குச் செல்லுகிறவர்களுக்கு ஒரு வார்த்தை. நீங்கள் அங்கு சென்றதும் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். அங்கேயிருக்கும் இரண்டொரு உணவுச்சாலைகளில் முன்னதாகவே சொல்லி வைத்து விடுங்கள். இல்லையானால், விநோதமான 'பறங்கிக்காய் வத்தல் குழம்பு'தான் உங்களுக்குக் கிடைக்கும்.

---

# திருவண்ணமலை

"அண்ணமலைக் கரோகரா" என்ற சத்தத்தைக் கேட்டாலும், "அன்னக்காவடி தர்மம் தாயீ!" என்ற சத்தத்தைக் கேட்டாலும், நீங்கள் திருவண்ணமலையில் இருப்பதாக எண்ணிக்கொள்ளலாம்.

விழுப்புரம்-காட்பாடி ரயில் பாதையில், திருவண்ண மலை பெரிய ரயில் நிலையம். நிலையம் மட்டும் பெரிய தன்று; ஊரும் பெரியது; ஊருக்குள்ளிருக்கும் கோயிலும் பெரியது.

சில வருடங்களுக்கு முன் இவ்வூருக்குச்சென்றிருந்த பொழுது, எனக்கு ஒரு தேநீர் விருந்து அழைப்பு கிடைத்தது. நகரசபையார், நகரிலுள்ள ஒரு வீதியில் தங்கள் செலவில் ஒரு தண்ணீர்க்குழாய் அமைத்தார்கள். இந்தத் தண்ணீர்க் குழாய்க்குத் திறப்பு விழா நடத்து வதற்காக, அந்த 'வார்டை'ச் சேர்ந்த நகரசபை அங்கத் தினர், தமது சொந்தச் செலவில் ஒரு தேநீர் விருந்து அளிக்க ஏற்பாடு செய்தார்.

கூட்டம் சுமார் ஐம்பது பேர் இருக்கலாம். நகர சபைத் தலைவருக்கும், 'கமிஷனரு'க்கும் அந்த அங்கத் தினர் மலர்மாலைகள் அணிவித்தார். நகரசபைத் தலைவர் குழாயைத் திருகி, தண்ணீரை மூன்று முறை பருகித் தலையிலும் தெளித்துக்கொண்டார். இந்த வைபவத்துக்கு மேளதாளம் கூட இருந்ததாக ஞாபகம். பிறகு தேநீர் விருந்து சந்தன தாம்பூலம், வந்தனோபசாரம் முதலியன.

திருவண்ணமலைக்குப் பெருமை அளிப்பது தண்ணீர்க் குழாய் அன்று; அவ்வூரிலுள்ள பெரியகோயில்தான்.

திருவண்ணமலை திருக்கோயில், தமிழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய கோயில்களில் ஒன்று. இந்தக் கோயிலைக் கட்டிய பெருமை, வரலாறுகளின்படி வல்லாள மகாராஜனைச் சேர்ந்தது. லட்சக் கணக்காகப் பொருள் செலவிட்டுக் கோயிலை நல்ல நிலையில் வைத்திருக்கும் பெருமையில் பெரும்பகுதி நாட்டுக்கோட்டை நகரத்தாரைச் சேர்ந்தது.

அழகான மலை. உயரம் சுமார் இரண்டாயிரம் அடிக்கு மேல் இருக்கலாம். வலம் வந்தால் சுமார் எட்டு மைலாகும். இந்த எட்டு மைல் தூரத்தில் 365 குளங்கள் இருக்கின்றனவாம். ஒவ்வொரு குளமும் ஒவ்வொரு தீர்த்தம். மலைக்குப் பின்புறத்தில் அடியண்ணமலை என்னும் ஊரில் அழகான கோயில் ஒன்று உண்டு. மலையை வலம் வரும்பொழுது, பின்புறத்திலிருந்தும் மற்றப்புறங்களிலிருந்தும் மலையைப் பார்ப்போம். ஒவ்வொரு புறத்திலிருந்து பார்க்கும்பொழுதும், மலையின் உருவம் வெவ்வேறு விதமாகத் தோன்றும்.

இந்த மலையை வலம் வரும்பொழுது முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை இரண்டு. முதலாவது யம பாதைக் கதவு. பருமனில்லாத சாதாரண மனிதர்கள் நுழையும்படியாக ஒரு சிறுமண்டபம். மண்டபத்தின் ஒரு புறத்தில் நுழைந்து மறுபுறத்தில் வந்துவிட்டால், நரக லோகத்திற்குப் போகாமல் தப்பித்துக்கொள்ளலாம் என்பது பாமர மக்களின் நம்பிக்கை. பருமனுள்ள மனிதர்கள் இந்த மண்டபத்திற்குள் நுழைந்து, வெளியே வருவதற்கு வேதனைப் படுவதைப் பார்க்கும்பொழுது நரக வேதனை என்று சொல்லுவது கூடத் தேவலை என்று நமக்குத் தோன்றும்.

இரண்டாவது மிக முக்கியமானது. குறிப்பிட்ட ஓர் இடத்தில் நின்று கொண்டு, ‘உண்ணமுலைத் தாயே!’ என்று கூப்பிட்டால் ‘ஏன்?’ என்ற குரல் கேட்குமாம்.

'பாலும் சோறும் தருகிருயா?' என்ருல் 'தருகிறேன் என்ற பதில் கிடைக்குமாம். இந்த அதிர்ஷ்டம் எல்லோருக்கும் கிட்டாதாம். பக்தர்களுக்கு மட்டுந்தானும்.

கோயிலுக்கு முன்னே, துர் நாற்றம் நிறைந்த சர்க்கரைத் தீர்த்தம். பிறகு பதினுறு கால் மண்டபம்.

கோயில் மிகப் பெரியது. நான்கு வாயில்களிலும் நான்கு கோபுரங்கள். ராஜகோபுரம் மிகப் பெரியது. மதுரை கோபுரத்தை விடப் பெரியதென்றும் கூறுவார்கள். பின்புறம் இருப்பது பேய்க் கோபுரம், மற்ற இரு புறங்களிலும் இருப்பவை திருமஞ்சனக் கோபுரம், அம்மணி அம்மாள் கோபுரம். இவைகளேத் தவிர வல்லாள மகாராஜன் கோபுரம், கிளிக் கோபுரம் முதலிய பல கோபுரங்கள். கிளிக் கோபுரத்திலிருந்துதான், அருணகிரி நாதர் திருப்புகழைப் பாடியதாகச் சொல்லுவார்கள்.

கோயிலுக்கு மூன்று பெரிய பிராகாரங்கள் உண்டு. கோயிலே ஒருமுறை வலம் வந்தால் சுமார் ஒருமைலாகும். கோயிலுக்குள்ளே சிவகங்கை, பிரம தீர்த்தம் என்ற இரண்டு அழகிய குளங்கள். ஆயிரக் கால் மண்டபம், சித்திர வேலேப்பாடு நிறைந்த கல்யாண மண்டபம் முதலியவையும், தங்க, வெள்ளி வாகனுதிகளும் அவசியம் பார்க்கத் தக்கவை. கோயிலுக்குள்ளே ஒரு புத்தகசாலேயும் பல நந்தவனங்களும் உண்டு. விக்கிரகங்கள் மட்டும் ஆயிரத்துக்கு மேலிருக்கும். ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேதரான ஸ்ரீ அருணுசலேசுவரருக்கு வருடத்தில் எல்லா மாதங்களிலும் உற்சவங்கள் நடைபெறும். கார்த்திகை மாதத்தில் நடக்கும் தீபோற்சவம்தான் எல்லாவற்றிலும் சிறந்தது. கார்த்திகை உற்சவத்தில்,மலேயின் உச்சியில் தீபம் ஏற்றுவார்கள். பலநாள் வரையில் இந்தத் தீபம் எரிந்து கொண்டேயிருக்கும். கார்த்திகை உற்சவத்துக்குப் பதினுயிரக் கணக்கான யாத்திரிகர்கள் வருவார்கள்.

அப்பொழுது பெரிய மாட்டுச் சந்தை ஒன்று நடை பெறும்.

இவ்வூரில் நூற்றுக்கணக்கான மடங்களும் ஏராள மான சத்திரங்களும் இருந்தன. எல்லா ஜாதியாருக்கும், வகுப்பாருக்கும் இங்கே மடங்கள் உண்டு. திருவண்ணு மலையிலேயே பெரிய கட்டிடங்கள் ஒயாமாரி மடமும் அன்னச் சத்திரமும்தான். திருவண்ணுமலையில் சிற்றுண் டிச் சாலைகளும் பிச்சைக்காரர்களும் மிக அதிகம்.

இரவிலும் பகலிலும் புகைப்படம் பிடிக்கும் கடை களும் இங்கே உண்டு. ஒரு சமயம் சில நண்பர்கள் சேர்ந்து இவ்வூரில் புகைப்படம் பிடித்துக்கொண்டோம். ஒருவரிசையாகச் சிலர் நாற்காலிகளில் உட்கார்ந்திருந் தார்கள். அவர்களுக்குப் பின்புரத்தில் சிலர் வரிசையாக நின்ருர்கள். நாற்காலியில் உட்கார்ந்திருந்தவர்களுக்கு முன்புறத்தில் சிலர் வரிசையாகக் கீழே உட்கார்ந்திருந் தார்கள். புகைப்படம் பிடிப்பவர் மூன்று படங்கள் பிடித் தார். முதலாவது படத்தில், கீழே உட்கார்ந்திருந்தவர் களுக்குக் கால்களில்லை. இரண்டாவது படத்தில் மேல் வரிசையில் நின்று கொண்டிருந்தவர்களுக்குத் தலை களில்லை. மூன்ருவது படத்தில் வலதுபுறத்திலும் இடது புறத்திலும் ஓரங்களில் நின்று கொண்டிருந்தவர்களின் உடலில் பாதியைக் காணவில்லை. ஆனுல் புகைப்படக் காரர் மட்டும் இந்தப் படங்களை எங்களிடம் கொடுத்து, பணம் பெற்றுக்கொண்டார்.

திருவண்ணுமலைக்கு முதன்முதலாகத் திரைப்படக் காட்சி வந்த கதையும் வேடிக்கையானது. ஒரு சிறிய தகரக் கொட்டகையில் முதன் முதல் திரைப்படம் காண் பித்தார்களாம் அந்தக் காலத்தில் பேசாத படங்கள் தான் வந்தன. ஏராளமான ஜனங்கள் தரையில் உட்கார்ந் திருந்தார்கள். படம் ஆரம்பித்ததும் முதலில் ஒரு

குதிரைப் பட்டாளம் வந்ததாம். அந்தத் திரைப்படக் குதிரைகள் அருகில் வந்ததும், பெரும்பாலான ஜனங்கள் பயந்து ஓடினர்களாம்.

ஸ்ரீ ரமணசிரமத்தைப்பற்றிச் சொல்லாவிட்டால், திருவண்ணுமலேப் பிரயாணம் முற்றுப் பெருது. ஸ்ரீ ரமண மகரிஷி சிறு பிராயத்திலேயே திருவண்ணுமலேக்கு வந்து சில வருடங்கள் மலேயிலுள்ள குகைகளில் தவமிருந்து, பிறகு திருவண்ணுமலேக்கு ஒன்றரை மைல் தூரத்தில் தனியாக அமைக்கப்பெற்ற ஆசிரமத்தில் தங்கி, பக்தர் களுக்கு ஆன்ம உபதேசங்கள் அருளி வந்தார். அவரு டைய ஆசிரமத்தைச் சுற்றிக் கட்டிடங்கள் அமைத்துக் கொண்டு ஏராளமான பக்தர்கள் தங்கியிருந்தார்கள். இந்தப் பக்தர்களிலே, இந்தியாவின் பலபாகங்களிலி ருந்து வந்தவர்களும், ஐரோப்பியர்களும், அமெரிக்கர் களும் இருந்தார்கள்.

# புதுச்சேரி

இந்தியா சுதந்திரமடைந்த பின்னரும், பிரெஞ்சுக்காரர் நம் நாட்டில் சில திட்டுக்களில் ஆக்கிரமித்திருந்தார்கள். இத்தகைய திட்டுகளில் புதுச்சேரி ஒன்று.

சென்னையிலிருந்து புதுச்சேரிக்குச் சுமார் நூற்றிருபது மைல் தூரம். விழுப்புரம் வழியாக ரயிலில் செல்ல வேண்டும். இவ்வூரைப் புதுவை என்றும், பாண்டிச்சேரி என்றும், பாண்டி என்றும் பலவிதமான பெயர்களால் அழைப்பார்கள். புதுச்சேரியின் ஜனத்தொகை சுமார் அறுபது ஆயிரம். பெட்ரோல் கட்டுப்பாடு வருவதற்கு முன் இங்கு அறுநூறு மோட்டார்களுக்குமேல் இருந்தனவாம்.

'புஷ்புஷ்' என்பது ஒருவிதமான வண்டி. இவற்றில் சில, 'டேக்காட்டு' மாதிரியும், சில பெட்டி வண்டிகள் மாதிரியும் இருக்கும். மூன்று அல்லது நான்கு சக்கரமுள்ள இவ்வண்டிகளை மிருகங்கள் இழுப்பதில்லை; மனிதர்களே பின்னாலிருந்து தள்ளுவார்கள்.

வண்டிகளுக்குத் தக்கபடி இரண்டுபேர் முதல் நான்குபேர் வரை இதில் பிரயாணம் செய்யலாம். வண்டியில் உட்கார்ந்திருப்பவர்களில் ஒருவர் சுக்காணைப் பிடித்துக்கொள்ளவேண்டும். சுக்கான் என்பது ஒரு நீளமான இரும்புக் கம்பி. எந்தப் பக்கம் போகவேண்டுமோ அந்தப் பக்கமாக இந்தச் சுக்காணைத் திருப்பவேண்டும்.

வண்டியின் பின்னாலிருந்து வண்டியைத் தள்ளுகிற மனிதனுக்கு வீதியில் வருபவர்களைத் தெரியாது. வண்டியில் உட்கார்ந்திருப்பவர்தான் மணியடித்தோ, சத்தம்

செய்தோ வீதியில் போகிற ஜனங்களை விலக்கவேண்டும். வண்டியை நிறுத்த வேண்டுமானால், வண்டியைத் தள்ளு கிறவனிடம்தான் கூறவேண்டும். பல சமயங்களில் வண் டியில் இருப்பவர்கள் சொல்லுவது வண்டியைத் தள்ளு கிறவனுக்குக் கேட்காமல் போய்விடும்; வண்டியிலிருப்ப வர் நிறுத்தும்படி கூறினால், வண்டியைத் தள்ளுகிறவன் விஷயம் தெரியாமல் வண்டியை வெகு வேகமாகத் தள்ளு வான். இதனால் பல விபத்துக்கள் ஏற்படுவதுண்டு. பொதுவாக வண்டியைத் தள்ளுகிறவனைவிட, வண்டியில் உட்கார்ந்து சுக்கானைப்பிடிப்பவர்களுக்குத்தான் அபாயம் அதிகம். நல்லகாலமாக இந்தப் 'புஷ்புஷ்' வண்டிகள் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தைப் போல மறைந்து விட்டன.

புதுச்சேரியில் நூற்றுக்கணக்கான ரிக்ஷாக்கள் இருந்தன. சென்னை ரிக்ஷாக்களை விட இவை மிகவும் சௌகரியமானவை. இரண்டு பேர் தாராளமாக உட் காரலாம். சில சமயங்களில் அரையணாவுக்கு ரிக்ஷா சவாரிசெய்யலாம். இந்தியாவின் நாணயம் புதுச்சேரியில் செலாவணியாகும். ஆனால் புதுச்சேரியில் வழங்கப்பெற்ற பிரெஞ்சுத் திட்டுகளுக்கான நோட்டுகளுக்குஇந்தியாவில் மதிப்பில்லை. பிரெஞ்சுத் திட்டுகளுக்காக, சைகோனில் உள்ள இந்தோசீனா பாங்கி நோட்டுகள் வெளியிட்டது. பிரெஞ்சுத் திட்டுகளுக்கும் இந்தோ சீனாவுக்கும் எவ் விதத் தொடர்பும் போக்குவரத்தும் கிடையாது என்றா லும், இந்தோ சீனா பாங்கி வெளியிட்ட நோட்டுகள் பிரெஞ்சுத் திட்டுகளில் செலாவணியாகிக் கொண்டி ருந்தன.

புதுச்சேரி நகரத்தை இரண்டாகப் பிரிக்கலாம். முத லாவது, சமுத்திரக் கரையை அடுத்து ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதி. இரண்டாவது, இந்தியர்கள் வசிக்கும்

பகுதி. ஐரோப்பியர்கள் வசிக்கும் பகுதி மிகச் சுத்தமாக இருக்கும், இப் பகுதியில் பல இந்தியர்கள் வசித்து வந்தார்கள். இந்தியர்களே வசிக்கும் மற்றப் பகுதி சிறிது சுகாதாரக் குறைவாக இருக்கும்.

புதுச்சேரியிலுள்ள புதுமைகளில் ஒன்று, வீதிகள் கோணலே இல்லாமல் நேராக இருப்பது. வீதிகளின் இருமருங்கிலும் திறந்த சாக்கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. வீதியிலிருந்து வீட்டுக்குச் செல்வதென்றுல் இந்தச் சாக்கடையைத் தாண்டித்தான் செல்லவேண்டும்,

புதுச்சேரியின் மற்ருெரு புதுமை, கண்ணுடி மாளிகை. கட்டிடம் சிறிது. எங்கும் கண்ணுடிச் சுவர்கள்; எல்லாம் கண்ணுடி. மேலே பார்த்தால் கண்ணுடி. பார்க்குமிடங்களிலெல்லாம் உங்களுடைய திருவுருவம்தான் உங்களுக்குக் காட்சியளிக்கும். சில கண்ணுடிகளில் பார்த்தால் உங்கள் உருவம் பல மடங்கு பெரிதாகத் தோன்றும். சிலவற்றில் உங்கள் உருவம் மிக நீளமாகத் தோன்றும். இந்தக் கண்ணுடி மாளிகை பார்க்க மிக அழகானது. ஆனுல் வசிப்பதற்குச் சிறிதும் உபயோகமில்லாதது.

புதுச்சேரி ஒரு துறைமுகம். ஒரு காலத்தில் ஏராளமான கப்பல்கள் இங்கே வந்தன. இத் துறைமுகத்தில் இறக்கப்படும் சாமான்களுக்குச் சுங்கவரி கிடையாது. ஏனவே பிரான்சிலிருந்துவந்த பட்டு வாசனைத்திரவியம் முதலிய பலபொருள்கள் இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைத்தன. குடிவகைகள் மிக மிக மலிவு. ஒரு காலத்தில் புதுச்சேரி, குடியர்களின் சுவர்க்கமாக விளங்கியது,

புதுச்சேரி துறைமுகமாயிருந்த போதிலும், கப்பல் கரையோரத்தில் வந்து நிற்பதில்லை. கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் நங்கூரம் போட்டு நிற்கும். கரையிலிருந்து சுமார் கால் மைல் நீளம் சமுத்திரத்தில் பாலம் கட்டியிருந்தார்கள், இப்பாலத்தின் கோடியி

லிருந்து, படகுகள் மூலமாகக் கப்பலுக்குச் செல்லவேண்டும். நீளமான இப் பாலத்தின் இரு ஓரங்களிலும் சாய்வு பெஞ்சுகள் போடப் பெற்றிருந்தன, புதுவைவாசிகள் பலர், மாலை நேரங்களில் இங்கு வந்து சமுத்திரக் காற்றை ஆனந்தமாக அனுபவிப்பார்கள்.

கடற்கறையிலே அழகான பூங்கா ஒன்றிருந்தது. இந்துக்களின் விக்கிரகங்கள் சில இந்தப் பூங்காவிலே அழகுப்பொருள்களாக வைக்கப்பெற்றிருந்தன. 'டூப்ளே' என்னும் பிரெஞ்சுக்காரனின் உருவச் சிலையும் இங்கு வைக்கப் பெற்றிருந்தது.

புதுச்சேரியில் வீதிகளின் பெயர், பிரெஞ்சு, தமிழ் ஆகிய இரு மொழிகளில் எழுதப் பெற்றிருக்கும். இந்தியாவில் தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசுவது போல, புதுவையில் தமிழும் பிரெஞ்சும கலந்து பேசுவார்கள்.

சம்பா கோயில் எங்கே இருக்கிறதென்று கேட்டால் ஒரு பெரிய மாதா கோயிலைக் காட்டுவார்கள். ஆதியில் இது சம்பதீசுவரர் என்னும் மூர்த்தியைக் கொண்ட இந்து மதக் கோயிலாம். இப்பொழுதுகூட இந்த மாதா கோயிலில் சிலுவைக்குப் பின்னால் லிங்கம் இருப்பதாகக் கூறுவார்கள்.

அரசியல் தொந்தரவுகளுக்காக புதுச்சேரியில் வசித்தவர்கள் பலர். அவர்களில் அரவிந்த கோஷ், வ. வே. சு. ஐயர், மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆகிய பெரியோர் முக்கியமானவர்.

ஸ்ரீ அரவிந்த ஆசிரமம் புதுச்சேரியில் குறிப்பிடத் தக்க இடம்.

---

# தரங்கம்பாடி

மாயவரத்திலிருந்து சுமார் பதினெட்டு மைல் தூரத்திலுள்ளது தரங்கம்பாடி. ஆடி அசைந்து செல்லும் ரயிலில், இரண்டே முக்கால் மணி நேரத்தில் தரங்கம்பாடி ரயில் நிலையத்தை அடைவோம்.

ரயில் நிலையத்திலிருந்து அரை மைல் தூரத்தில் பெரிய கோட்டை. இக்கோட்டைக்குள் இருக்கும் ஊர் தான் தரங்கம்பாடி. கோட்டையை அடைவதற்குள் இரண்டு ஆறுகளைக் கடக்கவேண்டும். ஒன்று உப்பனாறு. பெயரிலிருந்தே தண்ணீர் எப்படி இருக்கும் என்பதை அறியலாம். மற்றொன்று பக்கிங்ஹாம் கால்வாய். சென்னை யில் இருக்கிறதே, அதே துர்நாற்றம் நிறைந்த பக்கிங் ஹாம் கால்வாய்தான் இது. இந்த இரண்டு ஆறுகளும் தரங்கம்பாடிக்கு அருகே சங்கமம் ஆயின.

கோட்டைக்குள்ளே ஒரு கோட்டை, குறுக்கிலும் நெடுக்கிலும் ஓடும் அழகான வீதிகள், பாழடைந்த பெரிய கட்டிடங்கள், ஒரு மசூதி, இரண்டு கோயில்கள், மூன்று கிறிஸ்தவ ஆலயங்கள், சுமார் ஐந்நூறு வீடுகள், இவை தான் தரங்கம்பாடி.

முதன் முதலாக இந்த ஊரைச் சீர்படுத்தி அரசாண்டது டேனிஷ்காரர்கள். அந்தக் காலத்தில் கட்டப்பெற்ற பிரமாண்டமான கட்டிடங்களில் சில நல்ல நிலைமையில் உள்ளன. அந்தக் கட்டிடங்களில் டென்மார்க்கின் சிற்பங்களைக் காணலாம். பதினெட்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மானியப் பாதிரிகள் இங்கே வந்தார்கள். இன்றும் அவர்களுடைய பள்ளிக்கூடங்களைக் காணலாம்.

ராஜா வீதி, ராணி வீதி, அட்மிரல் வீதி, பிரின்ஸ் வார்கன் முதலியன வீதிகளின் பெயர்கள். இந்தக் கோட்டை நகருக்கு மூன்றுபுறங்களில்தான் வாயில்கள். ஒருபுறம் துறைமுகம். துறைமுகத்தின் அருகில் சிறிய கோட்டை. இந்தச் சிறிய கோட்டைக் கருகே பெரிய மைதானத்தின் மறுபுறத்திலிருந்த நீதிபதியின் மாளிகை இப்பொழுது நாடார் மாளிகையாகி விட்டது.

தரங்கம்பாடியில் பொதுவாக, ஓய்வுபெற்று உபகாரச் சம்பளம் வாங்குபவர்களும், செம்படவர்களும்தான் அதி கம். இந்தச் செம்படவர்கள் கோட்டைக்கருகே வசித்தார் கள். மீன் பிடிப்பதிலும் சுருட்டுப் பிடிப்பதிலும் இவர்கள் கெட்டிக்காரர்கள். இவர்கள் வசிக்கும் குடிசைகள் நிறைந்த இடத்தைப் பட்டணம் என்றும், இவர்களைப் பட்டணத்தார் என்றும் கூறுவார்கள்.

இந்தப் பட்டணத்தாரின் ஜனத்தொகை சுமார் ஆயி ரம். இங்கே ஒரு பள்ளிக்கூடமும் ஒரு கோயிலும் உண்டு.

பட்டணத்தாரின் கல்யாணமே அலாதியானது. கல்யாணத்தில் மாப்பிள்ளையையும் பெண்ணையும் விடப் புரோகிதருக்குத்தான் கஷ்டம் அதிகம். மணமகளுக்குத் தாலி கட்டி முடிந்ததும், மணமகன் கையையும் மணமகள் கையையும் ஒன்ருகச்சேர்த்து வைக்கவேண்டியவர் புரோ கிதர். மணப் பெண் கையைப் பின்புறமாக வைத்துக் கொள்வாள். புரோகிதர் பலவந்தமாகப் பெண்ணின் கையைப் பிடித்து மாப்பிள்ளையின் கையோடு சேர்க்க வேண்டும்.

அம்மி மிதித்தல் ஒரு சடங்கு. மாப்பிள்ளை பெண் ணின் காலைத் தூக்கி அம்மியின் மீது வைக்கவேண்டும். கல்யாண வீட்டிலுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் இதில் சண்டை வந்துவிடும். ‘தூக்கி வை’ என்பார்கள் பெண்கள். ‘தூக்காதே’ என்பார்கள் ஆண்கள்.

'தூக்கி வை' 'தூக்காதே' 'தூக்கி வை' 'தூக்காதே' என்ற பெரும் இரைச்சல் உண்டாகும். சில சமயங்களில் புரோகிதரே பெண்ணின் காலைத் தூக்கிவைக்க நேரிடும். இவ்வளவு கஷ்டப்பட்டும் புரோகிதருக்குக் கிடைப்பது ஏழு ரூபாய்தான்!

வாழ்ந்து முறிந்துபோன ஊர் தரங்கம்பாடி. ஒரு காலத்திலே தரங்கம்பாடித் திராட்சை மிகப் பேர்பெற்று இருந்தது. இப்போது மருந்துக்குக்கூட ஒன்றைப் பார்ப்பது கஷ்டம்.

பரம்பரையாகச் சிற்றுண்டிச்சாலை நடத்தும் ஐயர் ஒருவர் இருந்தார். இவர் பழைய காலத்து 'மெட்ரிக்குலேஷன்.' இவருடைய பலகாரத்தைவிட, பேச்சு இனிமையாக இருக்கும்.

தென்னிந்தியாவில் உள்ள சிறந்த சுகவாச ஸ்தலங்களில் தரங்கம்பாடி குறிப்பிடத்தக்கது. வெயில் காலத்தில் இங்கு நல்ல ஆரோக்கியமான காற்று வீசும். இவ்வூர் மக்களின் ஏழ்மை, சுகவாசிகளின் செலவைக் குறைத்தது.

சமுத்திரக் கரையின் ஓரத்திலுள்ள மணற்பரப்பில் அருமையான ஊற்று நீர் கிடைக்கும்.

மாசிலாமணி கோயில் சமுத்திரக்கரை யோரத்தில் இருந்தது. கொஞ்ச காலத்தில் கோயிலும் சமுத்திரமும் ஒன்றுகிவிடலாம். மாசிலாமணி சுவாமிக்கு நூற்றுக் கணக்கான வேலி நிலமிருந்தும், அவரைக் கவனிப்பார் யாருமில்லை.

தரங்கம்பாடியைப் பற்றி நினைக்கும்பொழுது, கொம்பில்லாத மாடுகளும், கூரையில்லாத வீடுகளுமே ஞாபகத்துக்கு வருகின்றன.

# குமரி முனை

'நீலத்திரைக்கட லோரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி'யைத் தரிசிப்பதற்காக, சென்னையிலிருந்து பிரயாணமானேன்.

சென்னையிலிருந்து 'திருவனந்தபுரம் – எக்ஸ்பிரஸ்' ரயிலில் புறப்பட்டபொழுது, எஞ்ஜினைத் தவிர, பத்துப் பெட்டிகளுக்கு மேல் இணைக்கப்பட்டிருந்தன. 512 மைல் பிரயாணத்துக்கப்பால், திருவனந்தபுரத்தை அடைந்த பொழுது எஞ்ஜினைத் தவிர நான்கு பெட்டிகள் தான் மிச்சம்.

திருவனந்தபுரம் ரயில் நிலையத்தின் மேல் மாடியில் பிரயாணிகள் தங்குவதற்காகச் சிறந்த முறையில் சௌகரியங்கள் செய்திருந்தார்கள். நிலையத்திற்கு எதிரே மிக அழகான பூங்கா ஒன்று அமைத்திருந்தார்கள். என் அருகே நின்ற வேலைக்காரன் அந்தப் பூங்கா அமைக்கப் பெற்ற வரலாற்றைக் கூறினான்.

பூங்கா அமைப்பதற்கு முன் அந்த இடம் மைதான மாக இருந்ததாம். சமஸ்தானக் காங்கிரஸ்காரர்கள் அடிக்கடி இங்கே பொதுக்கூட்டங்கள் நடத்திக் கிளர்ச்சி செய்வார்களாம். இந்தக் காங்கிரஸ்காரர்களின் கூட்டங் களைத் தடுப்பதற்காகவே அந்த மைதானத்தை அந்தக் கால அரசாங்கத்தார் அழகான பூங்காவாக மாற்றி அமைத்தனராம்.

திருவனந்தபுரத்தில் தங்கிய இரண்டு நாட்களில் மூன்று இடங்கள் என் மனத்தைக் கவர்ந்தன. முதலா வது ஸ்ரீ பத்மநாப சுவாமியின் ஆலயம்; மற்றவை சித்திரசாலை, மீன் காட்சிசாலை.

உள்ளத்தைக் கவரும் ஓவியங்கள் நிறைந்தது திருவனந்தபுரம் சித்திரசாலை. ராஜா ரவிவர்மாவின் உயிர் ஓவியங்களை அங்கே நாள் முழுவதும் பார்த்து ரசிக்கலாம்.

கீழ்நாடுகளிலேயே மிகச் சிறந்த மீன் காட்சிசாலை திருவனந்தபுரத்தில் உள்ளதுதான் என்று கூறுவர்.

திருவாங்கூரில் அந்தக் கால நாணயம் என்ன தெரியுமா? சக்கரம் என்பதுதான். ஒரு ரூபாய்க்கு இருபத்தெட்டு சக்கரம். ஒரு சக்கரத்துக்குக் காப்பி சாப்பிடலாம். அரைச் சக்கரத்துக்குத் தேநீர் சாப்பிடலாம். சில இடங்களில் ஒரு சக்கரத்துக்குத் திரைப் படம் கூடப் பார்க்கலாம்.

திருவனந்தபுரத்திலிருந்து இயற்கை எழில் நிறைந்த சாலை வழியாக, நாற்பது மைல் தூரத்திலிருக்கிறது நாகர்கோயில். இவ்வூர்க்கோயில் ஒரு காலத்தில் ஜைனர்கள் வசமிருந்ததாம். நாகர்கோயிலை வைத்தியசாலைகள் நிறைந்த நகரம் என்றும் கூறலாம். எங்கு நோக்கினலும் வைத்தியசாலைகள்; பெரும்பாலும் கிறிஸ்தவச் சங்க வைத்தியசாலைகள்.

இந்த நகருக்கு அருகேயுள்ள புத்தேரி என்னும் சிற்றூரில் தமிழ்க் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. கவிமணியவர்களுடைய மாசற்ற அன்பும், அடக்கம் நிறைந்த பேச்சும், மனமுவந்த உபசரிப்பும் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன.

கவிமணியவர்களின் பாடல்களைத் தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் நன்கறிவார்கள். குழந்தைகளும் புரிந்து கொள்ளும்படியான எளிய நடையில் பாக்கள் இயற்றுவதிலே பிள்ளையவர்கள் மிகமிகச் சிறந்தவர்கள்.

நாகர்கோயிலிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலிருக்கிறது கன்யாகுமரி. முப்புறமும் கடல் சூழ்ந்த குமரி முனையில் நின்று எப்பக்கம் திரும்பினும் ஓர் இனிய உணர்ச்சி எழும்.

"அதோ, அங்கே இருக்கும் பாறைக்கு நீந்திச் சென்று அதன் மீதுதான் சுவாமி விவேகாநந்தர் தவம் செய்தார். இங்கேதான் மகாத்மா நீராடினார். பழம் பெருமை கொண்ட எனது தாய்நாட்டின் எல்லை இது" என்று நினைக்கும்பொழுது, எந்த இந்தியன்தான் மனப் பூரிப்படையாமல் இருக்கமுடியும்?

கன்யாகுமரி மூன்று அல்லது நான்கு ஆயிரம் ஜனத் தொகை கொண்ட சிறு கிராமம். குமரி முனையிலே ஒரு மண்டபம் உண்டு. மண்டபத்திலிருந்து இறங்கி சௌ கரியமாக நீராடுவதற்கு வசதிகள் செய்திருந்தார்கள்.

மண்டபத்திலிருந்து பார்த்தால் சூரிய உதயமும் சூரிய அஸ்தமனமும் தெரியும். மண்டபத்துக்கு அருகேயுள்ள கடற்கரையில் பல நிற மணல் வகைகளைக் காணலாம். வானவில்லில் எத்தனை வர்ணங்கள் உண்டோ, அத்தனை வர்ணங்களை இம்மணல் வகைகளில் காணலாம். கடற்கரையின் ஓரத்தில் திருவாங்கூர் மகாராஜாவின் மாளிகை, 'முசாபரிபங்களா' 'கேப் ஹோட்டல்' முதலிய கட்டிடங்கள் காணப்பெற்றன. இவை தவிர ஏராளமான சத்திரங்களும் அங்கே உண்டு.

ஊருக்குமத்தியிலே விவேகாநந்த வாசகசாலை ஒன்று இருந்தது. கன்யாகுமரிக்கு வரும் யாத்திரிகர்கள் கொடுக்கும் அன்பளிப்புப் பணத்தைக் கொண்டுதான் இதை அபிவிருத்தி செய்து வந்ததாக அறிந்தேன். சுவாமி விவேகாநந்தரின் பெயரால் இவ்வாசகசாலை அமைக்கப் பெற்றிருப்பதால் இங்கே வருகிற வங்காளிகள் நிறையப் பொருளுதவி செய்வார்களாம்.

காந்தியடிகள் ஒரு முறை இவ்வாசகசாலைக்குவிஜயம் செய்தார்கள். அவ்வரலாற்றை வாசகசாலைக் காரியதரிசி பின் வருமாறு கூறினர்:- "காந்திஜியை எங்கள் வாசக சாலைக்கு விஜயம் செய்யும்படிக் கேட்டுக்கொண்டோம். மறுநாள் காலையில் உலாவச் செல்லும்போது வருவதாக வாக்களித்தார். எங்கள் வாசகசாலைக்கு அடுத்த கட்டிடம் 'விவேகாநந்தா காப்பிக் கிளப்' காந்திஜி தவறுதலாகக் 'காப்பிக் கிளப்'புக்குள் நுழைந்து விட்டார். 'காப்பிக் கிளப்'புக்காரருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'காந்திஜி ஆட்டுப் பால்தானே சாப்பிடுவார்; காப்பி சாப் பிடமாட்டாரே' என்று யோசிக்க ஆரம்பித்தார். அதற் குள்ளாக, காந்திஜி 'காப்பிக் கிளப்'பை விட்டு வெளியே வந்து வாசகசாலையை அடைந்தார்."

விவேகாநந்த வாசகசாலைக்கு யார் சென்றாலும் இந்த வரலாற்றை அந்த வாசகசாலையினர் கூறுவர்.

817

# குமரி மலர்

மாதப் பத்திரிகை

ஆசிரியர் : ஏ. கே. செட்டியார்

தனிப் பிரதி : விலை அணு எட்டு.

வருடச் சந்தா ரூபாய் ஆறு.

*[ Approved by the Education Department, Government of Madras for use in Educational Institutions and Public Libraries. Vide Memo No. 25957 E/532 Education dated 10—8—53. ]*

# உலகம் சுற்றும் தமிழன்

ஏ. கே. செட்டியார்

மாணவர் பதிப்பு : விலை அணு பன்னிரண்டு.

*[ Approved by the Text-Book Committee, Madras for Class use-Non-detailed study in Secondary and High Schools including Training Schools-Vide page-29 of the Supplements to Part 1-B to the Fort St. George Gazette No 18-C dated 4th May, 1955. ]*

---


## குமரி மலர் காரியாலயம்

தபால் பெட்டி எண் 1455

சென்னை — 18

சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.